பக்கங்கள்: 20 விலை: 30.00

# தீம்புனல் THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:05 29.05.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052





**இஸ்ரேல்–ஹமாஸ் போரில் வென்றது அமெரிக்காவா? ஈரானா?**

பக்கம் 02


NORTH EAST ECONOMIC DELOPMENT ORGANIZATION

BUILD THE NATION TOGETHER





த.விஜயசங்கர்

# இலாபக் கணக்கு: இலங்கையின் தப்புக்கணக்கு

இலங்கையில் சீனர்களின் ஆதிக்கம் அதிகரித்து வருவது தொடர்பில் சமூகத்தில் சாதாரண மக்களில் இருந்து படித்தறிந்த மக்கள் வரையில் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். அண்மைக்காலமாக சீனா தொடர்பாக தொடர்ச்சியாக வெளிவரும் செய்திகளே இவ்வாறு மக்கள் பேசுவதற்குக் காரணமாயிருக்கின்றது. போட் சிற்றி விவகாரம் தொடக்கம் வீதிப் பெயர்ப் பலகையில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு சீன மொழி பயன்படுத்தப்பட்ட வரையில் பல்வேறு சர்ச்சைகள் சமூக மட்டத்தில் எழத் தொடங்கியிருக்கின்றன. கொழும்பு மையங்களில் சீன மக்களின் அதிகரித்த பிரவேசங்களும் சீனர்களின் குடியிருப்புக்களில் அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அதிசெல்வாக்குடைய சலுகைகளும் காலப் போக்கில் இலங்கை சீனாவின் மாகாணங்களில் ஒன்றாக மாறிவிடக்கூடிய ஆபத்து இருப்பதாக சில அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

'தமிழர்கள் போராடிக் கேட்ட தனிநாட்டைக் கொடுக்காத அரசு எந்தவகையான போராட்டமும் இன்றி சீனாவுக்கு வழங்கியிருக்கின்றது, இது சீன ஈழம்" என்று சிங்கள அரசியல் வாதிகள் சொல்லும் அளவில், நிலைமை மோசமானது என்பது வெளிப்படை. தமிழர்களுக்கு அதிகளவில் அதிகாரங்கள் போய்ச் சேர்ந்துவிடும் என்ற அச்சமே இலங்கையிலுள்ள அனைத்து மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை அரசு வழங்க மறுப்பதற்குக் காரணம் ஆகும். தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்தால் நாட்டின் இறைமை பாதிக்கப்பட்டுவிடும் என்று கருதும் இதே சிங்கள அரசுதான் சீனாவுக்கு அதிகளவு அதிகாரங்களை போட் சிற்றி என்ற துறைமுக நகரத்தின் ஊடாக வழங்கியிருக்கிறது.

75 % ஆன இலங்கையர்களுக்கு போட் சிற்றி துறைமுக நகரத்தில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தர பேசி வருதாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் பிரதமர் தெரிவித்திருந்தமை, துறைமுகம் தொடர்பில்

▶ 19

> **கடந்த நூற்றாண்டுகளில் வியாபாரம் செய்ய வந்தவர்களால் இலங்கை எவ்வாறு ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது என்பதன் வரலாற்று அனுபவத்தினை கவனத்தில் எடுக்கவேண்டும். பொருட்களை களஞ்சியப்படுத்தவென கடற்கரையோரத்தில் சிறு இடம் கேட்டவர்கள் நாட்டின் முழுப்பகுதியையும் எவ்வாறு தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார்கள் என்பதனை மீள ஒருதடைவை நினைவில் கொண்டுவருதல் வேண்டும்.**

ஏகன் அனேகன்

உலக சனத்தொகையில் கிட்டத்தட்ட 1/5 பங்கினருக்கே தடுப்பூசி கிடைத்துள்ளது. 100 பேரில் 20 பேருக்கே தடுப்பூசி ஏற்றபட்டுள்ளது. 780 கோடி சனத்தொகையில் 167 கோடி மக்களே கொரோனா தடுப்பூசி பெற்றுள்ளனர். இவ்வாறான புள்ளி விபரம் சமத்துவம் மிக்கதல்ல. குத்தப்பட்ட தடுப்பூசிகளை உலக சனத்தொகையால் வகுத்துக் கூறுப்படுவதே இப்புள்ளிவிபரம்.

WWW.Statista.com எனும் நம்பகத்தன்மையான இணையத்தளத்தின் புள்ளிவிபரப்படி உலகின் 30 நாடுகளிலேயே 50% ஆன சனத்தொகைக்கு தடுப்பூசி கிடைத்துள்ளது.

இஸ்ரேல், பிரிட்டன், அமெரிக்கா, கனடா ஐக்கிய அரபு எமிரேற், பஹ்ரைன், கட்டார், பூட்டான், மாலைதீவுகள், மோல்ரா, ஹங்கேரி உள்ளிட்ட கிட்டத்தட்ட 30 நாடுகளே தனது 50% ஆன சனத்தொகைக்கு தடுப்பூசி கொடுத்துள்ளன!

உலகின் மொத்தச் சனத்தொகையில் பல்வேறு கண்டங்களில் வாழும் மக்கள் இவ்வாறு பரவிக் காணப்படுகின்றனர்.

போட்டி முதலியவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆசியாவின் 456 கோடி மக்களில்

> **உலகப் பொருளாதாரம் ஈடாடிப்போயுள்ளது. உலக நாடுகள் மேலும் மேலும் பெருந்தொற்றினால் வர்த்தக ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கத் தரப்பு எதிர்பார்க்கும் அட்டவணையின் படி தடுப்பூசிகள் வந்து சேர்வதில் உலகில் தடுப்பூசிகளுக்கு நிலவும் அதிகரித்த பிரமாண்டமான கேள்வி தடையாக உள்ளது.**



# கொரோனா தடுப்பூசி: இலங்கை சந்திக்கும் சவால்கள்!

| கண்டம் | மொத்த சனத்தொகை |
|---|---|
| 01. ஆசியா | 456 கோடி |
| 02. ஆபிரிக்கா | 134 கோடி |
| 03. ஐரோப்பா | 75 கோடி |
| 04. வடஅமெரிக்கா | 38 கோடி |
| 05. தென் அமெரிக்கா | 44 கோடி |
| 06. அவுஸ்ரேலியா | 2.5 கோடி |

இச் சனத்தொகையில் ஆபிரிக்கா, தென் அமெரிக்கா கண்டங்களில் வாழும் மக்களில் (178 கோடி மக்களில்) கொரோனா தடுப்பூசி குத்தப்பட்டவர்கள் மிக மிகச் சிறு அற்பத் தொகையினரே! ஆபிரிக்கா கண்டம், தென் அமெரிக்கா கண்டம் ஆகியவற்றில் உள்ள 90% ஆன நாடுகளிலும் கொவிட்- 19 தொடர்பான விழிப்புணர்வு மக்களிடமும் ஆட்சியாளர்களிடமும் இல்லை. ஏற்கனவே இந் நாடுகள் வறுமை, பட்டினி, எய்ட்ஸ் நோய், போதைப் பொருள், அதிகாரப்

சீனாவின் 144 கோடி மக்கள் உள்நாட்டுத் தயாரிப்பான பல்வேறு தடுப்பூசிகளையும் பெறக் கூடிய நிலை உள்ளது. விரைவில் 50% க்கும் அதிகமான சீன மக்கள் தடுப்பூசிகளை பெற்றுவிடுவர். சீன அரசியல் முறைமை கொம்மியூனிஸக் கட்டுப்பாடுகளுடன் கூடிய இறுக்கமான நிர்வாக முகாமைத்துவத்தினைக் கொண்டிருப்பதனால் அங்கு கொரோனா முகாமைத்துவம் சிறப்பாக நடைபெறுகிறது என்பதை வெளித்தெரியும் ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன.

ஆசியாவின் 456 கோடி மக்களில் 139 கோடி சனத்தொகையையுடைய இந்தியா, கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதில் ஏறத்தாழ தோல்வியடைந்துவிட்டது. அங்கு தினசரி தொற்றுக்களும் சாவுகளும் அதிகரிக்கிறது. இந்தியாவில் 27.05.2021 (வியாழன்) உத்தியோக பூர்வ

▶ 19

'பேசாப் பொருளையும் பேசும் குரல்'



பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்

# இஸ்ரேல்–ஹமாஸ் போரில் வென்றது அமெரிக்காவா? ஈரானா?

இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தம் கடந்த *21.05.2021* சாத்தியமாகியது. ஏறக்குறைய 11 நாள் போர் முடிவுக்கு வந்துள்ளது. நடந்து முடிந்த போர் இரு தரப்பையும் பாரியளவில் பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது. அதிலும் பலஸ்தீன தரப்பே அதிக இழப்பினை எதிர் கொண்டிருந்தது. கொல்லப்பட்ட மக்களது எண்ணிக்கையை மட்டுமல்ல சொத்திழப்பு அகதி வாழ்வு இயல்பு வாழ்க்கையின் போக்குகள் என பல விடயங்களில் பலஸ்தீன மக்களும் பிரதேசமும் அதிக இழப்புக்களை எதிர் கொண்டுள்ளன. இத்தகைய இழப்பினை சரிசெய்ய உலக நாடுகள் முன்வந்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபையும் மனிதாபிமான அமைப்புக்களும் அத்தகைய உதவிகளை மேற்கொள்ள ஆர்வமாக உள்ளதுடன் உதவித்திட்டத்துடன் காஸா நோக்கி ஐ.நா வின் காவு வண்டிகள் பயணமாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் நடந்து முடிந்த போரில் இரு தரப்பும் தாமே வெற்றி பெற்றதாக அறிவித்துவருகின்றன. இக் கட்டுரையும் இப்போரில் எந்த தரப்பு வெற்றி பெற்றுள்ளது என்பதை தேடுவதாக அமையவுள்ளது.

முதலாவது, இஸ்ரேலிய பிரதமர் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு சென்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது நடந்து முடிந்த போரில் தாம் வெற்றி பெற்றுள்ளதாகவும் அத்தகைய வெற்றி ஹமாஸ் அமைப்புக்கே தெரியாது என்றும் தாம் போரின் இலக்கை அடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். அதே நேரம் ஹமாஸ் அமைப்பு ஏவிய எறிகணைகளில் 90 சதவீதமானவற்றை தமது எதிர்ப்பு ஆயுதம் மூலம் அழித்துள்ளதாகவும் ஹமாஸ் அமைப்பின் ஆயுத உற்பத்தி நிலையம் அழிக்கப்பட்டதாவும் சிரேஸ்ட தளபதிகள் உட்பட 200 ஹமாஸ் அமைப்பினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்த அவர் ஹமாஸ் அமைப்பின் சுரங்கப் பாதை முழுமையாக தகர்த்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

> **ஹமாஸ் அமைப்பு இந்த போர் வரலாற்று வெற்றி எனவும் தாம் ஏவிய ஏவுகணைகள் அனேகமானவை இஸ்ரேலின் நகரங்களை தாக்கியுள்ளதாகவும் அதனால் ஏற்பட்ட சேதங்கள் அதிக மானவை எனவும் இஸ்ரேல் இலக் கினை அடையமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.**

இரண்டாவது, ஹமாஸ் அமைப்பு இந்த போர் வரலாற்று வெற்றி எனவும் தாம் ஏவிய ஏவுகணைகள் அனேகமானவை இஸ்ரேலின் நகரங்களை தாக்கியுள்ளதாகவும் அதனால் ஏற்பட்ட சேதங்கள் அதிகமானவை எனவும் இஸ்ரேல் இலக்கினை அடைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. மேலும் அவ்வமைப்பின் அறிக்கையொன்றில் இஸ்ரேலியப் பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கியிருப்பதுடன் இஸ்ரேல் கைப்பற்றிய நிலங்கள் மற்றும் யூதர்களது குடியிருப்புக்கள் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதாகவும் அச்சத்தால் யூதர்கள் முதல் தடவையாக அச்சத்துடன் காணப்பட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த இரு தரப்பினரது வெளிப்பாடுகளை ஹமாஸ் அமைப்பால் அவதானித்தால் இவர்கள் போரின் இழப்பீடுகளைக் கொண்டு போரின் வெற்றிகளை மதிப்பிடுகின்றனர் என்பது தெரிய வருகின்றது. அதனையும் தமக்கு சார்பான முடிவுகளை முன்வைத்தே இரு தரப்பும் வெற்றிகளைஅளவீடு செய்கின்றனர் என்பது வெளிப்படை. ஆனால் இரு தரப்பினதும் வெற்றியை இரு தரப்பும் அடைந்த விளைவுகளைக் கொண்டே அளவீடு செய்தல் பொருத்தமானதாக அமையும்.

முதலாவது, இந்த போர் ஏன் *11* நாட்கள் நீடித்தது என்பது பிரதான கேள்வியாகும். அதாவது ஏதாவது ஒரு தரப்பு பலவீனமானதாக அமைந்திருக்குமாயின் இலகுவில் போர் முடிந்திருக்கும். அதனால் இரு தரப்புமே சமவலுவுடன் போரை எதிர் கொண்டிருந்தன என்பது தெளிவாகிறது. வரலாற்றில் அதிக திருப்பங்களை இஸ்ரேலுக்கு ஏற்படுத்திய **1967** ஆம் ஆண்டு போர் கூட ஆறு நாட்களில் முடிந்தது. **13**ற்கு மேற்பட்ட அரபு நாடுகள் அந்த போரில் ஈடுபட்ட போதும் யூதர்கள் வெற்றி பெற்றார்கள். ஆனால் நடந்து முடிந்த போரை அவ்வாறு இஸ்ரேலால் முடிக்க முடியவில்லை என்பது ஹமாஸின் பக்கம் வலுவான தாக்குதல் உத்தியும் திட்டமிடலும் அமைந்திருந்தது என்பதைக் காட்டுகிறது. அமெரிக்க ஜனாதிபதிக்கும் இஸ்ரேல் பிரதமருக்குமான உரையாடல் ஒன்றில் மூன்று நாட்களில் இந்தப் போரை முடிப்பதாக இஸ்ரேல் அமெரிக்காவுக்கு உறுதியளித்திருந்ததாக தகவல்கள் உண்டு. அப்படியாயின் யூதர்கள் உரிய இலக்கை அடையமுடியவில்லை என்பதே போர் நீடித்ததற்கு காரணமாக தெரிகிறது.

இரண்டாவது, இந்தப் போரில் இஸ்ரேல் தரப்பின் பிரதான இலக்காக ஹமாஸின் போராளிகளும் அவர்களது மெற்றே என்று அழைக்கப்பட்ட சுரங்கப் பாதையுமாகும். அதற்கான திட்டமிடலுடனேயே யூதப் படைகள் போரைத் தொடக்கியிருந்தன. யூதர்கள் போரைத் தொடக்கும் போது ஒரு உத்தியுடனேயே ஆரம்பிப்பது வழமையாகும். ஒவ்வொரு போரும் அவ்வாறானதே. அதே போன்றே இந்த போரையும் தொடக்கும் போது ஹமாஸ் அமைப்பினை ஏமாற்றுவதற்காக தரைப்படை நகர்வை மேற்கொள்ள இஸ்ரேலியப் படைகள் ஆயத்தமாவது போல் காஸா எல்லை நோக்கி பாரிய வாகன அணிவகுப்பினையும் சிறிய அளவிலான படைகளையும் நகர்த்தினர். ஹமாஸ் தனது படைகளைப் பாதுகாக்க மெற்றோ என அழைக்கப்பட்ட சுரங்கபாதைக்குள் குவிக்கும் எனவும் அப்போது விமானத் தாக்குதலை மெற்றே நோக்கி மேற்கொள்வதெனவும் இஸ்ரேல் திட்டமிட்டது. ஆனால் ஹமாஸ் இஸ்ரேலின் திட்டத்தை முன்கூட்டியே அறிந்து கொண்டு எந்தவித நகர்வையும் செய்யாது தரையிலேயே தனது படைகளை வைத்திருந்தது. ஆனால் இஸ்ரேல் தரை நகர்வை அப்படியே கைவிட்டுவிட்டு விமானம் மூலம் மெற்றே எனும் சுரங்கப்பாதை நெடுகிலும் தாக்குதலை இடைவிடாது தொடர்ந்தது. பாரிய கட்டிடங்களை தகர்த்தமைக்கும் அடுக்குமாடிக் கட்டடங்களை தாக்கியமைக்கும் சுரங்கப்பாதைகளே காரணம். ஆனால் அத்தகைய சுரங்கப்பாதைகளை ஹமாஸ் இஸ்ரேலிய போர் விமானங்களின் தாக்குதலுக்கு அகப்படாத வகையில் ஆழமான பகுதியில் அமைத்திருந்தது. அது மட்டுமன்றி அதன் பலத்தையும் அதிகரித்திருந்தது. அதனால் இலக்கு எதுவும் இஸ்ரேலுக்கு சாத்தியமாகவில்லை. மாறாக ஹமாஸ் ஏவுகணைத் தாக்குதலை இடைவிடாது இஸ்ரேலிய நகரங்களையும் சொத்துக்களையும் நோக்கி நிகழ்த்திக் கொண்டிருந்தது. இறுதி வரையும் இஸ்ரேலிய படைகளால் ஹமாஸின் தாக்குதலை தடுத்து நிறுத்த முடியவில்லை.

மூன்றாவது, உளரீதியாக யூதர்கள் அச்சமடைந்திருந்தார்கள். குறிப்பாக ஏவுகணைத் தாக்குதல் ஆரம்பித்ததும் எச்சரிகை ஒலி எழுப்பி மக்களை பதுங்கு குழிகளுக்குள் மறைத்துவைக்க வேண்டிய நிலை இஸ்ரேலிய இராணுவத்திற்கு ஏற்பட்டது. இதில் இராணுவம் நெருக்கடியை சந்தித்ததை விட யூதர்கள் அதிக உளப்பாதிப்புக்குள் தள்ளப்பட்டனர். எத்தகைய பலத்துடன் இஸ்ரேல் மேற்காசியாவில் அரசமைத்துக் கொண்டாலும் அரபுக்களின் அச்சுறுத்தலுக்குள்ளும் ஆபத்துக்குள்ளும் தொடர்ந்து அந்த மக்கள் வாழவேண்டிய நிலையை ஆட்சியாளரும் இராணுவமும் ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவு நீண்ட காலத்திற்கு ஆபத்தானதாக அமைய வாய்ப்புள்ளது. காரணம் ஹமாஸின் தாக்குதல் மட்டுமே நிகழ்ந்ததாக குறிப்பிட்டாலும் லெபனான் சிரியா மற்றும் ஈரானிய ஆதரவு பெற்ற குழுக்கள் பாலஸ்தீனக் குழுக்கள் என பலதரப்பும் தாக்குதலை நிகழ்த்தியிருந்தது. இதனை அவதானிக்கும் போது எதிர்காலத் தாக்குதல்கள் ஆபத்துமிக்கதாக அமையப் போகிறது என்பதை அடையாளப்படுத்துகிறது. இதில் துருக்கியின் நிலைபாடும் ஈரானின் போக்கும் இஸ்ரேலுக்கு அபாயமானதே.

நான்காவது, இஸ்ரேலும் அமெரிக்காவும் கூட்டுச் சேர்ந்து நிகழ்த்திய போர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அத்தகைய வல்லரசின் ஒத்துழைப்பும் இராணுவ பலமும் அனுபமும் கொண்ட இஸ்ரேலியத் தாக்குதல் இலக்கினை அடைய முடியாது முதல் தடவையாக போர் நிறுத்தத்தை எட்டியுள்ளது. அப்படியாயின் அமெரிக்க இஸ்ரேல் கூட்டின் இலக்கு மேற்காசியாவில் நெருக்கடிக்குள் உள்ளாகியுள்ளது. ஏற்கனவே மேற்காசியாவின் கணிசமான பகுதிகளை ரஷ்யாவும் சீனாவின் பொருளாதார உபாயமும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டன. தற்போது வரை இஸ்ரேல் சவுதியரேபியா, கட்டார், ஐக்கிய அரபு ஏமிரேற் போன்ற நாடுகளே அமெரிக்க நட்பு நாடுகளாக உள்ளன. ஆனால் அவற்றின் போராளிக்குழுக்கள் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கு எதிரான குழுக்களாக உள்ளன. அது மட்டுமல்லாது ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலை பலமாக சீனாவும் ரஷ்யாவும் எதிர்த்துள்ளன. அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவாக வீட்டோவைப் பயன்படுத்திய பின்பு சீனா இஸ்லாமிய நாடுகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமெரிக்காவின் அணுகுமுறையைப் பற்றிய குற்றச்சாட்டினைத் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் வரையும் அத்தகைய தொலைபேசி உரையாடல் சீனா மேற்கொண்டுள்ளது. அவ்வாறு நோக்கும் போது உலகளாவிய ரீதியில் அமெரிக்க வல்லரசுப் பலம் சரிவடைகிறதா என்ற சந்தேகம் வலுவானதாகிறது. குறிப்பாக மத்திய ஆசியா, கிழக்காசியா, தென்னாசியா, இந்தோ-பசுபிக் பிராந்தியம், அந்தாட்டிக்கா பகுதி என்ற வரிசையில் மேற்காசியாவையும் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதென்பது இஸ்ரேலின் இருப்புக்கான அபாயமாகும்.

ஐந்தாவது, ஹமாஸ் ஈரான் கூட்டு பலமான மாற்றத்தை இப்பிராந்தியத்தில் ஏற்படுத்தக் கூடியதாக அமையும் என்பதை நடந்து முடிந்த போர் தெளிவுபடுத்தியுள்ளது. காரணம் ஹமாஸ் பிரயோகித்த ஏவுகணைகள் ஈரான் தயாரிப்பு என்றும் போரில் ஈரான் நேரடியாக ஈடுபடாத போதும் ஆயுத தளபாட உதவி களை வழங்கியதுடன் தனது போராளிக் குழுக்களை பயன்படுதியுள்ளதாவும் தெரியவருகிறது. அது மட்டுமல்ல ஐ.நா. அணுவாயுதக் கண்காணிப்பகம் ஈரானின் அணுவாயுத உற்பத்தி தொடர்பான தகவல்களையோ படங்களையோ பார்வையிட முடியாது எனவும் ஈரான் வழங்காது எனவும் தெரிவித்துள்ளது. ஈரானின் அணுவாயுத உற்பத்தி நிலையத்தையும் உற்பத்திக்கான தொழில் நுட்பத்தையும் பல தடவை இஸ்ரேல் அழித்துள்ளது. நடந்து முடிந்த போரின் போது இஸ்ரேலின் அணுவாயுத உற்பத்தி நிலையம் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் பாரிய வெடியோசை அப்பிராந்தியத்தில் அதிர வைத்ததாகவும் செய்திகள் உண்டு. ஆனால் அதனை மறுத்த இஸ்ரேல் சிரியாவில் இயங்கி வந்த விமான எதிர்ப்பு ஏவுகணைகளே அவை என்றும் அவை தவறுதலாக அணுவாயுத நிலையத்தின் மீது வீழ்ந்து வெடித்தாகவும் செய்தி வெளியிட்டிருந்தமை கவனிக்கத்தக்கது. அது மட்டுமன்றி அவ்விமான எதிர்ப்பு ஆயுதம் ரஷ்யாவினுடையதெனவும் சிரியா மீது இஸ்ரேலிய விமானத் தாக்குதலை எதிர்த்து அத்தகைய ஏவுகணைகள் இயக்கப்படுதெனவும் தெரியவந்துள்ளது. எதுவாயினும் இது இஸ்ரேலுக்கு அபாயமான செய்தியாகவே உள்ளது.

எனவே இஸ்ரேல்-ஹமாஸ் போர் இரு தரப்புக்கும் மாற்று அணுகுமுறைக்கான காலத்தை வழங்கியுள்ளது. அது அமெரிக்காவின் வல்லரசுக்குமானதாக தெரிகிறது. அமெரிக்க -இஸ்ரேலியக் கூட்டின் போர் அணுகுமுறையொன்று நெருக்கடியை சந்தித்துள்ளது என்பது அதன் போக்கினை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளது. இப் போரில் ரஷ்யா சீனா நேரடியாக பங்கேற்காது விட்டாலும் அந்நாடுகளது அணுகுமுறை அமெரிக்காவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. ஆசியாவின் எஞ்சிய பகுதிகளையும் அமெரிக்கா இழக்கிறதா என்ற சந்தேகம் வலுக்கிறது. இஸ்ரேல் தனது அணுகுமுறைகளில் மாற்றம் செய்யத் தவறுமாயின் பலஸ்தீனர்களும் யூதர்களும் ஒரே மனோநிலைக்குள் தள்ளப்படுவார்கள். எதிர்காலப் போர்கள் அத்தகைய விளைவுகளையே ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது. நடந்து முடிந்த போர் யூத வரலாற்றின் திருப்பத்திற்குரிய காலம். அதனை இஸ்ரேல் புரிவதை விடுத்து அடுத்த போருக்கு தயாராவது போல் அதன் தலைமைகளும் இராணுவத்தினதும் உரையாடல்கள் அமைகிறது. அவை ஆபத்தான விளைவுகளை யூதர்களுக்கு மட்டுமல்ல உலகத்திற்கே ஏற்படுத்தும். ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
whatsapp:077 168 6895
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# முடக்கப்பட்ட பகுதி மக்களும் வாழ்வாதாரத்தேவையும்

கொரோனா தொடர்பில் அடிக்கடி பேசுவது சலிப்பூட்டுவதாக இருக்கின்றது. இன்றைய நெருக்கடி நிலையில் பேசாமல் இருக்கவும் முடியவில்லை. அதைப்பற்றி பேசாமல் இருக்கும் காலம் விரைவில் வந்து விடாதோ? என்ற ஏக்கமும் இருக்கவே செய்கிறது. ஒரு சமூகத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் ஸ்தம்பிதம் அடையச் செய்து மக்களை நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது கொரோனாப் பெருந்தொற்று. அரசு செய்வதறியாது வெறுமனே தற்காலிக போக்குவரத்துத் தடையை அமுல்படுத்திவிட்டு, அடுத்து என்ன முடிவு எடுப்பது என்பது தொடர்பில் அபிப்பிராயமற்று இருப்பதாகத் தெரிகிறது. மருத்துவத் துறையினர் இத்தொற்றின் தீவிரத்தினையும் அது ஏற்படுத்த இருக்கும் தாக்கத்தினையும் உணர்ந்து குறித்த காலத்திற்கு நாட்டை முற்றாக முடக்குமாறு கேட்டுள்ளனர். இவ்வாறு செய்வதாயின் அரசு பாரிய சவால்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். அதில் ஒன்று மக்களுக்கான வாழ்வாதாரத் தேவைகளை ஒழுங்கமைப்புச் செய்தல். அதற்கு அதிகளவிலான பொருளாதாரம் தேவை. ஆனால் அரசுக்கு அந்த இயலுமை இருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொரோனாத் தொற்று அடையாளங் காணப்பட்டு முற்றாக முடக்கப் பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு இதுவரையில் அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அப்பகுதியில் வாழும் அன்றாடக் கூலிகள் பலர் உணவுத் தேவையினைப் பூர்த்திசெய்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அறிய முடிகிறது. அவர்களின் நிலைகளைக் கவனத்தில் எடுத்து அவர்களுக்கான தேவைகளை நிறைவுசெய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். முடக்கத்துக்கு உள்ளாக்கப்படும் பகுதியில் வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5000 ரூபா வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் இப்பகுதி மக்களுக்கு இதுவரை அப்பணத் தொகை வழங்கப்படவில்லை எனவும் அறியக் கிடைக்கிறது. இவ்வாறு பல கிராமங்களில் வாழுகின்ற மக்கள் கொரோனா முடக்கத்தில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த மே 18ஆம் திகதி புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் அடையாங்காணப்பட்ட கொரோனாத் தொற்றினைத் தொடர்ந்து அப்பகுயில் பல கிரமசேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தல் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. ஏறத்தாழ 12 நாட்களைக் கடக்கும் நிலையில் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் கிடைக்கப்பெறவில்லை. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட சில அதிகாரிகளைக் கேட்கும் போது அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்திருந்ததோடு, கட்டங்கட்டமாக உலர் உணவுப்பொருட்கள் வழங்கபட்டு வருவதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி தனிமைப் படுத்தப்பட்ட குடும்பங்களுக்கே அத்தகைய உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக அப்பகுதியிலிருந்து சிலர் தெரிவித்திருந்தனர். ஏனைய பகுதியினருக்கு வாழ்வாதார உதவிகளை அப்பகுதி அரச உத்தியோகத்தர்களால் முன்னெடுக்க முடியாமைக்கான காரணம் அரசிடமிருந்து போதுமான வளங்கள் கிடைக்கப் பெறவில்லை என்பதாகும். சிறு பகுதி முடக்கத்திற்கே அரசு திண்டாடி வருகின்றது என்றால் நாட்டின் முழுப் பகுதியினையும் முடக்கினால் அரசின் நிலை என்ன? அந்த இயலாமையே நாட்டை முற்றாக முடக்குவதில் அரசு தயக்கம் காட்டி வருவதற்கான காரணம் என எடுத்துக் கொள்ளலாம். ஆனால் கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான போதுமான நிதி அரசிடம் உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷா தெரிவித்திருந்தார். அப்படி என்றால் ஏன் கொரோனா தொடர்பில் பொருத்தமான நடவடிக்கையை அரசு எடுக்கத் தயங்குகின்றது என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

எது எப்படியோ அரசாங்கத்தை நம்பிப் பிரயோசம் இல்லை என்பது வெளிப்படை. மக்கள் ஒவ்வொருவரும் தங்களது பாதுகாப்பை தாம் உறுதிப்படுத்துவதே இப்போது செய்ய வேண்டிய அவசரமான செயற்பாடு. அரசிடம் மக்களின் வாழ்வாதாரத்தை கவனத்தில் எடுக்கும் செயற்திட்டம் எப்போதும் இருந்ததில்லை. தேவையான நேரத்தில் அவர்களிடமிருந்து உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

சரி, 'எங்கள் அரசியல்வாதிகள் எங்கே போனார்கள். முதலாவது கொரோனா அலையின் முடக்கத்தின் போது வாகனங்களில் தங்களுடைய படங்களையும் காட்சிப்படுத்திக் கொண்டு கிராமம் கிராமமாக பொருட்களை அள்ளி வழங்கியவர்கள் இப்போது ஆசைக்கும் பார்க்கமுடியவில்லை' என்று மக்கள் கேட்கின்றனர். 'அன்றைய கொரோனா நிலவரம் வேறு, இன்றைய கொரோனா நிலவரம் வேறு. அன்று பாராளுமன்றத் தேர்தலை அண்மித்த காலத்தில் கொரோனா இடர் ஏற்பட்டிருந்தது. இன்று எந்தத் தேர்தலும் நடப்பதற்கான அறிகுறிகள் இல்லை. அதனால் அவர்களைக் காண முடியவில்லை' என்று இன்னொரு சாரார் குறிப்பிடுகின்றனர்.

உண்மையில் வாக்கு சேகரிக்கும் அரசியல் சாணக்கியத்தனத்தினை உதறித்தள்ளிவிட்டு எங்களுடைய மக்கள் என்ற எண்ணத்துடன் வெளியே வரவேண்டும். குறித்த பகுதி மக்களுக்கு முடக்கத்திலிருந்து வெளிவரும் வரைக்குமான உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வாழ்வாதார உதவிகளை ஒழுங்கமைக்க வேண்டும். புலம்பெயர் தேசத்தில் இருக்கின்ற உறவுகள் இதற்கான உதவிகளைச் செய்வதற்கு ஆர்வமாகவும் ஆயத்தமாகவும் இருக்கின்றார்கள். அவர்கள் பிரதேச வேறுபாடின்றி உதவி செய்வதற்கு எப்போதும் தயாராகவே இருக்கின்றார்கள். ஆனால் அவர்களை ஒருங்கிணைத்து செயற்படுத்துவதற்கு பொருத்தமான ஆளணியினர் தேவை. அத்தகைய வேலையை எமது அரசியல்வாதிகள் பொறுப்பெடுத்துச் செய்வதன் மூலம் மக்களுக்கான உதவிகள் சரியான வகையில் போய்ச் சேர்வதற்கு வழியை ஏற்படுத்த முடியும். ஆனால் எங்களுடைய அரசியல்வாதிகள் இலாபமில்லாமல் வருவார்களோ தெரியவில்லை.

அப்படியென்றால் உள்ளூர் தொண்டுநிறுவனங்கள் அதனை முன்னெடுத்துச் செய்யலாம். பொருத்தமான வழிமுறைகளைக் கையாண்டு சரியான மூலங்களைக் கண்டடைந்து. உதவி தேவைப்படும் குடும்பங்களை நாடிச் செல்வது இன்றைய அவசிய தேவையாகும். ■

# கொரோனா காலத்து கல்வியில் சிறார்கள் எதிர்நோக்கு சவால்கள்

தந்திரன்

கொரோனா பெருந்தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில் அரசு, மருத்துவர்களும் கட்டுப்படுத்துவதற்கு பலவாறு முயற்சித்து வருகின்றனர். கடந்த முறையினைப்போல் இலகுவாக இதனைக் கட்டுப்படுத்த முடியாது என்பதனை பொதுவாக எல்லா மட்டத்தினரும் உணர்ந்துள்ளனார். ஆனாலும் எப்படியோ கட்டுப்படுத்தியாக வேண்டும் என்ற நிலைமையும் உண்டு. முழுமையாக நாட்டை முடக்க முடியாத சூழ்நிலைக்குள் அரசு தள்ளப்பட்டு என்ன செய்வது என்று திண்டாடி வரும் நிலையில் தற்காலிகமாகப் பயணத் தடையினை அரசு அமுல்படுத்தியுள்ளது. இந்தப் பயணத் தடைகள் கொரோனாவின் தீவிரத்தினை இல்லாமல் செய்யுமா என்ற கோள்விக்கு பதில் எந்தத் தரப்பிலும் இல்லை. காலந்தான் பதிலளிக்க வேண்டும். இந்தநிலையில் மருத்துவர்கள் தொடர்ச்சியாக பயணத்தடையினை அமுல்படுத்தும்படி கேட்டுக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அரசு செவிசாய்ப்பது போல் தெரியவில்லை.

அரசு நாட்டின் சகல செயற்பாடுகளும் ஏதோவொரு வகையில் நடைபெற்றுப் கொண்டிருக்க வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளது. அதன் அடிப்படையிலேயே க.பொ.த (சா/த) தரப் பரீட்சை அறிவித்தபடி நடக்கும் என்று அரசு அறிவித்துள்ளது. இத்தகைய அறிவித்தலைக் கேட்டுப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை எவ்வகையில் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்தலாம் என்று சிந்தித்து வரும் நிலையில், வலயக்கல்வி பணிமனைகள் ஊடாக பாடசாலைகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு - நிகழ்நிலை, viber, whatsup போன்ற செயலிகள் ஊடாக கற்றல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய கற்றல் நடவடிக்கைகள் மூலம் மாணவர் பெறும் நன்மைகள் ஒரு பக்கமிருக்க அவர்கள் எதிர் கொள்ளும் எதிர்விளைவுகள் பற்றியும் கல்விசார் அறிவுஜீவிகள் சிந்தித்து வருகின்றனர்.

இருந்தாலும் கொரோனா தீவிரமடைந்து இருக்கும் இச் சூழலில் தமது கல்வியை தொடர்வதற்கு – நிகழ்நிலை, viber, whatsup போன்ற செயலிகளே துணையாக அமைகின்றன. இது ஓரளவிற்கு தரம் 06 தொடக்கம் உயர்தர மாணவர்கள் வரை பயன்படுத்தக் கூடியதாக இருந்தாலும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு




பொருத்தமற்றதாக இருக்கிறது. அதனால் அவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு பொருத்தமான வழிமுறை எது என சிந்திக்க வேண்டியுள்ளது. அவர்கள் இக் காலத்தில் இழந்த கல்வியை சீர் செய்ய வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் உண்டு. சிறு வயதிலிருந்து முறையாக கற்கப்படும் கல்வியே இடைநிலை, உயர்தர கல்விக் காலங்களில் பயனுடையதாக அமைகிறது. அடிப்படைகளைக் கற்க வேண்டிய கால கட்டத்தில் எதனையும் கற்காது விடுதல் என்பது மிகச் சோகமானது. 'ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா" என்றும் அனுபவ மொழி எல்லா விடயத்திற்குமே பொருந்தும்.

அதே நேரம் பயணத்தடை அமுல் படுத்தப்பட்டிருக்கின்ற இக்காலகட்டத்தில் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் இடர்கால கற்பித்தல் செய்முறைகளை ஆவணப்படுத்த வலியுறுத்தப்படுத்தப்படுகிறது. இதன் சாத்திய, அசாத்திய புரிதல்கள் எல்லோரிடமும் எழ வேண்டும்.

பொதுவாக எந்தப் பழக்கமும் சிறு வயதில் இருந்து தொடங்குகின்ற பொழுது அது வழக்கமாகி விடுகிறது. அதுபோல்த்தான் எண்ணும் எழுத்தும் சிறுவயதில் இருந்தே பயிற்றுவிக்கப்படவேண்டியவை. இல்லையெனில் சிறுவர்களை கல்வியின்பால் எவ்வாறு ஈர்க்கச் செய்ய முடியும். இது மிகச் சிரமமான விடயமே.

சிறார்களின் கைகளில் திறன் கைத்தொலைபேசியை கொடுக்கின்ற போது, அவர்கள் கல்விக்கப்பால் தொலை பேசி விளையாட்டுக்களிலேயே அதிகளவு ஆர்வம் காட்டுகின்றார்கள். காலப்போக்கில் கைத்தொலைபேசி விளையாட்டுக்களுக்கு அடிமையாகி விடுகின்ற துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது. அத்தோடு உடல் ஆரோக்கிய கெடுதல்களும் ஏற்பட்டு எதிர்காலத்தில் பெற்றோர்களுக்கு சவால்களை ஏற்படுத்தம் சோகமும் நிகழும் என்பதும் எதிர்வுக் கூறக்கூடியதுதான்.

ஆக, ஆரம்பப் பிரிவு மாணவர்களின் இழந்த கல்வியை - இழக்கின்ற கல்வியை எவ்வாறு மீட்டெடுப்பது. அதற்கு ஏதேனும் வழி வகைகள் உண்டா ? விளையாட்டு, பொழுதுபோக்கு என்பவற்றுடனான மாணவர்களின் உளத்தை மேம்படுத்தக் கூடிய கல்வி முறைகளை பாடசாலைகளில் வடிவமைக்க வேண்டிய தேவையே கல்விச் சமூகத்தை நோக்கி இன்று எழுந்திருக்கின்ற வேண்டுகோளாகும்.

எனவே பாடசாலைக் கல்வியே ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டி ஆகும். தற்போதைய நிலையில் கொரோனா பெருந்தொற்றை தடுக்காத வரை, ஆரம்பப்பிரிவு மாணவர்களின் அடிப்படைகளும் ஆட்டம் காணும் நிலையே தோன்றியிருக்கிறது. இதனால் எல்லோரும் ஒன்றிணைந்து சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி, உயிரை மாத்திரமல்ல இழந்த கல்வியை மீட்டெடுக்க அயராது உழைப்போம். ■

எஸ்.ஹரிகரன்

# கல்வியை நோக்கி இடம்பெயரும் மலையக மாணவர்கள்



தமிழ் அரசியல் பற்றி உரையாடுபவர்களிடம் அபிவிருத்தி தொடர்பான விடயம் கவனத்தில் கொள்ளப்படாமலே இருக்கின்றது. இந்த நிலையில் எமது வடக்கு அரசியல்வாதிகள் வடக்கு கிழக்கில் மட்டுமே தமிழர் வாழ்கிறார்கள் என்ற எண்ணத்தில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் போலவே தெரிகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தென்னிலங்கையிலும் மலையகத்திலும் வாழும் தமிழ் சொந்தங்கள் மீதான பார்வை இன்னும் அவர்களின் அரசியல் செயற்பாடுகளில் ஏற்படுத்தப்படாமை தேசிய ரீதியான தமிழ் அரசியலில் கறைபடிந்த பக்கமாகும். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான பேரணியில் மலையகத் தொழிலாளிகளுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு என்ற கோசத்தை சாட்டுக்கு செருகி விட்டதோடு தம் பணி முடிந்தது என தமிழரசியல் வாதிகள் நினைப்பது காலக்கொடுமை. மலையகத்திலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் வாழும் தமிழர்களின் அவலங்களைப் பற்றிய பார்வையாக இக்கட்டுரை வரையப்படுகின்றது.

காலியில் ஒரு குக்கிராமம், எஸ்ரேட் பகுதி, தோட்டங்களும் துரவுகளும் நிறைந்த ஊர். அங்கு எம் பயணம் நிகழ்ந்தது. அங்கு நாம் சந்தித்த மக்களிடம் உரையாடல் நிகழ்த்தும் போது அவர்களுடைய அரசியல் தொடர்பான பார்வையை நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அவர்களின் கருத்துப்படி தேர்தல் என்பது வாக்கு போடுவதோடு சரி. அதன் பிறகு நடப்பது என்ன



செல்வி சங்கவி விஜயரட்ணம்

வென்பது அவர்களுக்கு புரிவதாயில்லை. யாழ்ப்பாணத் தமிழர்களைப் போல அவர்களும் பல்வேறு வகையான இன்னல்களுக்கு அரசியல் ரீதியாக முகங்கொடுத்து வருகிறார்கள். ஒரு 15 வயது நிரம்பிய சிறுமி "நாங்கள் எலெக்சனுக்கு ஒட்டுப் போட்டதும் ஓடி ஒளித்து விடுவோம்" என தெரிவித்தமை எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. காரணம் கேட்டபோது "வடக்கில் யாருக்கு ஓட்டு போடுகிறார்களோ அவர்களுக்கு எதிரானவர்களிடம் நாங்கள் அடிவாங்க வேண்டி இருக்கும் அல்லவா?" என அச் சிறுமி தெரிவித்தார்.ஆக மொத்தத்தில் தமிழர்கள் என்ற ஒரு காரணத்துக்காக அவர்களும் தண்டிக்கப்படுகிறார்கள் என்பது வெளிப்படை. இது அவர்களை அபிவிருத்தி நோக்கில் பயணிப்பதற்கும் தடையாகவே அமைகின்றது.

லயத்தில் வாழ்க்கையை கழியும் இக்குடும்பங்கள் இன்னும் அபிவிருத்தியை எதிர்பார்த்தபடி தவம் கிடக்கின்றன. கொழுந்து பறித்தல் ரப்பர் வெட்டுதல் தொழில் சாலைப் பணி என்பன இவர்களின் பரம்பரை தொழில்களாக மாற்றப்பட்ட அவலம், இவர்கள் மீது திட்டமிட்டே சுமத்தப்பட்டுள்ளது. கொழுந்து வாழ்க்கையும் அட்டை கடியும் இவர்களின் எழுதப்பட்ட விதியே. இதில் இருந்து வெளியே வர இன்று வரை இக்குடும்பங்கள் போராடியே வருகின்றன. "என்ரை பிள்ளையாவது இந்த அட்டைக்கடி துன்பங்களுக்குள் விழுந்து விடாது கல்வி கற்று உயர்ந்த வாழ்க்கை வாழ வேண்டும்" என்ற அங்கலாய்ப்பு ஒவ்வொரு பெற்றோரிடமும் காணப்படுவதனை அறிமுடிகின்றது. அதற்கு என்ன விலை கொடுத்தாவது நகரங்களுக்கு தமது பிள்ளையை அனுப்பி படிக்க வைக்க பெற்றோர் முயற்சிக்கின்றனர். இதற்கு அவர்கள் படும் வலியும் வேதனையும் அதிகமானது.

இலவசக்கல்வி முறை இன்று நாடு முழுவதும் நிலைபெற்றாலும் இந்த பிரதேசத்துக்கு எட்டாக்கனியாகவே இருக்கின்றது. குறிப்பாக அரசின் கொள்கைப் படி பாடசாலைகள் வாழ்விடத்தில் இருந்து ஐந்து கிலோமீற்றருக்குள் இருக்க வேண்டும். ஆனால் மலையகத்தை பொறுத்த வரையில் ஒரு பிள்ளை பாடசாலைக் கல்வியை பெற வேண்டுமானால் நீண்ட தூரம் பயணிக்க வேண்டி இருக்கின்றது. இடை நிலை கல்வியை தொடர வேண்டுமானால் 10 கிலோமீட்டர் பயணம் செய்ய வேண்டுமென்கிறார். பதுளையில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கல்வி கற்று க.பொ.த. உயர்தரத்தில் மூன்று 'ஏ' சித்தி பெற்று, யாழ்.மாவட்டத்தில் 15 வது நிலையை பெற்றிருக்கும் மாணவி செல்வி சங்கவி விஜயரட்ணம் அவர்கள்.

இவர் பதுளை தெமோதர பகுதியைச் சேர்ந்தவர். ஆரம்ப கல்வியை தெமோதரவில் அமைந்துள்ள பாடசாலையில் கற்ற இவர் க.பொ.சாதாரண தரத்தினை பதுளை தமிழ் மகளிர் கல்லூரியில் கற்றிருந்தார். தொடர்ந்து உயர்தரத்தினை அங்கு கற்பதற்குரிய போதுமான வசதி இல்லாத காரணத்தினால் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்க வந்ததாக குறிப்பிடுகின்றார்.

மேலும் இவர் "சிறுவயது முதலே சட்டத்தரணியாக வருவதே தன் கனவாக இருந்தது. இந்தக் கனவை ஈடேற்ற வேண்டுமெனில் யாழ்ப்பாணம் சென்று கற்பதே சிறந்த வழி என்ற எண்ணமே தன்னிடம் இருந்தது. அதுவே

**"சிறுவயது முதலே சட்டத்தரணியாக வருவதே தன் கனவாக இருந்தது. இந்த கனவை ஈடேற்ற வேண்டுமெனில் யாழ்ப்பாணம் சென்று கற்பதே சிறந்த வழி என்ற எண்ணமே என்னிடம் இருந்தது. அதுவே நான் யாழ்ப்பாணம் வரவும் காரணமாயிருந்தது. எனக் கூறிப்பிடும் அவர் அதற்கு தனது இடைநிலை ஆசிரியர்களும் வழிகாட்டியதாகவும் தான் ஊரை தாண்டி வரும் போது சந்தித்த சவால்கள் ஏராளமானவை என்றும் அங்கிருந்து வந்திருக்காவிட்டால் தனது சட்டத்தரணி கனவு கனவாக போயிருக்கும்" என்றார்.**

தான் யாழ்ப்பாணம் வரவும் காரணமாயிருந்தது எனக் குறிப்பிடும் அவர், அதற்கு தனது இடைநிலை ஆசிரியர்களும் வழிகாட்டியதாகவும் தான் ஊரை தாண்டி வரும் போது சந்தித்த சவால்கள் ஏராளமானவை என்றும் அங்கிருந்து வந்திருக்காவிட்டால் தனது சட்டத்தரணி கனவு கனவாகவே போயிருக்கும்" என்றார்.

இவ்வாறு மலையகத்தில் இருந்து வேறு பகுதிகளுக்கு சென்று கல்வி கற்பவர்கள் அதிகமாகவே இருக்கின்றனர். இதற்கு அவர் சொல்லும் காரணங்கள் க.பொ.த. சாதாரண தராதரப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் ஆளணி தாராளமாக காணப்படுகின்ற போதும் உயர்தரப் பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரிய ஆளணி இல்லை என்பதோடு வகுப்பறை பற்றாக்குறைகள், நூலக ஆய்வு கூட பற்றாக்குறைகள் போன்றவற்றினையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் கல்வி கற்பதற்கான வசதிகளும் வாய்ப்புக்களும் அதிகம். தன்னுடைய அறிவை விருத்தி செய்வதில் யாழ்ப்பாண பொது நூலகம் மற்றும் தனது பாடசாலை நூலகம் பெரும் பாங்காற்றியதாக குறிப்பிடும் செல்வி சங்கவி விஜயரட்ணம், இந்த வாய்ப்புகள் மலையகத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கிடைப்பதில்லை எனவும் வருத்தம் தெரிவித்தார்.

சங்கவி அடுக்கிய இக்காரணங்கள் காலி, மாத்தறை, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி மற்றும் சிங்கள ஊர்களில் சிறுபான்மையாக தமிழர் வாழும் பகுதிகளில் இப் பிரச்சினைகள் இருந்து கொண்டே இருக்கின்றன.

சங்கவி கூறிய பிரச்சினைகள் 1987 மாகாண சபை வருகையின் முன்னர் எப்படி இருந் தது என அறிய உரையாடப்பட்ட போது,

பதுளையை சேர்ந்த முதியவர் ஒருவர் ,

"இந்த மாகாண சபை வர முதல் எமது மாகாணத்தில் நிறைய வடக்கு, கிழக்கு ஆசிரியர்கள் பணிபுரிந்தார்கள். நாமும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியர்களிடம் கல்வி கற்றோம். ஆனால் மாகாண சபையின் வரவு எமது பிள்ளைகளை மோசமாக பாதித்தது" என அங்கலாய்த்தார். மாகாண சபையின் வரவு மாகாணங்களுக்குள் முடக்கப்பட்ட ஆளணி காரணமாக வடக்கு பட்டதாரிகள் யாவரும் வடக்கோடு முடக்கப்பட்டதால் மலையகத்தி லும் ஏனைய தமிழர் வாழும் பகுதிகளிலும் இந்த ஆசிரிய ஆளணி பற்றாக்குறை ஏற்படுவதை அவர் குறையுடனே பகிர்ந்து கொண்டார். இதனாலேயே தமது பிள்ளைகள் கல்வி தேடி அலையவும் இடை நிலையோடு கல்வியை கைவிடவும் வேண்டிய சூழல் ஏற்படுவதாகவும் குறிப்பிட்டார். வசதி கூடிய பிள்ளைகள் நகர பகுதி நோக்கி பயணமாக வசதி குறைந்த பிள்ளைகள் தமது கல்வியை கைவிட்டு தேயிலை கொழுந்து பறித்தல் உட்பட தொழில் தேடி அலையும் சூழல் ஏற்பட்டதையும் அவர் கவலையுடன் நினைவு கூர்ந்தார்.

மலையகத்திலும் வடக்கைப் போல வளமான பாடசாலை, போதுமான ஆசிரியர் ஆளணியினர் என்ற கட்டமைப்பு உருவாக்கப்படுமாயின் தமது பிள்ளைகளை தமது பிரதேசத்திலே வைத்து கல்வி கற்பிக்கமுடியும் என்ற ஏக்கம் அங்கு உள்ளவர்களுடன் உரையாடும் போது அறிந்து கொள்ளமுடிகின்றது.

இன்றும் இப்பகுதியில் வடக்கு கிழக்கை சேர்ந்த பல ஆசிரியர்கள் அர்ப்பணிப்போடு செயற்படுகின்ற போதும் போதுமான உயர் தர ஆசிரியர்கள் இல்லாமை மற்றும் வளப்பற்றாக்குறை தீர்க்கப்படாத பக்கமாகவே அமைகின்றது. இப் பிரதேசங்களுக்கு தேசிய கல்வியல் கல்லூரிகளுக்கான விசேட ஒதுக்கீடு காணப்படுவதால் உயர் தரக் கல்வி சரியான வகையில் கிடைக்கப்பெறும் போது அவ் வாய்ப்பினை அவர்கள் பயன்படுத்தி முன்னேறுவதற்கு இடமுண்டு.

இப் பகுதியில் இடை நிலை வெற்றிடங்களைச் சீர் செய்தல் சாத்தியமாயினும் உயர்தரத்துக்குரிய ஆசிரியர் வெற்றிடங்களின் சவால்கள் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே இருக்கின்றது. உயர் தரத்துக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனங்கள் அத்தியாவசியமாயினும் பட்டதாரிகள் குறித்த மாகாணங்களில் பற்றாக்குறையாய் இருப்பது ஆசிரிய ஆளணி பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது. எனவே இவ்விடயத்தில் தேசிய கொள்கையொன்று மாகாண மத்தி அதிகாரப் போட்டியை தாண்டி வடிவமைக்கப்பட வேண்டிய தேவை உணரப்படுகின்றது.

கொஞ்சம் வசதி கூடிய குடும்பங்களுக்கு நகரப்பகுதி நோக்கி தமது பிள்ளைகளை உயர்தரத்துக்கு அனுப்புவது ஏற்றதானாலும் வசதி குறைந்த பிள்ளைகளின் நிலை வருந்தக்கூடியது. மூன்று வேளை உணவுக்கே முப்பது கிலோ கொழுந்து பறிக்க வேண்டிய நிலையில் மலையகத்திலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் தமிழர்களின் வாழ்வதார வறுமை நிலை இருக்கையில் எவ்வாறு கல்விக்கான முதலீட்டை செய்வதென்ற கேள்வியே எழுகின்றது. உலகமே நவீன மாடி வீடுகளிற்கும் கல்வீடுகளுக்கும் மாறி விட்ட சூழலில் லயக்குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களின் கல்வி மீதான ஏக்கம் இன்னும் முடிந்த பாடில்லை. அதற்கு இனியாவது ஒரு தெளிவான கல்வி கொள்கை ஆளணி மற்றும் வளப்பங்கீட்டு கொள்கையை கல்வியமைச்சு வடிவமைக்க வேண்டிய தேவை உணரப்படுவதை அவதானிக்க முடிகின்றது ■

# எழுத்தின் இயங்கியல்

## உளவியல் உருவாக்கம் 3

ந. மயூரரூபன்

ஒரு மனிதனை அவனது - அவனது விருப்பம் மற்றும் உருவாதல் என்பனவே வடிமைக்கிறது என்கிற ஃப்ராய்டிய கருத்து உண்டு. ஒரு மனிதன் என்கிற படிமத்தை அவனது உண்மை வெளிப்படுத்துகின்ற விருப்பமும் அந்த விருப்பத்திலிருந்து அவன் - அவன் உருவாகின்ற அந்த செயன்முறையும் வடிவமைக்கிறது என்கிறார் ஃப்ராய்ட். ஒருவகையில் இக்கருத்து பாலியல் சார்ந்த கருத்துருவத்திலிருந்து பிறந்தது. தெலூஸ் - கத்தாரி என்கிற மாற்றுக் கருத்தியலாளர்களால் அடையாளங் காணப்பட்ட இரட்டையரின் கூற்றும் கவனத்திற் குரியது. விருப்பம்தான் உடல்களை உற்பத்தி செய்கிறது என்கிறார்கள் இவர்கள்.

இந்தக் கூற்றுக்களின் அடியாக நாம் 'விருப்பம்' என்பது எவ்வாறு ஒரு பிரதியைத் தனக்குரியதாக்குகிறது என்பதைப் பார்க்கலாம். பொதுவான விருப்பம், தனியான விருப்பம் என்று இரண்டு உண்டா? என்கிற கேள்வி அடிப்படையானது. இதுவும் கருத்தியலைப் போன்றதே. கருத்தியலும் அதிகாரமும் எவ்வாறு ஒருவனை உற்பத்தி செய்கிறதோ அதே போன்றே விருப்பமும் அந்த ஒருவனை - ஒருத்தியை - ஒரு குழுவை உற்பத்தி செய்கிறது.

விருப்பம் என்பது முற்றுமுழுதான உளவியல் உருவாக்கத்தின் நுண்ணிழைகளால் பின்னப்பட்டதாலே அமையப் பெற்றிருக்கும். தனியனின் விருப்பம் அல்லது தனிமனித சுதந்திரர்களாலும், தனிமனித ஜனநாயகப் பண்புகளாலும் வனையப்பட்ட விருப்பம் என்ற ஒன்று இருப்பதற்கான வாய்ப்புக்கள் சிறிதளவேனும் இல்லை.

இது நமக்கு எமது புற நிலைமைகளின் ஆதிக்கமானது அக நிலைமைகளின் ஆதிக்கத்தை மிகக்



குறைந்த வீச்செல்லையுடனேயே அடையாளங் காட்டுகிறது.

மனிதனும் உடலும் உள்ளமும் அமுக்கத்திலிருந்து தோற்றம் கொண்டவையே. உடலும் உள்ளமும் அமுக்கத்தின் பல முகங்களையே துண்டாடப்படுகின்றன, நேர்த்தியாக்கப்படுகின்றன. என்கிற தோற்றத்தையே பல வகைகளில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஒரு சமூகத்தின் வாசிப்பே இதனைத் தீர்மானிக்கின்றது.

'விருப்பம்' என்பதன் வகை சமூகத்தின் இருப்புப் புத்தகத்தில் எவை எவை பதியப்பட்டிருக்கின்றனவோ அப்பட்டியலிலிருந்து தேர்ந்தெடுத்த ஒன்றாகவே அமைய முடியும். முதலில் கூறியது போன்று எங்களிடமுள்ள வரலாறு, தொன்மம், மொழி, சாதி, சமயம், இனம் என அனைத்தும் சேர்ந்த குழுமம் பட்டியலை தயாரித்தபடி இருக்கும். அந்தத் தயாரிப்பின் வகைமைக்குள் ஒவ்வொருவருக்குமான தெரிவும் காத்திருக்கும். அதுதான் எனக்கான அரிசியில் எனது பெயர் எழுதப்பட்டிருக்கும் என்பது. மனிதனைப் போன்றுதான் பிரதிகளும் என்பதையும் மறுப்பதற் கில்லை. பிரதியிருந்தால் அதற்குரிய மனிதன் தேவை யில்லை. ஆனால் விருப்பம், பிரதியின் விருப்பம் எவ்வாறானதாக அமைய முடியும்.

1 .அதனைத் தீர்மானிக்கும் ஏனைய பிரதிகளிலிருந்து
2 .வித்தியாசத்தை இனங்காண முனைதலிலிருந்து
3 .தன்னை அல்லது பிரதியை முன்னிலைப்படுத்தலில்
4.பிரதியின் விருப்பமாகிய இருத்தலில்

ஒரு பிரதியை ஏனைய பிரதிகள் எவ்வாறு தீர்மானிக்க முடியும்? இது இரண்டு அடிப்படைகளால் பார்க்கப்படக் கூடியது.

1)ஏற்கனவே உருவான பிரதிகளின் தோற்றத்தி லிருந்து அவை கொண்டிருக்கும் விருப்ப நியாயங்களைத் தான் விருப்பமாகக் கொண்டிருத்தல். குறிப்பாக சில கருத்துருவங்களால் கட்டுண்டவர்கள் சில அரசியல் சித்தாந்தங்களைப் பின் தொடர்பவர்கள் தொடர்ச்சியாக தமது பிரதிகளை அந்தப் பாதையிலேயே உருவாக்கிச் செல்வர். இதற்கு, டானியல், செ.கணேசலிங்கன், ரமணி சந்திரன், சுஜாதா, சோபாசக்தி, சயந்தன்,தீபச்செல்வன் எனப் பலரின் பிரதிகளின் வகை மாதிரிகள் சிலதை அடையாளங் காட்டலாம். எனினும் இவர்களை ஒரே வரிசையில் குறிப்பிட்டதற்காக அவர்களின் எழுத்துக் களும் பிரதிகளும் ஒத்தவையல்ல. ஒவ்வொன்றும் அவற்றிற்குரிய தளத்திலானவை. அவற்றிற்குரிய அரசியலுக்கானவை, அவற்றிற்குரிய வியாபார சீராக்கத்திற்கானவை.

2) இதேபோல் ஏற்கனவே வெளிவந்த இவரது பிரதிகளின் செல்வாக்கு இவர்களின் பிரதி உருவாக்கத்தைத் தீர்மானிக்க வல்லதாக இருக்கும். இதற்கு சமகாலத்தில் சோபாசக்தி, சயந்தன், தீபச்செல்வன், குணா கவியழகன், சேனன் போன்றோரின் பிரதியுருவாக்க வகைமைகளைக் கொள்ள முடியும்.

3) ஒரு பிரதி வித்தியாசங்களை இனங்கண்டு தன்னை வெளிப்படுத்த முனைதல் என்பது மிக முக்கியமானது. இதனையும் ஏனைய பிரதிகளின் வருகையும் கவனம் - கவனமின்மையும் தான் தீர்மானிக்கின்றன. மொழியின் உருவத்தில், உத்தியில், பேசுபொருளில் வித்தியாசத்தைக் கண்டடைய உதவும் பிரதிகள் இவை.

இதற்கும் நாம் எம்மத்தியிலிருந்தும் சில பிரதிகளை எடுத்துக் கூற முடியும். துரத்தும் நிழல்களின் யுகம், பொக்ஸ் கதைப்புத்தகம், கறுப்புருவம் சுமக்கும் ஆந்தைகள், ஆதிரை, கொல்லனின் ஆறு பெண்மக்கள், (இராகவனின் பிரதி) எனக் கூற முடியும். இவை சில உதாரணங்கள் மட்டும்.

ஒரு பிரதி தன்னை அல்லது எழுதியவாறு முதன்மைப்படுத்துகின்ற நிலைமை உண்டு. இது இரண்டு தன்மைகளால் நிகழ்கிறது.

■ பிரதி கொண்டிருக்கிற அரசியல்

ஒரு வகையில் இது சமகாலத்தில் கவனம் பெற்றிருக்கிற அரசியலை/ கவனம் பெற்றிருக்காத அரசியலை பேசுகின்ற - அதிர்ச்சிக்குள்ளாக்குகின்ற சொல்லாடல்களைக் கொண்டிருக்கக் கூடியது. இது இனத்துவ, தேசிய, தனித்திய, பாலியல், பால்நிலை எழுத்துக்களாக இருக்கலாம்.

■ எழுதியவரின் அரசியல் அல்லது அவரது பிம்பம் வெளிப்படுதல் ஒரு பிரதி எழுதியவரின் அரசியலால் அறியப்படுகின்ற நிலைமை இது. உள்நோக்கங்களில் அரசியலும், வியாபாரமும் கொண்ட ஒரு வகை வர்க்க எழுத்துக்கள் எம்மிடமுண்டு.

ஒரு பிரதி எதைக் கோருகிறதோ அதுவாகவே அப்பிரதி இருத்தல் என்கிற வகைமை இது. இது ஒரு வகையில் தப்பிப்பு நோக்கிலான கூற்று. எழுத்தும், பிரதியும் தன்னிச்சையாக இயக்கத்தில் உருக்கொள் கின்றன. ஒரு பிரமையில் எழுத்து உருக்கொண்டு விரிகிறது என்கிற கூற்று ஒரு பக்கமிருந்தாலும்,

இன்னொரு வகையில் கற்பனையில் மொழி பிணைந்தேறி வரும் பீதி வகையிது. கோணங்கியின் எழுத்துக்கள் ஒருவகை எடுத்துக்காட்டு. இவ்வாறான பிரதி வகைமைகள் அனைத்தும் அவை கொண்டிருக் கின்ற விருப்பத் தேர்வுக்குரியவையிலிருந்து உருப்பெற்ற வையல்ல. அவற்றின் கூட உள்ள, மாற்றாக உள்ள, பிரதிகளின் இருப்பிலிருந்தும் விருப்பிலிருந்தும் தோற்றம் பெறுபவையாகவே உள்ளன. உண்மையில் விருப்பம் என்பது இன்னொன்றின் இருப்பிலிருந்து உருவாவதே. விருப்பத்திற்கு ஒருபோதும் சுயம் என்பது இல்லை.

உன்னிடமிருக்கிற பெருஞ் சொற்களில்
சிலதை
நான் கேட்டு முடித்தபோது
நாம் சேருவதற்கான கனவு
நீயிருக்கிற மணற்புதுங்குகுழியின்
மூலையில் உருந்து கொண்டிருக்கிற மணலில்
புதைய அதற்குள் கடலின் மௌனம் நுழைகிறது
அதிர்ந்து கொண்டிருக்கிறது
மணற்குழியின் பெருந்துயர் மிகு சொற்கள்
(தீபச்செல்வன்,மரணத்தில் துளிர்க்கும் கனவு/93)

பொறுப்புத்துறப்பு: இங்கு எடுத்துக்காட்டுகளாக பயன்படுத்தப்பட்ட எழுத்தாளர்கள் மற்றும் பிரதிகளின் பெயர்கள் குறித்த பகுதிகளுக்கான மேலதிகமான விளக்கத்தைத் தருவதற்கு மட்டுமே. அது ஒன்றும் கூறப்பட்ட பட்டியலல்ல. ■

---

# சிங்களக் கவிதைகள் மூன்று

சிங்கள மொழி மூலம் - மொ.ல.செனெவிரத்ன
தமிழில் - யாத்ரிகன்

1
காற்று
சுழன்று அடிக்கிறது.
கடற்பறவை ஒன்று
வானத்தை நோக்கி
பறக்கிறது
புயலைத் தடுக்க.



2
இருண்ட மேகம்
விலகி
வானம்
மீண்டும்
பிரகாசமடைகிறது.

3
மக்கள்
என்றும் போல
அமைதியாகவே இருக்கிறார்கள்.
நீங்கள்தான்
முட்டாள்கள்.

---

# பச்சை நிறப் பாம்புகள்



என் ஒவ்வொரு பயணங்கள் தோறும்
வந்து விடுகின்றாய் குறுக்கே எங்கிருந்தோ!
ஒரு பச்சைப் பாம்பாய்
எத்தனை தொல்லை கொடுக்கிறாய்
ஏவல் பாம்பே.
எப்போது எனது காலை
முன்வைத்தாலும்
அருவருப்பான உன் பிரசன்னம்
அங்கிருக்கிறதே...
தடைகளில்லாத தாளத் தெருக்கள் தோறும்
குறுக்கே கிடந்து
பச்சையாய் நெளிந்து
என் பயணத்தைத் தடுப்பாய்
மடித்து வைத்த என் பழைய உடுப்பின்
கழுத்தை நெரிப்பாய்
மறைவிடம் அழைத்து
என் உறுப்புக்கள் மீதும் ஊர்வாய்.
என் நின்மதி தின்கின்றாயே
அங்கும் இங்கும் கிடந்து.
நீ பெரும் தொல்லையெனக்கு
பாழாய்ப் போன கொரோனாவை விட.

அ. நிஷாந்தன்

# எப்போது முடியும்? எதுவரையில் கொண்டு போய் விடும்?

சிக்மலிங்கம் றெஜினோல்ட்



> இந்தியாவில் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் நாமும் நிறைய விலையைக் கொடுக்கப் போகிறோம் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இப்படியொரு அழிவைச் சந்திப்பதும் பெரியதொரு உயிர் விலையைக் கொடுப்பதும் முட்டாள்தனத்தின் விளைவே. ஏறக்குறைய பொறுப்பின்மையே இதற்குக் காரணம். தெரிந்து கொண்டும் தெரியாததைப் போல இருந்த - இருக்கின்ற ஒரு வகையான விட்டேத்தி அல்லது திமிர்த்தனத்தின் பெறுபேறே இது.
> இதற்காக சாதாரண அப்பாவிச் சனங்களும் பாதிக்கப்பட வேண்டியுள்ளது என்பதே ஆகப் பெரிய கவலை.

மறுபடியும் கொவிட் 19 சூழல் பற்றியே எழுத வேண்டியுள்ளது. அந்தளவுக்கு கொரோனா எல்லோரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. அதிகம் ஏன் நாட்டையே அது முடக்கியிருக்கிறதல்லவா? இப்படியொரு நிலை வரும் என்று மருத்துவர் சங்கத்தினர் தொடர்ந்து எச்சரித்துக் கொண்டேயிருந்தனர். ஆனால் அதை அரசாங்கம் கேட்கவில்லை. சனங்களும் கேட்கவில்லை. விளைவு இந்த முடக்கம். இந்த அனர்த்தங்கள். தேவையில்லாத உயிரிழப்புகள். இதெல்லாம் எப்போது முடியும்? எதுவரையில் கொண்டு போய் விடும்? இடையில் என்னென்னவெல்லாம் நடக்கும் என்று யாராலும் மதிப்பிட முடியாது.

ஆனால் இந்தியாவில் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் நாமும் நிறைய விலையைக் கொடுக்கப் போகிறோம் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இப்படியொரு அழிவைச் சந்திப்பதும் பெரியதொரு உயிர் விலையைக் கொடுப்பதும் முட்டாள்தனத்தின் விளைவே. ஏறக்குறைய பொறுப்பின்மையே இதற்குக் காரணம். தெரிந்து கொண்டும் தெரியாததைப் போல இருந்த - இருக்கின்ற ஒரு வகையான விட்டேத்தி அல்லது திமிர்த்தனத்தின் பெறுபேறே இது. இதற்காக சாதாரண அப்பாவிச் சனங்களும் பாதிக்கப்பட வேண்டியுள்ளது என்பதே ஆகப் பெரிய கவலை.

இதற்கு யார் பொறுப்பேற்பது? அப்படிப் பொறுப்பேற்றாலும் ஆகப்போவதென்ன? இழக்கப்பட்ட உயிர்களையும் பின்னடையும் பொருளாதார இழப்பையும் எப்படி ஈடுசெய்வது? இதை யார் செய்வது?

இந்த அசட்டைக்குச் சில காரணங்களுண்டு. ஒன்று கடந்த ஆண்டு கொவிட் 19 முதலாவது அலையை இலங்கை வெற்றிகரமாக சமாளித்திருந்தது. அதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பாராட்டும் கிடைத்திருந்தது. அதனால் அடுத்து வரும் கொவிட்டின் நெருக்கடிகளை எப்படியோ சமாளித்துக் கொள்ளலாம் என்ற அசட்டுத் துணிச்சல். அது இப்படி ஒரு விபரீத நிலையை எட்டும் என்பதைப் பற்றி யோசிக்காதிருந்தது.

இரண்டாவது காரணம், மருத்துவர் சங்கத்தின் எச்சரிக்கையைக் கேட்டாலும், அதில் உள்ள அபாயத்தை உணர்ந்து நடவடிக்கை எடுக்க முடியாமை இதற்குக் காரணம், பொருளாதார நெருக்கடி. குறிப்பாக சாதாரண மக்களின் வாழ்க்கையைப் பற்றி அரசாங்கம் கவலைப்பட்டதையும் விட பெரிய முதலீட்டாளர்கள், வணிகர்களின் நலனைப் பேண வேண்டும் என்ற அரசாங்கத்தின் அக்கறை. இதற்கு ஏராளம் ஆதாரங்களுண்டு. அதில் ஒன்று ஆடைத்தொழிற்சாலைகளின் இயக்கம் நிறுத்தப்படக் கூடாது என்பது.

வடக்குக் கிழக்கில் அதிகமான தொற்றாளர்கள் இந்த ஆடைத்தொழிற்சாலைகளின் வழியேதான் உருவாகினார்கள். ஏன் தெற்கிலும் ஆடைத்தொழிற்சாலைகளே பெருமளவு தொற்றை உண்டாக்கின.



அடுத்தது சந்தைகள். இப்போது கூட ஆடைத்தொழிற்சாலைகள் போன்ற பெருந்தொழில் நிறுவனங்களின் உற்பத்தி கெட்டுவிடக் கூடாது என்ற சிந்தனையே பெரிய இடத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்தாத வரையில் - மாற்றாத வரையில் தொற்றினை முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாது.

இதைப்பற்றி எதிர்க்கட்சிகளும் சரி அந்தந்த மாவட்டங்களில் தலைமைப் பொறுப்பில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர்களும் சரி இந்த விசயங்களைப் பற்றிப் பேசுவதே இல்லை. நாட்டில் இப்படியொரு நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் மரண அபாயத்தின் மேலே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். நாளாந்த உணவுக்கே பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கஸ்ரப்படுகின்றன. இளைய தலைமுறையின் கல்வியும் எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது. உற்பத்தியாளர்கள் தாக்குப்பிடிக்க முடியாமல் நட்டமடைகிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் நமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாமலிருக்கிறது. அவர்கள் தங்கள் பாட்டில் ஏதோவெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். இது ரோம் எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்ததற்குச் சமம். இவர்கள் முன்பும் அப்படித்தான். இப்பொழுதும் அப்படித்தான். வன்னியில் இறுதி யுத்தச் சூழலில் சனங்கள் செத்துக் கொண்டிருந்தபோதும் பிறகு முகாமில் அடைபட்டிருந்தபோதும் இப்படித்தான் இருந்தவர்கள். ஆனாலும் எப்படி இவர்களால் இப்படித் தொடர்ந்தும் கண் மூடிக் கொண்டிருக்க முடிகிறது.

குறைந்த பட்சம் இவர்கள் மக்களுக்கு அறிவூட்டலாம். அரசாங்கத்தின் கட்டுப்பாடு விதிப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் தாங்களும் மக்களுக்கு வெளி நடமாட்டத்தைக் குறைக்குமாறு அறிவூட்ட வேண்டும். அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மட்டுமல்ல, வறிய நிலையிலுள்ள மக்களின் உணவுத் தேவைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். முதல் அலையின்போது ஏராளமான பொது அமைப்புகளும் புலம்பெயர் உறவுகளும் இந்த உதவியைத் தாராளமாகச் செய்தனர். ஆனால் இப்பொழுது அந்த நிலை மிகமிகக் குறைவடைந்துள்ளது. அரசாங்கம் கொடுக்கும் அவசர உதவிப் பணம் எந்த மூலைக்கும் காணாது. அப்படியென்றால் இந்தப் பணியைச் செய்து சனங்களைக் காப்பாற்றுவது யார்? அந்தப் பொறுப்பை இவர்கள்தானே எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு அரசாங்கம்தான் முழுப்பொறுப்பை ஏற்க வேண்டும் என்றால் அரசாங்கமே எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுச் செய்து விடலாமே! பிறகெதற்கு நமக்கு என்று தனியாக அதிகாரமும் கோரிக்கைகளும்?

எல்லாவற்றையும் விடுவோம். நமது மக்கள் மிகப் பெரிய இடரில் நம் கண்முன்னால் சிரமப்படுகிறார்களே. ஒரு வேளை உணவுக்கே கஸ்ரப்படுகிறார்களே. இவர்கள்தானே வாக்களித்து நம்மை இந்த இடத்துக்கு (பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாகவும்) கொண்டு வந்தவர்கள். அப்படியானவர்கள் இடர்படும்போது அவர்களுக்கு உதவ வேண்டும் என்று சிந்திக்க வேண்டாமா? மனச்சாட்சியின் கதவுகளைச் சற்றாவது திறக்க வேண்டாமா? பாருங்கள், புதுக்குடியிருப்பிலும் கிளிநொச்சியிலும் உள்ள ஆடைத்தொழிற்சாலைகள் கொவிட் தொற்றுக்களின் கொத்தணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றை இடைநிறுத்தி பணியாளர்களுக்கு சம்பளத்துடன் விடுமுறையை அளிக்குமாறு ஒரு எம்பி கூடக் குரல் கொடுக்கவில்லை. ஆனால் தன்னுடைய ஒரு புகைப்பட நிருபர் கொவிட் தொற்றினால் உயிரிழந்ததற்கு ஆனந்த விகடன் பத்திரிகை நிறுவனம் இரண்டு ஆண்டு சம்பளமும் பிள்ளைகளின் படிப்புச் செலவும் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறது. இப்படிப்பல நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுடைய நலன்களைப் பேணுகின்றன. இதை இங்கேயும் நடைமுறைப்படுத்துவதைப்பற்றி நம்மூர் அரசியல்வாதிகள் அக்கறைப்படாதிருப்பது ஏன்? “அட சனங்கள் செத்தால் இவங்களுக்குத்தானே வாக்குக் குறையும். அதைப்பற்றிக் கூட இவங்கள் கவலைப்படுகிறமாதிரித் தெரியேல்லையே. அந்தளவுக்கு மூடர்களா? அல்லது இரக்கமில்லாதவர்களா?” என ஒரு நண்பர் எரிச்சலோடு கேட்கிறார். எருமை மாட்டுக்கு எவ்வளவு தண்ணீரை ஊற்றினாலும் அதுக்கு நனைந்த உணர்வு வராது என்பார்கள். சனங்கள்தான் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மூன்றாவது, எந்தச் சவாலையும் முறியடிப்போம் என்ற இராணுவ நிலைப்பட்ட சிந்தனை. புலிகளை வெற்றி கொண்ட எமக்கு இந்தக் கொவிட்டை எதிர்கொள்வதொன்றும் பெரிய விசயமில்லை என்று அரச உயர் பீடம் கடந்த ஆண்டு சொன்னதை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள். அப்போதே அது ஒரு பெரிய பகிடியாக மக்களால் உணரப்பட்டது. இப்படியான பொறுப்பற்ற சிந்தனையின் வழியேதான் இந்த இரண்டாவது, மூன்றாவது அலையைப் பற்றியும் இவர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் படைத் தளபதிகளையும் அதிகாரிகளையும் கொவிட்டைக் கட்டுப்படுத்த - கொவிட்டுடன் போர் செய்ய அரசாங்கம் அவர்களை நியமித்திருக்கிறது. ஆனால் கண்ணுக்குத் தெரியும் எதிரி வேறு. கண்ணுக்குத் தெரியாத எதிரி வேறு என்பதை யார்தான் புரிய வைப்பது?

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அது மிகப் பிந்தியே நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இது வெள்ளம் வந்த பின் அணைகட்டுவதற்குச் சமம். ஆனால் கொவிட் 19 நெருக்கடியை உலகின் வேறு நாடுகள் எப்படிக் கையாண்டு மீண்டன என்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம். பிரிட்டனில் கடந்த ஆண்டு கொரோனா மரணங்கள் அந்த நாட்டையே உலுக்கின. சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட தீவிர முடக்கம் இன்று பிரிட்டனை மீட்டெடுத்துள்ளது. அவுஸ்திரேலியா மீண்டு விட்டது. நாம் உடனடியாகவே சுற்றுலாப்பயணிகளுக்குக் கதவுகளைத் திறந்து விட்டோம். கட்டுப்பாடுகளைத் தளர விட்டோம். இன்று தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு என்ன நடக்குமோ? ஏது ஆகுமோ என்று ஒன்றும் புரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

இதிலே முழுவதும் நாம் அரசைக் குற்றம் சாட்டிவிட முடியாது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். சனங்கள் அதிகமதிகம் பொறுப்பற்றுத் திரிகிறார்கள். இளைஞர்கள் விளையாடுகிறார்கள். மரண நிகழ்வுகள், திருமண வைபவங்கள் போன்றவை கூட பிரமாண்டமாகவே நடத்தப்படுகின்றன. அரசுக் கட்டுப்பாடு இல்லை என்றால் இந்த மாதிரி அமர்க்களங்களுக்குக் குறைச்சல் இல்லை. இதில் ஆகப்பெரிய கேவலம் என்னவென்றால், இந்த நிகழ்வுகளுக்கெல்லாம் வெள்ளையும் சொள்ளையுமாக நம்முடைய அரசியற் பிரமுகர்கள் ஆளணி அம்பு சேனையுடன் சென்று திரும்புகிறார்கள்.

இனமுரண்பாட்டு அரசியலினாலும் அதன் விளைவான போரினாலும் ஏராளமான மரணங்களையும் இழப்புகளையும் சந்தித்தவர்கள் நாம். அந்தத் துன்பியலிலிருந்து இன்னும் சரியாக நாம் மீளவில்லை. இடையில் சுனாமி அனர்த்தத்தின் அழிவும் இழப்பும் வேறு. இப்படியெல்லாம் இருந்தும் மரணத்தோடு விளையாடும் ஆசை இன்னும் நமக்குத் தீரவில்லையா? அல்லது, மரணவிளையாட்டு என்பது நமக்கு ஒரு வகையான ருசியாகி விட்டதா?

அப்படியென்றால் நாம் பெரிய விலையைக் கொடுத்துத்தான் இந்த ருசிக்கான பசியைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். ■

# ஊருக்கை ஒரு கதை! – 05

## கொக்கைக் காக்கிற மந்திரக் காக்கா

இராகன்



அவரைக் கண்டால் எல்லாரும் ஓடித்தான் ஒழிப்பினம். நிண்டு கதைக்கவோ அவரோடை தொடர்பு வைக்கவோ பயப்பிடுவினம். அவரெட்டையிருந்து கையிலை எதையும் வாங்கக்கூட விருப்பப்படாயினம். மனிசன்ரை உறவுக்காரர்கூட வீட்டுக்குப் போய்ப் புழங்கிறதில்லை. வீடு ஓலையாலை வேய்ஞ்சதுதான். நீளமான மால்போலை வீடு. முதுகை வளைச்சு குனிஞ்சுதான் வீட்டுக்குள்ளை போகவேணும். பெரிய வாசலுக்கு இரண்டு பக்கமும் உயரமான மண் திண்ணை. சாணத்தாலை மெழுகியிருக்கும். வீட்டுக்குள்ளை நுழைஞ்சால் இருட்டு மண்டிப்போய்க் கிடக்கும். உள்ளுக்கை இரண்டு இருட்டறையள். ஒண்டு எல்லாரும் புழங்கிறது. மற்றது பூட்டியேயிருக்கும். அவர் மட்டும்தான் திறந்து உள்ள போவார். உள்ளுக்கை போனாலும் உள்ளாலை பூட்டிப்போட்டுத்தான் இருப்பார். உள்ளுக்கு அவர் இருக்கிற நேரத்திலை அறையுக்குள்ளையிருந்து வாசத்தோடை புகைபுகையாய் வரும். ஊதுபத்தி, கற்பூரம், குங்குலியம் எல்லாம் சேர்ந்த ஒருவித கோயில் வாசம். ஓலைவீட்டுக்கும்மிருட்டோடை வாசப் புகையும் சேர்ந்து உள்ளுக்கை ஒரு பயமும் வரும்.

பகலைவிட இரவில் பயம் இன்னும் கூடவரும். மனிசன் மாலைப்பட உள்ளுக்கை நுழைஞ்சால் சாமத்திலைதானாம் வெளியிலை வரும். அவ்வளவு நேரமும் உள்ளுக்கையிருந்து புகை வந்துகொண்டிருக்குமாம். சில வெளியாக்களும் மாலைப்பட்ட நேரத்திலை ஆற்றை கண்ணிலையும் படாமல் வந்து சாமத்திலைதானாம் திரும்பிப் போவினம். தூர இருந்து வாறவை தங்கி நிண்டிட்டு கருக்கலுக்குள்ளை ஆருக்கும் தெரியாமல் வெளிக்கிட்டு போவினமாம். மனிசன் சாமத்திலை வீட்டுக் கிணத்திலை துலாவிலை அள்ளி அள்ளித் தலை தோயிற சத்தம் அயல் வீடுகளுக்கு கேட்கிறதாம். அயலாக்கள் பயத்திலை அவரோடை ஒண்டும் பேசுறதில்லையாம். இதெல்லாம் அவற்றை அயலிலை இருக்கிறவை சொல்லித்தான் மற்றவைக்குத் தெரியும். ஆரும் நேரிலை கண்டதில்லை.

சாமத்திலை சுடலை வரைக்கும் ஓடியோடிப் போவாராம். இறுமானத்தோடை போறவராம். சுடலையிலை போய் ஏதோ கழிச்சுப்போட்டு வாறவராம். சிலபேர் சொல்லுவினம். அவர் சுடலையிலை ஆடுறவராம். சுடலைச் சாம்பலை எடுத்து உடம்பெல்லாம் பூசுவாராம். அங்கை போய் வந்துட்டுத்தான் சாமத்திலை கிணத்திலை அள்ளித் தோயுறவராம்.

அப்பிடி அந்த அறையுக்குள்ளை என்ன செய்யிறவர் எண்டு ஆராய்ஞ்சு பார்க்கிற ஆர்வம் எல்லாருக்கும் இருந்துது. ஆனால் எவருக்கும் துணிவில்லையாம்.

அவர் இளந்தாரிப் பொடியனாக இருந்த காலத்திலை தகப்பனார் வேலைக்காக மட்டக்களப்புக்குப் போய் வந்தவராம். அவர் வேலை செய்த முதலாளியின்ரை வீட்டிலை ஏதோ புதையல் தோண்டி எடுத்தவையாம். அதை எடுக்கிறதுக்கு மலையாளத்திலையிருந்து ஆரோ ஒரு மந்திரவாதி வந்தானாம். அந்த மந்திரவாதியோடை இவற்றை தகப்பன் ஒண்டாத் தங்கினவராம். ஆக்கள் கொஞ்ச நாளிலை தோஸ்துகளாக மாறிவிட்டினமாம். மந்திரவாதி மட்டக்களப்பிலையிருந்து அவரோடை வந்து இங்கை ஊரிலை கொஞ்சநாள் தங்கியிருந்தவராம். இவருக்கு அப்ப இருபது வயசாம். படிச்சுக்கொண்டு இருந்தவராம். மாமா மாமா எண்டு அவருக்கு பின்னாலை திரியிறவையாம். இந்த மலையாள மந்திரவாதி சொல்லிக்குடுத்த வித்தையளைத்தானாம் பூட்டின அறையுக்குள்ளை செய்யிறார் எண்டொரு பேச்சு!

மலையாளத்தானின்ரை ஏடுகளை வீட்டுக்குள்ளை வைச்சு பூசை வைக்கிறவராம். படிச்சு பாடம் பண்ணுறவராம். உள்ளுக்கு பெரிய பெரிய பயங்கரமான சாமிப்படங்கள் வைச்சு கும்பிடுறவராம். பொம்மையள் வைச்சு ஏதோவெல்லாம் செய்யிறவராம். மலையாளத்தானின்ரை போட்டோவை வைச்சும் கும்பிட்டு வாறாராம்.

இத்தறுதிக்கும் ஆரும் அந்த அறையுக்கை போனதில்லை. என்னெண்டு இவ்வளவும் வெளியிலை தெரிய வந்துதோ தெரியாது!

உண்மை பொய் வேறை. ஆனால், ஆளைப் பார்த்த ஆரும் உண்மையெண்டுதான் நம்புவினம். குவளையுக்கை போன கண். சதையில்லாத முகம். மண்டையோட்டுக்கு தோல் போர்த்திவிட்டதைப் போலை. தண்ணி ஊத்தி நூர்த்த நெருப்பில் வந்த கரியின்ரை நிறம். பழுத்த வெள்ளைப் பஞ்சுத் தலை மயிர். கேராவாக வளர்ந்து தொங்கும். கண் புருவத்திலும் இமையிலும் நரைத்துப்போன மயிர். கழுத்திலை ஏதோ வகை வகையான மாலையள். நராங்கிப் போன உடம்பு. எலும்புத் தொகுதியிலை இருக்கிற அத்தனை எலும்பும் துருத்திக்கொண்டு தெரியும். வெளிறிப்படர்ந்திருக்கிற பூஞ்சல் கண். எலும்புக்கூடொன்று அலைந்து திரிவதைப்போல. பெரியவர்களுக்குக்கூட அவரைக் கண்ணும் கண்ணும் குத்திப் பார்ப்பது முடியாது.

அவருக்கு நல்ல வருமானம் வருதெண்டும் கதைக்கினம். சும்மாவே பெட்டையள் பொடியளுக்கு வசியம் போட்டு சேர்த்து வைக்கிற வேலையும் நடக்குதாம். சில நேரங்களிலை போட்ட மருந்தை விழுத்திற வேலையும் நடக்குதாம். இந்த விளையாட்டுகளாலை ஊராக்கள் ஒருதரும் அந்தாளின்ரை வீட்டிலை செம்பெடுக்கிறதில்லையாம். ஒரே ஆக்கள், சொந்தக்காரர் செம்பெடுக்காமல் இருக்கிற அளவுக்கு மச்சான் படுபயங்கரம்! அவரும் மற்றவையின்ரை வீடுவாசலுக்கு போகமாட்டார். ஆருக்காவது விசங்கடிச்சு ஆள் முடியப்போறார் எண்டால்தான் ஒருக்கால் அவரெட்டை கொண்டுபோவம் எண்டு முடிவெடுப்பினம். பார்வை பார்த்தால் சுகம் வரும் எண்டும் மனிசன் மந்திரத்தாலை செத்தவனையும் உயிர்க்கவைக்கும் எண்டு சொல்லுவினம். மற்றும்படி ஒரு காக்காகூட அங்கை போகாது.

காக்கா எண்டு சொல்லத்தான் ஞாபகம் வருது. அவற்றை மனிசியை கொக்குச் சரசு எண்டு சொல்லுவினம். வெள்ளைக்கார பொம்பிளை மாதிரி நல்ல மாவெள்ளை. சுண்டினால் இரத்தம் கண்டுறது தெரியும். அவளை அறியாத ஆருக்கும் தெரியப்படுத்தேக்கை ஊராக்கள் என்னெண்டு சொல்லுறவை தெரியுமே?.. காக்கான்ரை கொக்கு, சரசுவதி எண்டுதான். மனிசியின்ரை வடிவெண்டால். கையைக் கழுவிப்போட்டுத்தான் தொடவேணும். அப்பிடி வடிவு. சரோஜா தேவிபோலை. மனிசியும் வெளியிடத்து ஆள்தான். எங்கையோ வேலைக்கு போய்வந்த நேரத்திலை காக்காவோடை ஓடிவந்திட்டுதாம்.

காக்காவுக்கு கொக்கை வசியம் செய்து குடுத்தது அந்த மலையாளத்தான் எண்டுதான் ஒரு கதையிருக்கு. அல்லாவிட்டால் ஏணிவைச்சாலும் எட்டாத அழகி, காக்காவிலை மயங்கி, பின்னாலை வந்திருப்பாளே எண்டு ஊராருக்கு ஒரு கவலையிருக்கு. இவ்வளவு கதையும் தெரிஞ்சாலும் ஆரும் வெளியிலை மூச்சு விடுறதில்லை. விட்டால் காக்கா தன்ரை 'பவரை" காட்டிவிடுவார் எண்ட பயம்தான். உப்பிடித்தான் பொம்பிளையை கொண்டு வந்த புதிசிலை, மனிசியோடை காக்கா வெளியிலை எங்கையோ போய்வந்த நேரம் ஊராள் ஒருத்தர் மனங்கேட்காமல் 'அடேய் உனக்கு உப்பிடியொரு பொம்பிளை" எண்டு முகத்துக்கு நேரே கேட்டாராம். அடுத்த கிழமை அவர் கையும் காலும் குத்தி விழுத்தி படுக்கையிலை படுத்து எழும்பவேயில்லையாம்.

அண்டு முதல்கொண்டு கொக்குச் சரசுவை ஊரிலை ஆம்பிளையள் ஆரும் நிமிர்ந்து பாக்கிறதில்லையாம். கையைக் காலைக் குத்தி விழுந்தவர் ஏன் என்னத்துக்கு விழுந்தாரோ! சரியாக தெரியாது. ஆனால், 'கொக்கை காக்கிற மந்திரக் காக்கா" எண்டொரு பட்டப்பெயர் நிண்டு நிலைக்குது. சரசுவைக் காப்பாத்தத்தான் பூட்டின அறையுக்கை புகைக்கப் புகைக்க பூசை பண்ணிறார் காக்கா எண்டும் கதைக்கினம். அங்கை புகை கிளம்புமட்டும், சாமத்திலை துலாவிலை தண்ணி அள்ளித் தோயிற சத்தம் கேட்குமட்டும் சரசுவை ஆரும் நிமிர்ந்துகூட பார்க்காயினம். பாவம் சரசு, இவ்வளவு நாளும் கொக்காயிருந்தும் என்ன பலன்? உதுகளை கதைச்சு எனக்கேன் வீண்வம்பு! ■

> **சும்மாவே பெட்டையள் பொடியளுக்கு வசியம் போட்டு சேர்த்து வைக்கிற வேலையும் நடக்குதாம். சில நேரங்களிலை போட்ட மருந்தை விழுத்திற வேலையும் நடக்குதாம். இந்த விளையாட்டுகளாலை ஊராக்கள் ஒருதரும் அந்தாளின்ரை வீட்டிலை செம்பெடுக்கிறதில்லையாம். ஒரே ஆக்கள், சொந்தக்காரர் செம்பெடுக்காமல் இருக்கிற அளவுக்கு மச்சான் படுபயங்கரம்! அவரும் மற்றவையின்ரை வீடுவாசலுக்கு போகமாட்டார். ஆருக்காவது விசங்கடிச்சு ஆள் முடியப்போறார் எண்டால்தான் ஒருக்கால் அவரெட்டை கொண்டுபோவம் எண்டு முடிவெடுப்பினம்.**




# அதிர்புனைவாக்க அகில சினிமா

வெ.அருட்குமரன்

**1994**இல் வெளியாகி ஆஸ்கார் விருதுகளை அள்ளிச் சென்ற பல்ப் பிக்சன் திரைப்படம் பற்றி இந்த வார அதிர்புனைவாக்க அகில சினிமாவில் நோக்குவோம் வாருங்கள். பல்ப் பிக்சன் ஒரு குழப்பமான படம் என பெரும்பாலான பார்வையாளர்கள் கூறுவதுண்டு. ஆனால் பல்ப் பிக்சன் எனக்கு சிரமமான படமாகத் தோன்றவில்லை. அமரோஸ் பெர்ரோஸ், ரன் லோலா ரன், ப்ளைண்ட் சான்ஸ், இர்ரிவர்சிபிள், சங்கிங் எக்ஸ்பிரஸ் போன்ற வித்தியாசமான கதை சொல்லலைக் களமாகக் கொண்ட படங்களை ஒப்பிடும் போது பல்ப் பிக்சன் யுக்தி எளிமையானதே.

**பல்ப் பிக்சன் கதை**

இந்தப் படத்தின் கதையை நேர்க்கோட்டில் எளிதாக சொல்கிறேன். பின்னர் திரைக்கதையைப் பார்ப்போம். தன்னுடைய முதலாளியின் (கேங்க்ஸ்டர், மார்செல்லஸ் வாலஸ்) சூட்கேஸை திருடி சென்ற நபர்களிடமிருந்து மீட்க செல்லும் இரண்டு ஒப்பந்த கொலையாளிகள் (வின்செண்ட் வேகா, ஜூல்ஸ் வின்ஃபீல்ட்), மீட்க சென்ற இடத்தில் நடந்த சண்டையில் ஒருவனை சுட்டுக் கொன்றுவிட்டு சூட் கேஸை எடுத்துக் கொண்டு மற்றொருவனை அழைத்து வருகின்றனர். பின்னர் காரில் பயணம் செய்யும் போது மற்றொருவனையும் தன்னை அறியாமல் கொன்று விடுகிறார் வின்செண்ட் வெகா. இதனால் காரைச் சுத்தம் செய்து உடலை மறைக்க தன் நண்பர் வீட்டுக்குச் செல்கிறார்கள். நண்பர்கள் உதவி செய்த பின்னர் அங்கிருந்து ஒரு ஹோட்டலில் விருந்திற்குச் செல்கின்றனர்.

அங்கு ஏற்கனவே கொள்ளை அடிக்கத் திட்டமிட்டு முயற்சி செய்யும் ஒரு ஜோடி (பம்ப்கின் மற்றும் ஹைிபன்னி) இவர்களிடம் மாட்டிக்கொள்கிறது. அவர்களை விரட்டி விட்டு வெளியேறுகின்றனர். சூட்கேஸை ஒப்படைக்கும் போது அங்கு ஏற்கனவே இருக்கும் குத்துச்சண்டை வீரருடன் பேச்சில் சண்டை வருகிறது. கேங்க்ஸ்டர் தனது மனைவியை (மார்செல்லஸின் மனைவி மியாவை) வெளியே அழைத்துச் செல்லுமாறு சொல்கிறார். பின்னர் வின்செண்ட் வேகா மியாவுடன் விருந்து ஆட்டம் பாட்டம் முடிந்த பின் வீட்டுக்கு வருகிறார்கள். மியா அளவுக்கு அதிக மாக போதை பொருள் எடுத்து மயக்கமாகிறாள்.

பின்னர் தான் போதைப் பொருள் வாங்கும் வியாபாரி (லாரன்ஸ்) உதவியால் மயக்கமடைந்தவளைக் காப்பாற்றுகிறான். கேங்க்ஸ்டர் மறுபடி வின்செண்ட் வேகாவிற்கு ஒரு வேலை கொடுக்கிறார் அதில் ஒரு குத்துச் சண்டை வீரரைக் (புட்ச் கூலிட்ஜ்) கொல்ல வேண்டும். காரணம் குத்துச்சண்டை வீரர் (புட்ச் கூலிட்ஜ்) போட்டியில் தோற்பதாக பணம் வாங்கிக் கொண்டு ஏமாற்றி விடுகிறான்.

இவர்களுக்கு இடையே நடந்த சண்டையில் தப்பி விடுகிறான். அந்த குத்துச்சண்டை வீரருக்கு (புட்ச் கூலிட்ஜ்) ஒரு பிளாஸ்பேக் இருக்கும் அவரின் தந்தையின் கை கடிகாரத்தின்

> **“படத்தின் முக்கியப் பெண் பாத்திரம் உமா துர்மன். படத்திற்கு கதாநாயகன், நாயகி என்று யாரும் கிடையாது. உமா துர்மன் பாத்திரம் தாதாவின் இளம் மனைவிப் பாத்திரம். கணவனின் கையாளுடன் பார்ட்டிக்குப் போய் ஆடி வந்து, அவன் வைத்திருந்த ஹெறொயின் பொட்டலத்தை உறிஞ்சி நுரை தள்ளி சாவைக் கிட்டத்தட்ட தொடும்கட்டம்அற்புதமானபடமாக்கம்.”**

சிறப்பை பற்றி கூறுவார்.

அவரும் (புட்ச் கூலிட்ஜ்) அவரது காதலி ஃபேபியனும் தப்பி ஓடத் தயாராகும் போது மோட்டலில், புட்ச் தனது தந்தையின் தங்கக்கடிகாரத்தை மறந்து வீட்டில் விட்டதால் அதைத் திரும்பி எடுக்க வீட்டிற்க்குச் செல்கிறார்.

அங்கு தன்னைக் கொல்ல காத்திருந்த கொலையாளியை (வின்வசெண்ட் வேகா) கொன்று விட்டுத் தப்பித்துச் செல்லும் போது கேங்க்ஸ்டர் யை பார்க்கிறான்.

இருவருமே ஒரு ஓரின சேர்க்கை கும்பலிடம் மாட்டிக் கொள்கிறார்கள். இவர்கள் நண்பர்களாகி அங்கிருந்து தப்பித்து செல்கின்றனர்.

**பல்ப் ஃபிக்சன் திரைக்கதை**

நொண் - லீனியர் (non linear) கதை சொல்லல் என்பது திரையை விடப் புத்தகத்தில் எளிதாக இருக்கலாம். பல்ப் பிக்சன் திரைக்கதையை இப்படிப் புரிந்து கொள்ளலாம்.

ஒரு புத்தகத்தின் கடைசி அத்தியாயத்தின் சில பத்திகளை, எடுத்தவுடன் படித்து விட்டு மீண்டும் முதல் அத்தியாயத்திலிருந்து படிக்கத் துவங்கி, நடுவில் நான்காவது அத்தியாயத்தை மூன்றாவதாகவும், மூன்றாவதை நான்காவதாகவும் படித்து விட்டு, மீண்டும் கடைசி அத்தியாயத்தை முழுமையாகப் படித்து முடித்தால் அதுதான் பல்ப் பிக்சன் படம்.

இதில் கவனிக்க வேண்டிய ஒரே விடயம் என்னவெனில் இந்தப் புத்தகத்தை எங்கிருந்து படித்தாலும் அது வாசிப்பின்பத்தை தர வேண்டும். மற்றபடி ஒரு அத்தியாயத்திற்கும் இன்னொரு அத்தியாயத்திற்கும் தொடர்பு இருக்கலாம் அல்லது இருக்கத் தேவையில்லை. முதல், இரண்டு,மூன்று, கடைசி அத்தியாயங்கள் எனச் சொல்வது கூட ஒரு புரிதலுக்காகத்தானே தவிர முதல் கடைசி என்கிற அடிப்படைகள் எதுவும் இல்லா வடிவமாகத் தான் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

(க்ளைமாக்சில் உயிரோடு இருக்கும் ஜான் ட்ரவோல்டாவை ப்ரூஸ் வில்லிஸ் இரண்டாவது அத்தியாயத்திலேயே கொன்று விடுவார்).

இந்த நொண்- லீனியர் (non linear) வடிவம் பின் நவீனக் கூறுகளில் ஒன்றாக அணுகப்படுகிறது. பன்முகத் தன்மை, வாசிப்பின்பம் போன்றவைகளையும் இத் திரைப்படம் உள்ளடக்கியிருப்பதால் பல்ப் பிக்சனை சிறந்த பின் நவீனத்துவ படங்களில் ஒன்றாகத் தைரியமாய்ச் சேர்த்து விடலாம். இத்திரைப்படம் டான்டினோவின் மனதில் உதயமான மூன்று வகையான கதைகளைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ளது. கூலிப்படைத் தலைவன் வின்சன்ட் வேகா முதல் கதையின் கதாநாயகனாகவும், குத்துச்சண்டை வீரர் புச்ட்ச் கூலிட்ஜ் இரண்டாம் கதையின் நாயகனாகவும், வின்சன்டின் சக ஒப்பந்தக் கொலையாளி ஜூல்ஸ் வின் ஃபீல்ட் மூன்றாவது கதையின் நாயகனாகவும் வருகின்றனர். மொத்தம் ஏழு கதைத் தொடர்கள் இதில் உள்ளன - மூன்று பிரதான கதையம்சங்களையும் அடையாளங் காட்டும் விதமாக அவற்றின் வருகைக்கு முன்பாகக் கறுப்புத் திரையில் இடைத்தலைப்புகள் தோன்றுகின்றன:

1. முகவுரை - உணவு விடுதி (i)
2. “வின்சன்ட் வேகா மற்றும் மார்செல்லஸ் வால்ஸைசின் மனைவி” எனும் தலைப்புக்கான முன்னோடி.
3. “வின்சன்ட் வேகா மற்றும் மார்செல்லஸ் வால்ஸைசின் மனைவி”
4. “தங்கக் கைக் கடிகாரம்” எனும் தலைப்புக்கான முன்னோடி(a- நடந்தது, b- நடப்பது)
5. “தங்கக் கைக் கடிகாரம்”
6. “பானீதருணம்”
7. முடிவுரை-உணவு விடுதி (ii) இவ்வேழு கதைவரிசைகளையும் கால வரிசை முறைப்படி அடுக்க நினைத்தால் இவ்விதம் அடுக்கலாம்: 4a, 2, 6, 1, 7, 3, 4b, 5. கதைவரிசை 1, 7 மற்றும் 2,6 ஆகியவை ஒன்றன் மேலொன்று பகுதி-தழுவியனவாகக் காணப்படுகின்றது. இப்படத்தின் கதையமைப்பானது சுழற்சியாக வலம் வரும் ஆரம்பத்தையும் முடிவையும் உள்ளடக்கிய நிகழ்வுகளுடான உட்கதைகளின் தொகுதியாகும். கதையெங்கும் பல்வேறு உட்கதைக் கூறுகளுக்கான குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

உலக சினிமாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ‘பல்ப் ஃபிக்ஷன்’ படத்தின் சாகஸத் திரைக்கதையை எழுதி, இயக்கியவர் க்வென்டின் டாரன்டினோ. கறுப்பு நகைச்சுவை, நியோ நாய்ர் வகை என்றெல்லாம் விமர்சகர்களால் கொண்டாடப்பட்ட படம். சிறந்த திரைக் கதைக்கான ஆஸ்கர் விருதை வென்றது.

படத்தின் முக்கியப் பெண் பாத்திரம் உமா துர்மன். படத்திற்கு கதாநாயகன், நாயகி என்று யாரும் கிடையாது. உமா துர்மன் பாத்திரம் தாதாவின் இளம் மனைவிப் பாத்திரம். கணவனின் கையாளுடன் பார்ட்டிக்குப் போய் ஆடி வந்து, அவன் வைத்திருந்த ஹெறொயின் பொட்டலத்தை உறிஞ்சி நுரை தள்ளி சாவைக் கிட்டத் தட்ட தொடும் கட்டம் அற்புதமான படமாக்கம். தன்னைத் தாக்க வரும் தாதா ஒரு ஓரின வன்புணர்வில் சிக்கிக்கொள்ள, அவனை மீட்கையில் அவர்கள் உறவுகள் மாறிப்போகின்றன. தத்துவ விசாரமும் கடவுள் தேடலும் கொண்ட அடியாள் பைபிள் வாசகம் சொல்லிக் கொல்வதும், கடைசியில் அதே வாசகத்தின் பொருளை உணர்ந்து பணம் பறிக்க வரும் காதலர்களை மன்னித்து அனுப்புதலும் கவித்துவம். தன் கடைசிக் கடமையையும் செவ்வென செய்து முடித்த பின் குற்ற வாழ்க்கையிலிருந்து மீள்தல் அவனை ஒரு கர்ம யோகியாகக் காட்டுகிறது. அவரவர் தேர்வுகளுக்கும் எண்ணங்களுக்கும் ஏற்ப அவரவர் கதைகள் முடிகின்றன.

1994 க்கு முன்னர் சினிமாவில் கதை, திரைக்கதை சொல்லும் விதத்தில் நிறைய வரையறைகள் இருந்தன, அனைத்து விதிமுறைகளையும் உடைத்தெறிந்து புதிய விதிமுறைகளை பதிவு செய்ததது இந்த படம்.

1994-ல் பல்ப் பிப்சன் மற்றும் ஷாஷாங்க் ரிடம்ஷன் இரண்டு படமும் ஒரே நாளில் வெளியானது குறிப்பிடதக்கது.

**தனிச்சிறப்புக்கள்**

1. இந்தப் படத்தின் தலைப்பில் டிஷனரி விளக்கம் படத்தின் அமைப்பை நமக்கு சொல்லிவிட்டார் இயக்குனர். இதில் வரும் அனைத்து கதாபாத்திரங்களும் முழுமை பெறாதவை மற்றும் கற்பனையானவை.

2. ஒன்றுக்கு மேற்பட்ட கதையில் ஒரு கதையில் நாயகன் என்றால் மறு கதையில் அவர் வில்லன் என வித்தியாசமாக அனைத்து கதைகளும் எதிரும் புதிருமாக எழுதப்பட்டு சுவாரஸ்மான சந்திப்புக்களைக் கொண்டிருக்கும்.

3. திரைக்கதை தான் படத்தில் ஆஸ்கார் வென்ற ஆணிவேர், ஆரம்பம், நடுப்புள்ளி மற்றும் முடிவு என திரைக் கதை எழுதுவது பல நூறு ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள திரைக்கதை சொல்லும் விதம். இப்படத்தில் வரும் அனைத்து கதைகளுமே இந்த விதியைப் பின்பற்றாது.

4. வசனங்கள் மிகவும் முக்கியம். படத்தின் வசனத்திற்கும் அதனுடன் வரும் காட்சிகளுக்கு சம்பந்தம் இல்லாதது போல தோன்றும். நிறைய காட்சிகளை வசனமாக சொல்லியிருப்பார். குறிப்பாக வின்செண்ட் வேகா மற்றும் ஜூல்ஸ் 10 நிமிட உரையாடல் 30 நிமிட காட்சியை மறைமுகமாக சொல்லியிருப்பார்.

5. அந்த சூட் கேஸ் பெட்டியில் என்ன இருக்கிறது என யாருக்கும் தெரியாது. ஆடியன்ஸ் யூகத்திற்கு இயக்குனர் சொல்லாமல் விட்டுவிட்டார்.

6. பாப் கல்சர் ரெபரன்ஸ் - அள்ளி தெளித்து வைத்திருப்பார், படம் பார்க்கும் எமக்கு பழைய படங்கள் பரீட்சயமாக தெரிந்து இருந்தால் இது வரம் இல்லையென்றால் சாபம்.

இதனால் நிறைய ஆடியன்ஸை இந்தத் திரைப்படம் சென்றடைவதில்லை.

7. கொடூரமான வன்முறைக் காட்சிகள் இருந்தாலும் டார்க் ஜூமர் மூலம் நம்மை விரித்துக் கொண்டு பார்க்க வைப்பவர்,

இந்தப் படத்தில் நிறைய காட்சிகளில் விண்வெண்ட் வேகா கழிவறைக்குச் செல்கிறார். அவர் செல்வதற்கு முன் அமைதியாகவும் திரும்பி வரும்போது முற்றிலும் மாறுபட்ட வன்முறை கொண்ட இடமாகவும் இருக்கும். இது வெறும் சுவாரஸ்மாகத் திரைக்கதை அமைக்க எழுதவில்லை. நடைமுறையில் கொக்கைன் உபயோகிப்பவர்களுக்கு அதன் பாதாகமான விளைவாக அதிக வயிறு கோளாறு ஏற்படும் இதனை மறைமுகமாகக் கூறியிருப்பார் இயக்குனர். ■

# பிரியாணி

## வயது வந்தவர்களுக்கு மட்டும்!

அபூர்வன்



இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் என எந்த மதமானலும் சமரசமற்று விமர்சிக்கும் பண்போடு மலையாள சினிமா அமைந்துள்ளது. கேரளத்தின் அசாத்திய துணிச்சலின் அடையாளமாக 'பிரியாணி' திரைப் படத்தினைக் கருதலாம். வயது வந்தவர் களுக்கான பிரதி என்பதால் இப் படத்தினைத் தனியனாக தரிசித்தலே ஏற்புடையது! வறிய முஸ்லிம் பெண்ணொருத்தியின் வலியை இயக்கு னர் Sajan Baabu பார்வையாளனிடம் தொற்றச் செய்துள்ளார். கூடவே ஒவ்வாமையும், அதிர்ச்சியும் இணைந்து கொள்கின்றன.

வெளிநாடு சென்ற தம்பி ISIS தீவி




ரவாதியாவதால் நாயகி பன்முக நெருக்கடியினை எதிர்கொள்கிறாள். வீட்டுக்கு ஊர்மக்கள் கல் எறிகிறார்கள். காவல்துறை விசாரணையை முன்னெடுக்கிறது. கணவன் விவாகரத்து செய்கிறான். ஜமாத் ஒதுக்கி வைக்கிறது. இந் நிலையில், மனப்பிறழ்வான தாயோடு தாய் நாட்டுக்குச் செல்கிறாள். தம்பியின் மரண செய்தியால் தாயையும் இழக்கின்றாள். “அனைவரையும் அழைத்து விருந்திட வேண்டும்” என்ற தாயாரின் கனவை நிறைவேற்ற தன்னுடலை விற்கத் துணிகிறாள். இத் தருணத்திலே காவல்துறை வன்புணர்ச்சி செய்யமுயல, ஏற்கனவே கர்ப்பமுற்றிருந்ததால் கருச் சிதைவு நேர்கிறது. காவல்துறையினர் உட்பட அனைவரையும் அழைத்து பிரியாணி விருந்திடுகின்றாள். குறைப்பிரசவச் சிசுவை பிரியாணியிலே கலந்து சமூ கத்தினைப் பழி தீர்க்கிறாள். உடனிருக்கும் முதியவர் ஒருவர் “தவ றைச் சீர் செய்ய இன்னோர் தவறு சரியாகாது” என நீதியுரைக்க தற்கொலை புரிவதோடு படம் நிறைவு பெறுகிறது.


அதிர்ச்சி தரும் காட்சிகளின் கோவை யாக 'பிரியாணி' அமைந்துள்ளது. பிரதான கதாபாத்திரத்திலே தோன்றும் நடிகையான முயனெ முரளசரவனெ அவர்களின் துணிச்சல் மிகு நடிப்பு வியப்பிற்குரியது. கடற்கரை மலங் கழிப்பு, சுயஇன்பம், சுன்னர் சடங்கு, புணர்ச்சி போன்ற பல காட்சிகள் இந்தியப் பண்பாட்டுப் பெருவெளியில் ஒவ்வாமையினையே உண்டாக்கும். எனி னும் நடப்பியல் நிகழ்வுகளின் வெளிப் பாட்டைக் கலைகள் காலங்காலமாக வெவ்வேறு வகையிலே பதிவு செய்த வண்ணமேயுள்ளன. ஜமாத் நிராகரிப் பால் நிகழும் எரியூட்டலை ஏற்றாலும், கைபேசியில் குறுஞ்செய்தியாக முத்த லாக் கேட்பது நெருடலைத் தருகிறது. யதார்த்த முரண் போலத் தோன்றுகிறது. Flavour of Flesh என்ற உபதலைப்பினை உச்சக் காட் சியில் உணர்ந்து கொள்கி றோம். ஆணா திக்க எல்லைகளை எளி தாக தாண்டிச் செல்லும் பெண்ணின் உளவி யலை இத் திரைப்படம் வெளிப்படை யாகப் பேசுகின்றது. விமர்சனத்தை வாசித்து விட்டு யாரேனும் படத்தினைப் பார்க்க விரும்பினால் தனியனாக அமர்ந்து பார்க் குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

---

யாழ் சத்யா

# அவள் அம்மாவாகிறாள்...

அத்தியாயம் - 05



அன்னையாக இவளுக்கு எத்த னையோ பொறுப்புகள் ஆனால் தந்தை ஆனந்தனின் வாழ்க்கையிலோ எந்த மாற்றமும் இல்லை. குழந்தை பிறந்ததற்குப் பார்ட்டி கொடுப்பதில்தான் பிஸியாக இருந்தான். ஒருநாள் வங்கி ஊழியர்களுக்கு, இன்னொரு நாள் பாடசாலை நண்பர்க ளுக்கு, இன்னொரு நாள் பல்கலைக்கழகத் தில் கூடப் படித்தவர்களுக்கு, இன்னொரு நாள் கிரிக்கெட் கிளப் நண்பர்களுக்கு என அவனுடைய நாட்கள் ரம்மியமாகவே சென்றன.

குடித்துக் கும்மாளமடித்து விட்டு நடுச்சாமத்தில் வீட்டுக்கு வந்து தூங்கி னான் என்றால் கும்பகர்ணன்தான். அரு மையாக வீட்டிலிருக்கும் நேரங்களில் கூடத் தாரணி பிள்ளையைத் தூக்கி வைத்திருக்கும் போது கொஞ்சுவானே தவிர, அவன் கைகளில் தூக்க மாட் டான். கேட்டால் கீழே போட்டுவிடு வேனோ என்று பயமாக இருக்கிறது என்பான். ஆனால் விதம் விதமாக புகைப் படம் எடுத்து பேஸ்புக்கிலும் இன்ஸ் டாகிராமிலும் 'மை சன்' என்று ஸ்டேட் டஸ் போட மட்டும் மறப்பதில்லை.

“மகனைக் கொஞ்ச நேரம் பாருங்கோவனப்பா.. பால் குடிச்சிட்டான். அழுதான் என்றால் நாப்கின்தான் மாத்த வேணும். கொஞ்சம் பார்த்து மாத்தி விடுங்கோவன்..”

“நான் எப்பிடி மாத்துறது தாரணி? ஏன் நீ

> **பிளீஸ் ஆனந்த்.. என்னால உண்மையா முடியேல்ல.. ஒரேயொரு நாள் இரவு நீங்கள் பிள்ளையைப் பார்த்துக் கொள்ளுங்கோ.. நான் கொஞ்சம் நித்திரை கொண்டு எழும்பிறன்.. பால் பம்ப் பண்ணி வைச்சிடுறன்.**

என்ன செய்யப் போறாய்? பிள்ளையைக் கவனிக்கிறதை விட வேறென்ன வேலை இருக்கு உனக்கு..? சமையல், வீட்டு வேலையெல்லாம் மாமி பாக்கிறா..”

பதில் கூறி விளக்கும் திராணியற்று ஓய்வுக்கு ஏங்கிய உடலோடும் தூக்கமற்ற விழிகளோடும் பிள்ளையோடு கண்ணயர்வாள் தாரணி. பத்தாம் நிமிடம் பிள்ளை சிணுங்கும் குரலில் துடித்துப் பதைத்து எழுந்து பிள்ளை யைக் கவனிக்க ஆரம்பிப்பாள்.

“தாரு ஒவ்வொரு மாதமும் பிறந்த திகதியண்டைக்கு அந்த மாத நம்பரை பக்கத்தில வைச்சு போட்டோஸ் எடுத்து வைப்பம் என்ன?”

“ஓமப்பா.. நல்ல ஐடியா தான்.. இவனைக் கொஞ்சம் மடியில வைச்சிருங்கோவன்.. நான் குளிச்சிட்டு வாறன்..”

“இன்னும் கொஞ்சம் வளரட்டும் தாரு.. எனக்குத் தூ க்கவே பயமாக் கிடக்கு..”

“என்னப்பா நீங்கள்.. நான் மட்டும் என்ன முந்தித் தூக் கிப் பழகினானே என்ன.. தூக்கத் தூக்கத்தானே பழகும்..”

“மாமியை வைச்சிருக்கச் சொல்லேன் தாரு..”

“அம்மா கடைக்குப் போய்ட்டா.. அதுதானே உங்களைக் கேட்டனான்.”

சத்தியமா எனக்கு உங்களைப் பார்க்க எரிச்சலாக் கிடக்கு.. எப்ப பார்த்தாலும் அந்த போனோட தான் காலத்தை ஓட்டினபடி.. வேலை, ப்ரெண்ட்ஸ்.. வீட்டில நிக்கிற நேரம் முழுக்க டீவி, இல்லை என்றால் போன்.. கொஞ்சமாவது எனக்கு உதவி செய்யலாம் தானே..

பேஸ்புக்ல போட்டோஸ் போட மட்டும்தான் பிள்ளை.. மற்றபடி ஒரு கொஞ்ச நேரம் கூடப் பிள்ளையை பாக்க ஏலாது.. இப்ப எத்தினை நாளாக நான் நித்திரை இல்லாமக் கஷ்டப்படுறன்.. கொஞ்சம் நீங்களும் பார்த்தால் அப்பிடி என்ன குறைஞ்சு போய்டுவியள்?”

“என்ன தாரு.. கனக்கக் கதைக்கிறாய்.. ஆம்பிளையா நான் உழைச்சுக் கொண்டு வந்து முழுச் சம்பளமும் உன்ர கையில தரேல்லையே.. அப்ப பிள்ளை பெத்து வளர்த்து வீட்டைப் பாக்கிறது உன்ர வேலை தானே.. ஒரு பிள் ளைக்கே இந்தப்பாடு படுறாய்.. இந்த வெளிநாட்டில உள்ள பொம்பிளையள் எல்லாம் ஒருத்தரிட உதவியும் இல்லாம தனியாகப் பெத்து வளர்க்கேலையே..”

“ஏன் நானும் தானே வேலைக்குப் போறன் ஆனந். இவ்வளவு நாளும் தடிமனோ காய்ச்சலோ வீட்டு வேலை எதிலயாவது குறை வைச்சனானே.. இப்ப என்னால உண்மையா ஏலாமக் கிடக்கு என்றுதானே கேட்கிறன்.. எனக்குச் சரியா நித்திரை கொள்ளாமல் ஏதோ செய்யுதுப்பா.. ஒரே எரிச்சலாக் கிடக்கு.. விசர் பிடிக்கிற போல கிடக்கு..

பிளீஸ் ஆனந்த்.. என்னால உண்மையா முடியேல்ல.. ஒரேயொரு நாள் இரவு நீங்கள் பிள்ளையைப் பார்த்துக் கொள்ளுங்கோ.. நான் கொஞ்சம் நித்திரை கொண்டு எழும்பிறன்.. பால் பம்ப் பண்ணி வைச்சிடுறன்..”

“லூசு மாதிரிக் கதைக்காதை தாரணி.. பிள்ளைக்குப் போச்சியில பாலைக் குடுத்தால் சொண்டு தடிச்சுப் போய்டும் என்று வாட்ஸ்அப்ல வந்திருக்கு. உலகத்தில நீ மட்டும் தான் புதினமாகப் பிள்ளை பெத்த போல கதைச்சுக் கொண்டிருக்கிறாய்.. என்ர அம்மா, உன்ர அம்மா எல்லாம் அஞ்சாறு பிள்ளை பெத்து வளர்க்கேலையோ? அம்மம்மா பன்னிரெண்டு பிள்ளை பெத்து வளர்த்து ஆளாக்கேலையோ.. ஏன் இந்த ஆடுமாடுகள் எல்லாம் குட்டி போடேல்லயோ..? ஒரேயொரு பிள்ளையைப் பெத்துப் போட்டு நீ போடுற சீன் இருக்கே..”

“ஏன் ஆனந்த் புரிஞ்சு கொள்ளுறீங்கள் இல்லை? உங்கட அம்மம்மா, என்ர அம்மா எல்லாம் பெத்து வளர்த்தவைதான் இல்லை என்று சொல்லேல்ல.. அவையிட திறமை எனக்கு இல்லை என்று வையுங்கோவன். இவன் உங்களுக்கும் பிள்ளை தானே.. கொஞ்சம் பார்த்துக் கொண் டால் என்ன குறைஞ்சு போய்டும் உங்களுக்கு? இப்பவே இப்பிடி இருக்கிறனியள் இனி பிள்ளை வளர வளர என்ன செய்வியள்? பிள்ளை என்ன குழப்படி செய்தாலும் எல்லாம் இனி என்ர தலையில தான் விழுமாக்கும்.. ஏன்தான் இந்தப் பிள்ளையைப் பெத்தனோ தெரியேல்ல..”

“தாரணி..! என்ன விசர்க்கதை கதைச்சுக் கொண்டிருக்கிறாய்..? இப்ப என்ன நடந்த என்று உப் பிடிக் கதைக்கிறாய்? ஆறு மாசமாப் பிள்ளை இல்லை இல்லை என்று எவ்வளவு கவலைப் பட்டுக் கொண் டிருந்தாய்..”

“ஓமோம்.. பிள்ளை பெத்தா இப்பிடிக் கிடந்து தவிக்கோணும் என்று அப்ப தெரியாதே.. அதுதான் அப்ப கவலைப்பட்டனான்.. இந்த ஒரு பிள்ளை போதும் என்ர ஜென்மத்துக்கும்..”

கூறிக் கொண்டே அழத் தொடங்கினாள் தாரணி. அதைக் கண்ட ஆனந்தும் கலங்கி விட்டான்.

“இங்க பார் தாரு.. இப்ப எதுக்கு அழுகிறாய்? ஒண்டுமே ஆகாததுக்கு ஏன் டென்சன் ஆகிறாய்? சத்தமாக் கத்தாதை.. பிள்ளை எழும்பப் போறான்.. நீ போய் குளி.. எழும்பினால் நான் பாக்கிறன்..”


ஒன்றரை வருட இல்லறத்தில் தேவையற்ற சண்டைகள் இன்றி அமைதியாக அனைத்தையும் கையாள்பவள் இப்போதெல்லாம் எடுத்ததற்கும் எரிச்சலடைந்து கோபப்பட்டு அழுவதன் காரணம் புரியாமல் குழம்பினான் ஆனந்தருபன்.

தாரணி பழையபடி மாறுவாளா?

**அவள் தொடர்வாள்..**

அவதானி

# அரைநூற்றாண்டுக்கு முன்பிருந்தே நீளும் கரங்கள்



இலங்கையில் உருவாக்கப்பட்டிருக்கும் போர்ட் சிட்டி என்ற துறைமுக நகரம், சமகால கொரோனோவுக்கு மத்தியில் பரவலாக பேசு பொருளாகியிருக்கிறது. மக்களும் அரசும் அக்கறையோடு சிந்தித்து செயலாற்றினால், கொரோனோ கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். அல்லது காலப் போக்கில் மறைந்துவிடும். ஆனால், போர்ட்சிட்டியை கட்டுப்படுத்த முடியாது. காலப்போக்கில் அது எத்தகைய விளைவுகளை உருவாக்கும் என்பதையும் சொல்லமுடியாது. போர்ட்சிட்டி தொடர்பில் நாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பில் அரசு வெற்றிபெற்றுள்ளது. குறிப்பிட்ட துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்திற்கு அரசின் அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியிருந்தாலும், உச்சநீதிமன்றம் விதந்துரைத்துள்ள திருத்தங்களை ஏற்றுக் கொள்வதற்கும் அமைச்சரவை இணங்கியிருக்கிறது.

இடையில் பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷ ஒரு செய்தியை சொன்னார். போர்ட் சிட்டியில் இலங்கையர்களுக்கு 75 சதவீதம் வேலை வாய்ப்பு வழங்குவதற்கு சீனாவுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்பதுதான் அச்செய்தி.

ஏற்கனவே அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்கு தாரை வார்க்கப்பட்டிருக்கும் பின்னணியிலிருந்து மட்டுமல்ல, சுமார் அரைநூற்றாண்டு காலத்திற்கு முன்பிருந்தே, சீனாவின் கரங்கள் இலங்கையில் நீண்டு வந்திருக்கும் வரலாற்றிலிருந்தும் புதிய துறை முகநகரத்தை நாம் அவதானிக்க முடியும்.



1970 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான கூட்டரசாங்கத்தின் காலத்தில்தான் கொழும்பு - 07 இல் கறுவாக்காடு என்ற செல்வந்தர்கள் வாழும் பிரபலமான பகுதியில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இது முழுக்க முழுக்க சீன அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட பிரம்மாண்டமான மண்டபம். அதே மண்டபத்தில்தான் ஸ்ரீமா, அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டையும் நடத்தி, சில வருடங்கள் அதன் தலைவி யாகவும் விளங்கினார். அணிசேரா நாடுகளில் பிரிட்டன், சீனா, அமெரிக்கா, ஜேர்மன், கனடா, பிரான்ஸ் முதலான வல்லரசுகள் அங்கம் வகிப்பதில்லை.

குறிப்பிட்ட சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் சீனப்பிரதமர் சூஎன்லாயும் கலந்துகொண்டார். இரண்டு நாட்டுப் பிரதமர்களும் மண்வெட்டியால் நிலத்தைக்கொத்திய காட்சிகளும் அக்காலப்பகுதியில் ஊடகங்களில் வெளியானது.

சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் ஏழாம் பொருத்தம் இருந்த அக்காலத்தில், ரஷ்யாவும் அன்றைய ஸ்ரீமா அரசையும் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களையும் திருப்திப்படுத்துவதற்காக காலிமுகத்திடலில் அமைந்திருந்த நாடாளுமன்ற வளாகத்தில் ஏற்கனவே ஒரு பண்டாரநாயக்கா சிலை இருக்கத்தக்கதாக மற்றும் ஒரு புதிய வெண்கலச் சிலையை நிர்மாணித்து அனுப்பியது. அதனை வடிவமைத்தவர் சோவியத் நாட்டைச்சேர்ந்த சிற்பி லெவ் கேர்பிள்.

அக்காலப்பகுதியில் கொழும்பில் இயங்கிய சோவியத் தகவல் பிரிவிலிருந்து ( நவஸ்தி ) வெளியான சோவியத் நாடு என்ற இரு மொழி ( தமிழ் - சிங்களம் ) மாத இதழில் அந்தச் சிலையை வடிவமைத்தவர் பற்றிய செய்திகள் படங்களுடன் வெளிவந்தன.

1965 ஆம் ஆண்டு காலத்தில் கட்டுநாயக்கா விமான நிலையம் புனரமைக்கப்பட்ட போது, அவ்வேளையில் பிரதமராக பதவியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் டட்லி சேனா நாயக்கா அதனை திறந்து

> **சீன அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட பிரம்மாண்டமான மண்டபம். அதே மண்டபத்தில்தான் ஸ்ரீமாவோ, அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டையும் நடத்தி, சில வருடங்கள் அதன் தலைவியாகவும் விளங்கினார். அணிசேரா நாடுகளில் பிரிட்டன், சீனா, அமெரிக்கா, ஜேர்மன், கனடா, பிரான்ஸ் முதலான வல்லரசுகள் அங்கம் வகிப்பதில்லை. குறிப்பிட்ட சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் சீனப்பிரதமர் சூ-என்-லாயும் கலந்துகொண்டார். இரண்டு நாட்டுப் பிரதமர்களும் மண்வெட்டியால் நிலத்தைக்கொத்திய காட்சிகளும் அக்காலப்பகுதியில் ஊடகங்களில் வெளியானது.**

வைத்தார். கொழும்பு வீதியிலிருந்து கட்டுநாயக்காவில் வலது பக்கமாக திரும்பும் விமான நிலையத்திற்கான பாதைக்கு கனடா - இலங்கை நட்புறவுப்பாதை என்றும் பெயர் சூட்டப்பட்டது. காரணம் அந்த விமான நிலையம் புனரமைக்கப்படுவதற்கு கனடா அரசு இலங்கைக்கு உதவியது.

பின்னாளில் 1970 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமரானதும் அந்த விமானநிலையம் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் என்ற பெயருக்கு மாற்றப்பட்டது.

முன்னர் கட்டுநாயக்கே என்று அந்த விமான நிலையத்தில் ஒலிபெருக்கிகளில் ஒலித்த சொல், பிறகு பண்டாரநாயக்கே என்று மாறியது. எப்படியோ இரண்டிலும் நாயக்கே வந்துவிட்டமையால் அறிவிப்பாளர்களுக்கும் சிரமம் இருக்கவில்லை.

சீனர்கள் கடும் உழைப்பாளிகள். துரிதமாக வேலை செய்யக்கூடியவர்கள். பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் அமைக்கப்பட்டபோது, அங்கு பணியாற்றிய ஒரு சீன கட்டடத்தொழிலாளி நாளொன்றுக்கு எட்டு மணி நேரத்திற்குள் இரண்டாயிரம் செங்கற்களை வைத்து சீமெந்து பூசி நிர்மாணவேலைகளை மேற்கொண்ட செய்திகள் அவ்வேளையில் ஊடகங்களில் வெளிவந்தன.

இவ்வாறு அரைநூற்றாண்டுக்கு முன்பிருந்தே, அன்றைய சீனப்பிரதமர் சூஎன்லாய் காலத்திலிருந்து இன்றைய சீன அதிபர் ஷி ஜின்பிங்கின் காலம் வரையில் படிப்படியாக சீனாவின் கரங்கள் இலங்கையை நீட்டியவாறே இருக்கின்றன.

இது இவ்விதமிருக்க, இலங்கையில் வீதி நிர்மாணம், மற்றும் கரும்பு பயிர்ச்செய்கை முதலானவற்றிலும் சீனா முதலீடு செய்துள்ளது. கரும்பு உற்பத்திக்கு வழங்கப்படும் நிலங்களின் நிலத்தடி நீரைக் கரும்பு வேகமாக உறிஞ்சுவதனால், மக்களின் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் குறித்தும் சில வருடங்களுக்கு முன்னர் பேசப்பட்டது. இவ்வாறு நிலத்தை, வீதியை, இந்து சமுத்திரத்தை , கட்டிட நிர்மாணங்களை படிப்படியாக ஆக்கிரமித்து வரும் சீனா, இலங்கை பொலிஸ் நிலையங்களில் நவீன தொடர்பாடல் வசதிகளை மேம்படுத்துவதற்கும் சாதனங்களை அன்பளிப்புச் செய்துள்ளது.


சட்டமா அதிபர் திணைக்களத்தில் இலத்திரனியல் நூலகமும் சீன அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. அதனால், அங்கு காணப்பட்ட காட்சிப்பலகையில் சீன மொழியும் இடம்பெற்றது. படிப்படியாக வீதிகளுக்கும் நகரங்களுக்கும் சீனமொழி பிரவேசித்து வருவதிலிருந்து இலங்கை எங்கிருந்து எங்கே செல்கிறது என்பதை அவதானிக்கலாம்.

வடக்கு - கிழக்கில் இராணுவத்தின் பிரசன்னத்தை, யுத்தம் முடிந்த பின்னரும் அதிகரித்த அரசுகள் அதில் பணியிலிருக்கும் சிங்கள பௌத்த இராணுவத்தினரின் வழிபாட்டுத்தேவைக்காக புத்த விகாரைகளை கட்டத் தொடங்கியதை கவனித்திருப்போம். யாழ்.ரயில் நிலையத்தில் சிற்றுண்டிச்சாலை நடத்துபவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சகோதரர்கள்தான். இது போன்ற தேவைகள் போர்ட் சிட்டியின் ஊடாக வரவிருக்கும் சீனர்களுக்கும் உருவாகும். ஊருக்கு ஊர் சீன சிற்றுண்டிச்சாலைகள் ( Chinese Restaurant ) முளைக்கும் சாத்தியங்கள் உண்டு.

சைனா டவுன், சைனா பஸார் பார்த்தவர்கள் அல்லவா நாங்கள். விரைவில் விமான நிலையங்கள், ரயில் நிலையங்களிலும் சீன மொழியில் ஒலிபரப்புச் சேவைகள் நிகழும் எனவும் எதிர்பார்க்கலாம்.

சீன அதிபரின் பதவிக்காலத்தை எதிர்வரும் 2023 ஆம் ஆண்டிற்குப் பின்னரும் நீடித்துக்கொள்வதற்கு ஏற்றவாறு அந்நாட்டின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி பரிந்துரை செய்திருக்கும் செய்தி, இலங்கையில் ராஜபக்‌ஷ சகோதரர்களின் அரசுக்கு பால் வார்க்கும்.

பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷ கடந்த ஆண்டு பதவியேற்றசமயத்தில், அந்த நிகழ்வு களனி ரஜமகா விகாரையில் நடந்தபோது, சீன அதிபரின் வாழ்த்துச்செய்தியை இலங்கை சீனத்தூதரகம் கையளித்ததையும் நாம் மறந்துவிடலாகாது. ■



# இனியும் முன்னிறுத்த போவது எதனை? தீர்வையா? இனவாதத்தையா?

கருணாகரன்







இலங்கையில் அமைதிக்கும் சமாதானத்துக்கும் அரசியல் தீர்வுக்குமாக வேலை செய்வது மிக மிகக் கடினமானது. இனவாதத்தைத் தொடருவது இலகுவானது. இதை விளங்கிக் கொள்வதற்குப் பெரிய ஆராய்ச்சிகள் ஒன்றும் தேவையில்லை. அதிகமாகப் படித்திருக்க வேண்டியதுமில்லை. மிகச் சாதாரணமாகக் கவனித்தாலே இதைப் புரிந்து கொள்ள முடியும்.

முதலில் நீங்கள் படிக்கின்ற பத்திரிகைகள், இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள் போன்றவற்றைக் கவனியுங்கள். இதில் 99 வீதமானவையும் சமாதானத்தைக் குறித்து - அதை வலியுறுத்திச் செய்திகளை வெளியிடுவது குறைவு என்பதைக் கண்டு பிடித்து விடலாம். தீர்வுக்காகவும் மெய்யான சமாதானத்துக்குமாக வேலை செய்கிறோம். அதை நோக்கி நகர்கிறோம் என்று அர்த்தமாகும்.

ஒவ்வொரு தேர்தலின்போதும் வெற்றியடைவது இனவாதச் சக்திகளே. அதனால்தான் இனவாதமும் தீர்வுக்கு எதிரான போக்கும் வளர்கிறது. இனவாதிகள் கொழுக்கிறார்கள். இனவாதத்தை வளர்க்கும் ஊடகங்கள் செழிக்கின்றன. இதில் ருசிப்படப்பட ஒவ்வொரு கட்சியும் ஏட்டிக்குப் போட்டியாக இனவாதத்தை வளர்க்கும் விதமாகவே பேசுகின்றன. அந்தப் போக்கிலேயே செயற்படுகின்றன. இனவாதத்தில் உள்ளோடியிருக்கும் ஏட்டிக்குப் போட்டித்தன்மை என்பது அத்தனையும் இனவாத அடிப்படையிலேயே செய்திகளை எழுதுகின்றன - தயாரிக்கின்றன. இதற்குக் காரணம், பெரும்பாலான ஊடகவியலாளர்கள் இனத்துவ அடிப்படையிலேயே இயங்குகிறார்கள். இவற்றில் அரசியல் ஆய்வுகளை எழுதுவோரில் 99 வீதமானவர்களும் இன நிலைப்பட்டே தங்கள் கருத்துகளையும் நிலைப்பாடுகளையும் முன்வைக்கின்றனர் என்பதே. மறந்தும் சமாதானத்துக்கான வலியுறுத்தலையும் அதற்கான வழிப்படத்தையும் அதற்கான அர்ப்பணிப்பையும் இவர்கள் முன்வைப்பதில்லை. வேண்டுமென்றால் மாறுதலாக சமாதானத்துக்கும் தீர்வுக்குமாக முன்வைக்கும் ஊடகங்களையும் ஆய்வாளர்களையும் அரசியல் கருத்துரைஞர்களையும் ஒரு சிறிய பட்டியலிட்டுப் பாருங்கள். சமாதானத்துக்கான முயற்சிகள் எவ்வளவு பலவீனமானவை என்று தெரியும்.

> அமைதிக்கும் அரசியல் தீர்வுக்கும் சமாதானத்துக்குமாக நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் ஒவ்வொரு குடும்பமும் எவ்வளவு வேலைகளைச் செய்கிறீர்கள்? இதற்காகக் கொஞ்ச வேலையாவது நாம் செய்ய வேண்டும் என்ற சிந்தனையாவது உங்களிடம் உள்ளதா? குறைந்த பட்சம் இனவாத சக்திகளை விட்டு உங்களைத் தூர வைக்க வேணும் என்ற எண்ணமாவது உங்களிடம் உள்ளதா? மெய்யாகவே அமைதிக்கும் சமாதானத்துக்கும் அரசியல் தீர்வுக்குமாகச் சிந்திக்கின்ற - இனவாதமற்ற சக்திகளை ஆதரிக்க வேண்டும் என்று சிந்தித்துள்ளீர்களா? அவ்வாறான சக்திகளை இனங்கண்டுள்ளீர்களா? அவை சிறிய சக்திகளாக இருந்தாலும் அவற்றின் மீது நம்பிக்கை வைத்து அவற்றை வளர்த்தெடுக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்களா?

இது ஒரு பக்கமென்றால் அடுத்த பக்கத்தில் நீங்கள். அதாவது, உங்களைப் பற்றியது. அமைதிக்கும் அரசியல் தீர்வுக்கும் சமாதானத்துக்குமாக நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் ஒவ்வொரு குடும்பமும் எவ்வளவு வேலைகளைச் செய்கிறீர்கள்? இதற்காகக் கொஞ்ச வேலையாவது நாம் செய்ய வேண்டும் என்ற சிந்தனையாவது உங்களிடம் உள்ளதா? குறைந்த பட்சம் இனவாத சக்திகளை விட்டு உங்களைத் தூரவைக்க வேணும் என்ற எண்ணமாவது உங்களிடம் உள்ளதா? மெய்யாகவே அமைதிக்கும் சமாதானத்துக்கும் அரசியல் தீர்வுக்குமாகச் சிந்திக்கின்ற - இனவாதமற்ற சக்திகளை ஆதரிக்க வேண்டும் என்று சிந்தித்துள்ளீர்களா? அவ்வாறான சக்திகளை இனங்கண்டுள்ளீர்களா? அவை சிறிய சக்திகளாக இருந்தாலும் அவற்றின் மீது நம்பிக்கை வைத்து அவற்றை வளர்த்தெடுக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்களா? நீங்கள் வீட்டில் ஒரு தென்னையை வளர்க்கும்போது அது பத்து ஆண்டுகளுக்குப் பிறகு பயன் தரும் என்று தெரிந்துதானே நம்பிக்கையோடு அதைச் செய்கிறீர்கள். பிறகு அந்தத் தென்னை உங்களுக்கு மட்டுமல்ல, உங்கள் தலைமுறைகளுக்கும் அது பயன் தருகிறது. அப்படியென்றால் சமாதானத்துக்கான - மக்கள் அரசியலுக்கான சக்திகள் - கட்சிகள் - சிறியவை என்றாலும் அவற்றை ஒரு தென்னையைப்போல, பனையைப் போல நீடித்துப் பயன் தரக் கூடியவையாகக் கருதி அவற்றை நாம் ஆதரிக்க வேண்டும். அப்படிச் செய்கின்றவர்கள் எத்தனை பேர்?

இவற்றுக்கான பதிலைக் கண்டாலே நாம் அரசியல் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் நன்றாகவே இருக்கும். ஏனென்றால் அதிலே உள்ள எதிரும் புதிருமான தன்மை என்பது நம்முடைய ரத்தத்தைச் சூடாக்குவது. இரத்தம் சூடாகுவது என்பதே ஒரு போதைதான். மதுவை நாம் பருகும்போது உண்டாகும் கிளர்ச்சியைப் போலத்தான் இதுவும்.

இல்லையென்றால் இலங்கைத்தீவிலே இனவாதத்தை வளர்த்து போர் வரை அதைக் கொண்டு வந்து பெரும் அழிவில் இந்த நாட்டை விட்டதற்கு மூன்று பெருங்கட்சிகள் பொறுப்பெடுக்க வேண்டும். ஒன்று ஐ.தே.க. மற்றது சிறிலங்கா சுதந்திரக்கட்சி. மூன்றாவது தமிழரசுக்கட்சி. இவை மூன்றும்தான் ஏதோ வகையில் மறுபடியும் இப்பொழுது அரசியல் அரங்கில் தலைமைச் சக்திகளாக உள்ளன. அப்படியென்றால் எப்படி நாடு உருப்படும்?

இப்பொழுது உங்களுடைய இதயத்தைத் தொட்டுச் சொல்லுங்கள், இலங்கையில் இனவாத மல்லாத, மெய்யாகவே அரசியல் தீர்வுக்காக உழைக்கின்ற கட்சிகள் எவை என்று? எந்தத் தலைவர்கள் அமைதிக்கும் சமாதானத்துக்குமாகத் தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள் என்று. எது வந்தாலும் இனவாதத்தைக் கடந்து ஒரு நீதியான தீர்வை, சமாதானத்தை எட்டுவோம், இந்த நாடு ஒரு பல்லின சமூகங்கள் வாழ்கின்ற நாடு, பன்மைத்துவமே இங்கே பொருத்தமான - சரியான தீர்வு என்று நம்புகின்ற - அதை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்ற தலைவர்கள் யார்? கட்சிகள் எவை? இந்த நோக்கில் இவை இதுவரையில் ஒரு வார்த்தையேனும் பேசியிருக்கின்றனவா? இப்போது கூடப் பேசத் தயாரா? இன்னும் பௌத்தத்துக்கு முன்னுரிமை என்று சொல்லிக் கொண்டே சிங்களத்தரப்பிலுள்ள அநேக கட்சிகளும் இயங்குகின்றன. சிங்கள இடதுசாரிகள் கூட இதைக் கடந்து சிந்திக்கத் தயாரில்லை. இது தவறு. இப்படி ஒரு மதத்துக்கு முன்னுரிமை கொடுப்பதென்பது நாட்டை அழிக்குமே தவிர, பாதுகாக்காது என்று சொல்வதற்கு எந்தக் கட்சியும் தயாரில்லை. எந்தத் தலைவரும் தயாரில்லை. இளைஞர்களை அதிகமாகக் கொண்ட ஜே.வி.பியினால் கூட இதற்கு முடியவில்லை.

தமிழ்த்தரப்பிலும் இதுதான் நிலை. சமஸ்டி, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்று வெளியே சொன்னாலும் நடைமுறையில் செயற்பட்டுக் கொண்டிருப்பது அதற்கு மாறான, தனி இலக்கை நோக்கியே. இந்தத்தனி இலக்கு எதுவும் இனிச் சாத்தியமில்லை என்று உங்களுக்கும் தெரியும். இந்தத் தலைவர்களுக்கும் தெரியும். துயரம் என்னவென்றால் இவ்வளவு பேரழிவைச் சந்தித்த அனுபவங்களுக்குப் பிறகும் பழியுணர்ச்சியே மேலோங்கியுள்ளது. பகை மறப்பல்ல. சமாதானம் அல்ல. இளைய தலைமுறையும் புத்தியைத் தீட்டுவதற்குப் பதிலாகக் கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கிறது.







இதெல்லாம் தெரிந்து கொண்டும் ஒரு பொய் நாடகத்தை ஒவ்வொருவரும் ஆடிக் கொண்டேயிருக்கிறோம்.

இப்படி எல்லோரும் சமாதானத்துக்கும் தீர்வுக்கும் எதிரான திசையில் நின்று கொண்டு அமைதியே வா! சமாதானமே மலர்! தீர்வே கனிந்து விடு! என்றால் - எப்படி அது கிடைக்கும்?

சிலர் சொல்கிறார்கள் வெளிச்சக்திகளின் தலையீட்டினால் நிச்சயமாக இலங்கைத்தீவில் சமாதானம் எட்டும் என்று. இதைக் கூடுதலாக நம்புவது தமிழர்கள். ஆனால் இந்த வெளிச்சக்திகள் எது? இந்தியாவா? இந்தியா என்றால் அது கொண்டு வந்த மாகாணசபையே 34 வருடங்களாகியும் அதிகாரங்களைச் சரியாகப் பெற முடியாத நிலையில் உள்ளது. அப்படியென்றலால் மேற்குலகமா? பலஸ்தீனத்தில் இப்போது நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தாலே புரியும். மேற்குலகின் கரிசனைகள் எப்படி எப்படியானவை என்று. பெரிதாக நம்பப்பட்ட ஐ.நா வோ இலங்கையில் இனப்படுகொலை நடந்தது என்ற கூற்றை ஏற்றுக்கொள்ளாமல் அது போர்க்குற்றமே என்று சாதுரியமாகத் தவிர்த்துக் கொண்டிருக்கிறது. இது மீள நிகழாமல் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறதே தவிர அதை உறுதிப்படுத்தும் பொறிமுறைகள் எதையும் அழுத்தமாகப் பிரயோகிக்கவில்லை. அதற்குத் தயாருமில்லை. அப்படியென்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வும் சமாதானமும் எப்படி வரும்? எங்கிருந்து வரும்?

எனவேதான் துணிந்து சொல்கிறோம், இலங்கையில் சமாதானம் இப்போதைக்கு இல்லை என்று. சமாதானம் இல்லை என்றால் தீர்வும் இல்லை. தீர்வு இல்லை என்றால் அமைதி இல்லை. இந்த அமைதியற்ற நிலையையே நாம் எல்லோருமாக வளர்த்துக் கொண்டிருக்கிறோம்.

போர் முடிந்து பன்னிரண்டு ஆண்டுகளாகி விட்டன. இது ஒரு தசாப்தத்துக்கும் மேலான காலம். இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளிலும் அமைதியை நோக்கியும் சமாதானத்தை நோக்கியும் தீர்வை நோக்கியும் ஒரு படியில் கூட ஏற முடியவில்லை. அதற்காக ஒரு தலைவர் கூடத்தன்னைத் தியாகம் செய்யவில்லை. ஒரு பத்திரிகை கூட இயங்கவில்லை. இப்படியொரு நிலை உலகில் வேறு எங்கும் நடக்காது. இப்படியொரு வாய்ப்பை இழந்த நாடு வேறொன்றுமில்லை. இதனால்தான் இலங்கை வல்லரசுகளின் விளையாட்டுத்திடலாகவும் போட்டிக்களமாகவும் மாறியுள்ளது. நாடு பொருளாதாரத்தில் அடிமை நிலையில் நீடிக்கிறது. நமக்குள் ஐக்கியப்படவும் அமைதி கொள்ளவும் தயாரில்லாமல் ஒரு சாரார் இந்தியாவின் பக்கமாகவும் ஒரு சாரார் சீனா சார்பாகவும் நிற்கிறார்கள். இது மாதிரிச் சிரிப்புக்கும் முட்டாள் தனத்துக்குமான சங்கதி வேறென்ன?

# குயில் முட்டை

◒ இராவணமித்திரன்



எங்கிருந்தோ,காற்றில் பறந்து வந்த அந்தப் பறவையின் இறக்கையை இன்றாவது. நிலத்தில் விழுவதற்குள் கைகளால் பற்றி விட வேண்டும், என்பதற்காக என் பாட்டி காட்டுகின்ற ஈடுபாடும் பிரயத்தனமும் உடல்தளர்வு நிலையாலும், வயது முதிர்வினாலும் பயனற்றுப் போகிறது. பார்ப்பதற்கு பாட்டியின் இச் செயல் வேடிக்கையாக இருந்தாலும் செயலின் பின்னால் உள்ள பாட்டியின் எதிர்பார்ப்பு ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதனை வெறும் ஏழு வயதே நிரம்பியிருந்த என்னால் அப்போது புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று.

“ இப்பவும் என்னால இந்த சிறக பிடிக்க முடியல..,

வயசு போட்டுது தானே கண்ணா!

ஆனால் நீ ஒரு நாளைக்கு இத கண்டிப்பா பிடிக்கோணும்”

என்று பாட்டி என்னை நோக்கிச் சொன்னதும் “ஆம்” என்றவாறாக தலையசைத்த ஒரு நினைவு எனக்கு இப்பவும் உண்டு. அந்த அறியா வயதில் அப்படி தலை அசைத்தது தவறு. என்ற குற்ற உணர்வு இத்தனை வருடங்கள் கடந்தும் என் மனதில் நெருடலை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கிறது. பாட்டிக்கு என் அம்மாவை கண்டாலே பிடிக்காது. அப்பாவின் மேல் அதிக பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்த அவருக்கு தங்கள் வர்க்கத்தை சாராத பெண்ணை அப்பா காதலித்து திருமணம் செய்து கொண்டது இன்றுவரை பாட்டியால் ஜீரணிக்க முடியாத ஒன்றாகவே இருக்கிறது.

பாவம் அம்மா, பாட்டியின் ரணப் பேச்சுக்களால் எத்தனையோ நாட்கள் அழுது இருக்கின்றார். நானும் சேர்ந்துஅழுவதைத் தவிர வேறு எந்த ஆறுதலும் என்னால் அப்போது அம்மாவுக்கு கொடுக்க இயலவில்லை. நான் பிறந்து இரண்டு ஆண்டுகளாக பாட்டி என்ற ஓர் உறவு அற்றவனாகவே இருந்ததாக இரகசியமாக அப்பா என்னிடம் அவ்வப்போது கூறுவார். பாட்டியின் நெருக்கமான நண்பி ஒருத்தி ஒரு தடவை என்னைத் தற்செயலாக பார்க்க வந்ததாகவும் அவள் போய் பாட்டியிடம்

“இஞ்சபார் உன்ர பேரன் அப்படியே உன்ர மோனப் போல தான் இருக்கிறான்.

மாநிறம் ,

வடிவான பிள்ளை “

என்று கூறியதன் விளைவாக எனக்காக என் அம்மாவின் ஊரிற்கு வந்து என்னை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாராம் பாட்டி.

இந்த செயற்பாடு ஒருபோதும் பாட்டியை தியாகியாக காட்டி விடாது. ஏனென்றால் ஒருவேளை நான் அம்மாவின் ஜாடையில் இருப்பதாக பாட்டியின் நண்பி கூறியிருந்தால் “பிறந்திருக்கிறது கீழ் சாதிக்காரீன்ட பிள்ளை” என்று என்னை தூக்கி வீசி இருப்பார் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். அம்மாவும் அப்பாவும் அரசு ஊழியர்கள். எனக்குத் தெரிந்ததெல்லாம் பாட்டியின் உலகம் மட்டும் தான். அந்த வயதில் என்னுடைய எண்ணமும் பாட்டியின் சிந்தனைகளைத் தழுவியே விரிவடைந்திருந்தது. பாட்டியின் சொல்லே என்னுடைய கீதை மொழியாகிப்போனது.

**“ஒருவேளை நான் அம்மாவின் ஜாடையில் இருப்பதாக பாட்டியின் அவரது நண்பி கூறியிருந்தால் “பிறந்திருக்கிறது கீழ் சாதிக்காரீன்ட பிள்ளை” என்று என்னை தூக்கி வீசி இருப்பார் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். அம்மாவும் அப்பாவும் அரசு ஊழியர்கள் எனக்குத் தெரிந்ததெல்லாம் பாட்டியின் உலகம் மட்டும் தான் அந்த வயதில் என்னுடைய எண்ணமும் பாட்டியின் சிந்தனைகளைத் தழுவியே விரிவடைந்திருந்தது.”**

சனி, ஞாயிறு தவிர எனது பெரும்பொழுதுகள் பாட்டியின் நிழலிலேயே கடந்துசெல்லும் எனக்கு அது பழகிப் போன ஒன்றுதான். பாட்டி என்னை வளர்க்கும் பொறுப்பை ஏற்ற கணத்தில் எங்கள் வீட்டு மதிற்சுவர்கள் நாலா பக்கங்களிலும் மேலதிகமாக நான்கு அடிகள் வரை உயர்ந்திருந்தது.

பாட்டியின் இந்தக் கட்டளையை ஏன்? என்று கேட்க அப்பா பெரிதும் தயங்கியதாக அம்மா என்னிடம் கூறுவார்.

“டேய் உன்ட மனிசிய எனக்கு கண்ணில காட்டக்கூடாது.”

இதுக்குள்ள அவள்ட சொந்தக்காரரோட ஒட்டி உறவாட நான் என்ன கேவலங் கெட்டவளா”? என்று பாட்டி கூறி முடிக்க மதில் சுவர்கள் சடுதியாக ஏன்? வளர்ச்சி அடைந்தது என்ற காரணம் புரிந்தவராக அப்பா அமைதியாக நின்றாராம். அம்மாவின் கண்கள் வழக்கம்போல கலங்கிப் போய்த்தானே இருந்திருக்கும். பாட்டியையும் என் அம்மாவின் குடும்பத்தையும் இணைத்து வைத்த மிதப்பிலும் வீராப்பிலும் பாட்டியின் நண்பி அடிக்கடி பாட்டியை காண வீட்டிற்கு வருவார். பாட்டியின் மனதிலும் அவரின் நண்பிக்கு தனியான உயர்வான இடமொன்று இருக்கத் தான் செய்தது .அவர்கள் பேசிக் கொள்ளும் போது அவர்களின் சம்பாஷணைகள் மணிக்கணக்காக நீளும் பாட்டியின் மடியில் இருந்து என்பாட்டில் விளையாடுவதும் அவ்வப்போது மடியிலிருந்து தாவிக்குதித்து ஓடுவதுமாக என் பொழுதும் கழியும்.

‘ வேலை இல்லாதவன் வேசியை பற்றிப் பேசுவான், என்பதைப் போல பாட்டியும் அவரது நண்பியும் அர்த்த மற்ற பேச்சுகளையே பெரும்பாலும் பேசுவார்கள்.

“என்ர பேரன் இந்தப் பக்கத்து வீட்டுக் குரங்குகள், நாய்களைப் பாக்கவும் பழகவும் கூடாது என்று தானடீ இந்த மதில் சுவர இந்த அளவுக்கு உயர்த்தி விட்டு இருக்கிறேன்” என்ற பாட்டியின் குரல் இயல்பான அவரின் தொனியில் இருந்து சற்று உயர்வாக அடிக்கடி ஒலிக்கும். பாட்டி என்னுடன் இருந்த காலங்களில் பக்கத்து வீட்டுக்காரரை நான் பார்த்ததே இல்லை. அவர்களுடன் பேசிப் பழக எந்த விதத்திலும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அமைந்ததில்லை. அவர்களின் பேச்சொலிகள் மட்டும் அவ்வப்போது மதில்களைத் தாண்டி என் காதில் விழும்.

பாட்டியின் நண்பியும் சாதாரணநபர் கிடையாது.

‘ ஜாடிக்கேத்த மூடி போல, சாதிய பேச்சுக்கள் பேசுவதிலும் மற்றவர்களை அடிமைப்படுத்தும் சிந்தனாவாதக்கருத்துக்களை தூவி விடுவதிலும் வல்லவர். இதனால்தானோ என்னவோ பாட்டிக்கு அவரின் நண்பி என்றால் பொங்கலும் தீபாவளியும் தான்.

“உனக்குத் தெரியுமே ?

இந்தக் காத்துல பறந்து வாற குருவிகள், புறாக்களின்ர செட்டைகளை நிலத்தில் விழ விடாமல் பிடிச்சா அடுத்த பிறப்பிலும் நாங்கள் உயர்ந்த சாதிக்காரராத் தான் பிறப்பம் மற்றவர்களை இலகுவில் அடிமைப்படுத்தி விடலாம் “.

பாட்டியின் நண்பியின் இந்தக் கூற்று முன்னொரு நாளில் என் பாட்டியை வெகுவாகக் கவர்ந்திருந்தது. அன்றிலிருந்து பாட்டி பறவைகளின் இறக்கைகளைக் கைகளால் பிடித்துவிட ஆர்வம் காட்டுகிறார். ஆனால் அது கைகூடி வரவில்லை. எவ்வளவு கீழ்த்தரமான சிந்தனை இது.

சாதிய அடக்குமுறை விரும்பிகளின் ஒட்டுமொத்தமான பிரதிநிதிகளாகவே பாட்டியையும் அவர் நண்பியையும் நான் பார்க்கிறேன்.

எனக்கு ஒன்பது வயதிருக்கும். பாடசாலையில் நடைபெற்று முடிந்த சித்திரப் போட்டி ஒன்றின் முடிவுகள் வெளிவந்தன. எனக்கு சித்திரம் வரைவதில் ஆர்வமும் திறமையும் அதிகம் இருந்தாலும் அந்தப் போட்டியில் நான் வெற்றி பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதை நினைக்க நினைக்க அழுகை அழுகையாக வந்தது. என் அழுகைக்கு செவிசாய்த்து சித்திரபாட ஆசிரியர் என்னைத் தனியாக அழைத்திருந்தார்.

“ கண்ணன் அழாத

‘அயலவரும் நாமும், என்ற தலைப்பில தானே உன்ன படம் கீறச் சொன்னான். நீ ஏன்? உன்ர வீடு ,பாட்டி, அம்மா, அப்பா எல்லோரையும் அழகாக கீறிப்போட்டு உங்கட வீட்டுக்கு பக்கத்துல இருக்கிற ஆக்கள கீறாம வீட்டை சுத்தி நாய்களும் குரங்குகள் இருக்கிறது போல கீறியிருக்கிறா? நீங்க என்ன காட்டுக்குள்ளயா இருக்கிறீங்கள்? என்று கேட்க தேம்பித் தேம்பி அழுதபடி “பாட்டி அப்படித்தான் எனக்கு சொல்லி இருக்கிறார்” என்று நான் கூற ஆசான் அனைத்தையும் ஒரு கணத்தில் புரிந்து கொள்கிறார் .”மற்ற மனுசர நாய், குரங்கு எண்டு சொல்ல நாங்கள் ஆர்?

மனுசர மனுசரா மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நீ பாட்டி போல வளர்ந்து விடக்கூடாது. சாதி என்ற ஒரு விஷயமே உன் எண்ணத்தில் இருக்கக் கூடாது.”

அரை மணி நேரம் எனக்கு ஆறுதல் கூறி ஆசுவாசப்படுத்தி வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

ஆசிரியர் கூறியது எனக்கு அப்போது ஏதும் புரிந்ததாக தோன்றவில்லை. அதனை புரிந்து கொள்ளும் வயது இல்லையோ? தெரியவில்லை.

ஆனால் என் ஆசிரியர் கூறியதை மனது அடிக்கடி சிந்தித்துக் கொண்டே இருந்தது.

சில ஆண்டுகள் நகர்ந்தன.

ஒரு நாள் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்த என்னை பாட்டி சிரிப்புடன் வரவேற்ற படி

“இதைத் பார்த்தியா கண்ணா!

நான் இன்டைக்கு ஒரு புறா இறக்கையைப் பிடிச்சுட்டன்.” என்று கூறி சிரித்தார். இந்தப்பறவை இறக்கையைப் பாட்டியின் கையிலிருந்து சடுதியாக வாங்கிக் கொண்டு முற்றத்துக்கு ஓடியபோது பாட்டி என்னை விறைத்துப் பார்த்துக்கொண்டே இருந்தார். என்னால் முடிந்தவரை உயரத்தில் அந்தக் இறக்கையை வீசி எறிந்து வாயினால் காற்றை ஊதி ஊதி இறக்கையை மேலே மேலே பறக்கச் செய்தேன். அது அழகாக ஆடி அசைந்து எங்களின் உயரமான மதிற் சுவரைத்தாண்டி அப்பால் சென்று மறைந்தது.


திரும்பிப் பார்த்தேன், பாட்டியின் முகம் தோல்விப் பயத்தால் துவண்டு இருந்தது. நான் காக்கையின் கூட்டில் உயிர் பெற்றவனாகவே இருக்கலாம். ஆனால் கா...கா... என்றுதான் கரைய வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் உண்டா?

■

ந.குகபரன்

# பாரியும் அரசியலும்

தமிழர்தம் வாழ்வு நெடிய வரலாறுடையது. அகமும் புறமும் கலந்த பண்பாட்டுச் செழுமைமிக்கது. பெருமைகொள்ளும் மரபுகளைத் தாங்கியது. இருப்பினும் ஒற்றுமைக்குலைவினால் தம்முள்ளே பொருதிச் சிதைந்த துயரமும் தமிழர்களுக்கேயுண்டு. இதற்கு சங்ககாலம் தக்க சான்று. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமக்கான ஆள்புலத்தை வரையறுத்து அரசோச்சிய தமிழினத்தின் பீடினை சங்க இலக்கியங்கள் சிலாகித்துரைக்கின்றன.



அந்தக்காலத்தில்தான் சகோதரப் போரும் சதிகளும் தமிழர் அரசியலைச் சிதைத்தன. அந்த அழிவின் ஓர் அடையாளம் பாரி. அவனது வரலாற்றில் இருந்து நாம் சிந்திப்பதற்கும் கற்றுக்கொள்வதற்குமான விடயங்கள் நிறையவே உள்ளன.

மக்கள் மனம்மகிழ பறம்பு மலையை ஆண்டவன் வேள்பாரி. நேய நெஞ்சினனான பாரியின் ஆட்சித்திறத்தை கபிலர் உள்ளிட்ட புலவர்கள் போற்றியுரைத்துள்ளனர். பாரியின் வரலாறு இன்றுவரை பல்வாறு நினைவுகொள்ளப்படுகிறது. மக்களின் மனங்களில் வாழ்ந்த தலைவனாக, ஒரு தலைவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான பண்புகள் நிறையப் பெற்றவனாக பாரியைக் குறிப்பிடுவர்.

முல்லைக் கொடி படர்வதற்கு ஏற்ற கொழுகொம்பு இல்லாது வாடியதை உணர்ந்து “கறங்கு மணி நெடுந்தேர் கொள்கெனக்” கொடுத்தவன் அவன்.

“பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவன் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு உலகுபுரப் பதுவே” என பாரியை பழிப்பதுபோல புகழ்கிறார் கபிலர். தக்கபெரியாரைத்துணைக்கொள்ளல், மக்கள் நலனோம்பி எத்தகைய தீங்கும் வராது பாதுகாத்தல், தேசத்தின் வளத்தைப்பேணுதல். பண்பாட்டு அடையாளங்களைப் போற்றுதல் என்பவற்றை அர்ப்பணிப்போடு மேற்கொண்டவன் பாரி.

ஏந்துகோட்டு யானை வேந்தர் ஓட்டிய கடும்பரிப் புரவிக் கைவண் பாரி” என நக்கீரராலும் “உரைசால் வண்புகழ்ப் பாரி” என ஔவையாராலும் பாராட்டுப்பெற்றவன். எதிரிகளுக்கு அடிபணியாத மிடுக்கு அவனுடையது. நேரான மரங்கள் இலக்குவைக்கப்படும் என்பதுபோல ஆற்றல் உள்ள தலைவனான பாரி குறிவைக்கப்பட்டான். மூவேந்தர்களது சதிவலையில் வீழ்ந்தான். அவனின் பிள்ளைகளான அங்கவை, சங்கவை ஆகியோரின் அழுகுரல் புறநானூற்றில் இவ்வாறு ஒலிக்கிறது.

“அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர் கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார் யாம்எந்தையும் இலமே”

போர் ஒரு சமூகத்தின் வாழ்வை எப்படிச் சிதைத்துவிடுகிறது என்பதற்கு இந்தப்பாடல் தக்கசான்று. தந்தையாய் தலைவனாய் பறம்பு மலையை ஆண்ட நாயகன் மறைந்த பிறகு ஒரு நிலவுநாளில் அவனில்லாத பொழுதின் வலியையும் அன்று கூடியிருந்த காலத்து கனிவான நினைவுகளையும் மீட்கிறது இச்செய்யுள். பாரி விட்டுச்சென்றுள்ளது ஒரு தலைவன் எவ்வாறு மக்களின் நலனைப் பேணுவது என்ற பேரறம். இந்த அறத்தை “காவல்குழவி கொள்பவரின் ஓம்புமதி” என்று புறநானூற்றுப் புலவரொருவர் தனது அரசனுக்குச் சொல்கிறார். தாய் குழந்தையைப் பேணிக்கொள்வதுபோல அரசன் மக்களைப் பேணவேண்டும் என்பது இதன் கருத்து. ஈரவெண்குடை உணர்த்தும் குறியீடும் இதுவே.

மதுரைக் காஞ்சியில் புலவன் மன்னனுக்கு அதிகாரத்தின் நிலையற்ற தன்மையை உணர்த்தி நிலைபேறான செயல்நோக்கி அவனை வழிப்படுத்த விழைகிறான். “திரையிடு மணலினும் பலரே மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே” என்கிறான். மணலின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமானோர் இந்த உலகை ஆண்டு மறைந்துள்ளனர் எனவே நீதான் ஒரு தலைவன் என்று மமதையுறாதே எனச் சொல்லாமல் சொல்கிறது இச்செய்யுள்.

தமிழர்கள் தமது அடையாளத்தை இழந்து போனதற்கான அடிப்படை அரசியல் முதிர்ச்சியின்மையே என்பதை நன்குணர்ந்தவர் வள்ளுவர். சகோதரப்போர் மிகுந்த சமூகக்களம் பலவீனமடைவது தவிர்க்கமுடியாததே. எனவேதான் வள்ளுவர் இந்தஅரசியலைச் செம்மைப் படுத்தும் அவாவோடு பல்வேறு விடயங்களை முன்வைக்கிறார்.

“குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு” என மக்களின் தலைவனாக அரசன் திகழவேண்டும் என்பதை வலியுறுத்துவது இதன்பொருட்டேயாகும். இந்த ஒற்றுமையை மையப்படுத்தியே சோழநாட்டில் பிறந்த கண்ணகியை பாண்டிநாட்டில் நீதிகேட்டு சேரநாட்டில் தெய்வமாக்கி தமிழகத்தை ஒரு பாத்திரம் வழியாக ஒருமைப்படுத்துகிறார் இளங்கோஅடிகள். எங்கு அரசியல் பிழைக்கிறதோ அங்கு வாழ்வு வறண்டுவிடும். “பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்” என்று பாரதி கூறியதைப் போல் துயருறும் நிலையே எஞ்சும். வரலாற்றில் இருந்து கற்றுக்கொண்டவர்களாக, ஒற்றுமையுடையவர்களாக “யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற உயர்விழுமியத்தை உள்ளும் புறமும் பேணி நடப்பவர்களாக மாறும் போதே உயர்வு என்பது சாத்தியமாகும். ■

சிந்துஜா தவராஜா

# வாழ்வியல் சொல்லும் ஒப்பாரி



ஈழத்தமிழரிற்கான தனித்துவமான ஒரு கலை உண்டென்றால் அது எம் நாட்டார் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டதாக நாட்டுப்புற கலையே அமையும். மக்களின் இலக்கியமான நாட்டுப்புற இலக்கியத்தின் தோற்றம் பற்றி அறுதியிட்டுக் கூறமுடியாது. மொழியின் தோற்றம் உருவான போதே வாய்மொழி இலக்கியமான நாட்டார் இலக்கியம் உருவானதாகக் கொள்ளப்படுகிறது. நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் கலைகளையும் இலக்கியங்களையும் எடுத்து வைப்பதே நாட்டார் இலக்கியங்கள் எனக் கொள்ளப்படுகிறது. நாட்டுப்புற மக்களின் உணர்வுகளையும் கற்பனை வளத்தையும் இவ் இலக்கியங்களிலேயே காணலாம். இவை ஏட்டில் ஏறாவிடினும் எழுத்தில் வராவிடினும் மக்கள் நெஞ்சிலிருந்து நீங்காது நிலை பெற்றிருக்கும். நாட்டுப்புற வழக்காறுகள் மக்களிடையே வாய்மொழி வழியாக தலைமுறை தலைமுறை வழியாக பரவப்பட்டு வரும் இலக்கிய வடிவங்களாகும். நாட்டுப்புற இலக்கியங்கள் பின்வரும் பரிமாணங்களைக் கொண்டுள்ளன.

நாட்டுப்புறப் பாடல்கள்
நாட்டுப்புறக் கதைகள்
பழமொழிகள்
விடுகதைகள்
புராணக்கதைகள்

வாய்மொழியாகப் பரப்பப் படும்போது ஒரு நபர் ஒரு பாடலை இரண்டு தடவைகள் பாடினால் அப்பாட்டில் வேறுபாட்டைக் காணலாம். முன்னர் பாடியதை நினைவு படுத்திப் பாடலின் சில அடிகளை மறந்து சில அடிகளைப் புதிதாகச் சேர்க்க நேரிடுகிறது. இவ்வாறு மாற்றப்படுவதற்கு நிலம், சூழல், சமுதாயச் சூழல், வட்டார வழக்கு வேறுபாடுகள் காரணமாகின்றன.

இத்தகைய பாடல்கள் மாற்றத்திற்குள்ளாவதுடன் பல்வேறு வகையான திரிபு வடிவங்களும் கிடைக்கின்றன. இன்றைய தலைமுறையினராகிய நாங்கள் நாட்டார் பாடல்களின் சுவைதெரியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். நாட்டார் பாடல்கள் தாலாட்டில் தொடங்கி ஒப்பாரி வரை நீண்டு பயணிக்கிறது. இறந்தவர்களின் இழப்பை எண்ணி இறந்தவர்களையும் தம்மையும் ஒப்பிடப் பாடப்படுவது ஒப்பாரிப் பாடல்களாகும். தாலாட்டிற்கு எதிரிடை ஒப்பாரியாகும். வாழ்வின் முன்னுரை தாலாட்டானால் முடிவுரை ஒப்பாரியாகும். எப்படியெல்லாம் வாழவேண்டும் என்பது தாலாட்டின் இலக்கணமானால் இப்படியெல்லாம் வாழ்ந்தாயே என்பது ஒப்பாரியின் இலக்கணமாகும். உவகையில் பிறப்பது தாலாட்டு. அவலத்தில் பிறப்பது ஒப்பாரி. கண்மூடப் பாடுவது தாலாட்டாயின், கண்மூடிய பின் பாடுவது ஒப்பாரியாகும். தாலாட்டில் குழந்தையே பாடுபொருள். ஒப்பாரியில் குழந்தை முதல் பெரியவர்கள் வரை பாடுபொருளாகுவர். தாலாட்டும் ஒப்பாரியும் பெண்கள் குலத்தின் படைப்பாகும். பாடலோடு தொடங்கும் மனிதனின் வாழ்வு பாடலோடு முடிவடைகிறது. ஒப்பாரியை தமிழிலே பிலாக்கணம், பிணக்கரணம், கையறுநிலை, புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு என்றெல்லாம் கூறுவர். மனக்குறையைப் பிறரிடம் கூறுவதால் மனப்பாரம் குறையுமென மக்கள் எண்ணுவது இயல்பு. ஒப்பாரியையும் அவற்றின் வெளிப்பாடு எனலாம். இவ்வுலகம் விட்டு மறுவுலகம் செல்ல ஒப்பாரிகள் இயற்கையாகவே உதவுகின்றன என்றும் ஆவிகள் மூலம் தீங்கு வராமல் காக்கலாம் என்றும் மக்கள் நம்புகின்றனர். இறந்தவரை நேசித்த முறையும் தன்னுடைய நிலைமை பற்றியும் குடும்பத்தின் நிலைமை பற்றியும் காலனது கொடுமை பற்றியும் விதியின் வலிமை பற்றியும் விதவையின் வேதனையும் ஒப்பாரியின் பாடுபொருளாகும். ஒப்பாரிப் பாடலை கண்ணீர்க் காவியம் என்றும் கூறலாம்.

தமிழ்ச் சமுதாயத்தில் பெண் சமுதாயம் ஒரு சார்புச் சமுதாயமாகும். பெண் வாழ்நாள் முழுவதும் யாரையேனும் சார்ந்து வாழ வேண்டிய நிலை உள்ளது. கணவன் இறந்த பின் தன்னைப் பாதுகாத்தவரை இழந்து விட்டோமே என்ற ஆற்றாமையும் வெளிப்படும்.

“பொட்டிழந்தேன் பூ இழந்தேன்
புண்ணியரைத் தானிழந்தேன்
மாலையிழந்தேன் மை இழந்தேன்
மன்னவரைத் தானிழந்தேன்
விதவைப் பெண்ணின் அவலம்
வீதி வழி வந்தால்
விலகி வர வேண்டும்
வீட்டிலிருந்தால் துக்கமல்லோ”

என்பது கணவனை இழந்த மனைவியின் வேதனை.

ஒப்பாரிப் பாடல்கள் இறந்தவர்களின் அருமைபெருமைகளைப் பாடுவதாய் அமைகின்றன. இறந்தவரைப் பிரிந்த உறவினரின் துன்பநிலை வெளிப்படுத்தப்படுவதுடன் அவர்களின் கையறு நிலையும் வெளிப்படுத்தப்படும். ஒப்பாரிப் பாடல்களின் சமூகப் பிரச்சினைகளும் பொருளாதாரப் பிரச்சினைகளும் சமூக சீர்கேடுகளும் சோக உணர்ச்சிகளும் முழுமையாய் பிரதிபலிப்பதைக் காணலாம்.

வாய்மொழி மூலமாக எழுந்த நாட்டார் இலக்கியங்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்து வந்துள்ளன. வாழ்ந்த வாழ்வினுடைய அத்தனை நிலைப்பாடுகளையும் ஒரு சில பாடல்களிலேயே வெளிப்படுத்தும் பெரும் ஒப்பனைத் தன்மைகளை சுமந்த வடிவமாக ஒப்பாரிப் பாடல்களை இனங்காண முடிகிறது. ஆனால் இன்றைய இளந்தலைமுறையினர் நாட்டார் இலக்கியங்களின் தேவையினையும் சிறப்பினையும் உணர்வதில்லை. ஒப்பாரிப் பாடல்கள் எனும் பெயர் வழி அறிவு மட்டுமே அவர்களிடத்தே காணப்படுகிறது. ஒப்பாரிப் பாடல்களின் வாழ்வியல் அனுபவத்தை என்றும் ருசித்ததில்லை. அவற்றின் சுவையை நினைத்ததும் இல்லை. பாட்டன் முப்பாட்டன் காலத்தில் பேணப்பட்டு வந்த பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், நடைமுறைகள் யாவும் இன்று மெல்ல மெல்ல உயிர்ப்பிழந்து இன்றை சந்ததியை கைநழுவிப் போவது பெரும் சாபக்கேடாகும். எழுத்துருப் பெறாத நாட்டார் இலக்கியங்கள் எழுத்துருப் பெறும் நிலை வந்தாலும் கூட அவற்றின் அழகியலை உணர முடியாமல் கடந்து செல்கிறோம். எம் அடையாளங்களும் எம் உடைமைகளும் இன்றைய சந்ததியினரிற்கு மட்டுமல்லாது இனிவரும் சந்ததியினரிற்கும் இனங்காட்டப்பட வேண்டியவை. அவற்றினைக் கட்டுருவாக்கம் செய்ய வேண்டியது எமது கடமையாகும். ■

# என்ன உலகமடா பரமானந்தா? 5

தமிழ்க்கவி

“பெண்பிள்ளைகள் வளர்க்கப்படுவதில்லை; வார்க்கப் படுகிறார்கள்.” இது நவீன மொழிதான் என்றாலும் எனக்கு மிகவும் பொருத்தமானது . என்னை வளர்க்கும் விடயத்தில் அம்மாவும் அப்புவும் எப்பவும் அ(க)டிபடும் விடயமும் இதுதான்,

“பொம்பிளைப்பிள்ளை அடக்க ஒடுக்கமா இரு, நிலமதிர நடவாதை, மெதுவாப்பேசு, அதென்னடி சிரிப்பு வில்லன் வீரப்பா மாதிரி ங, பொம்பிளை சிரிச்சாப் போச்சு பொயிலை விரிச்சாப்போச்சு” இது அம்மா.

“பொம்பிளை எண்டதுக்காக எல்லாத்துக்கும் அடங்கிப்போகாதை, ஞாயமெண்டா தட்டிக்கேள். கம்படி பழகு நீந்தப்பழகு நாலு விசயத்தை அறி காலடியில பறந்து வந்து ஒட்டுற கடதாசியிலயும் என்ன எழுதியிருக் கெண்டு வாசிச்சுப்போட்டு எறி! அதில உனக்குத் தேவையான தகவலே தும் இருக்கலாம். சுதந்திரமா திரி! மனசில பட்டதை சொல்லு! செய்! ஆருக்கும், எதுக்கும் பயப்பிடாதை, எமனை அறியாம உயிர் போகாது. நீ எமனா இரு” இது அப்பு. இப்பிடிச் சொல்லிச் சொல்லியே என்னை முழுமையா ஒரு ஆணாகவோ பெண்ணாகவோ இல்லாமல் ரெண்டுமாக வளர்த்து முடித்தார்கள்.

வெளியே எவ்வளவுதான் மற்றவர்களை எதிர்த்துப் பேசினாலும் படித்தாலும் உள்ளே பயம் இருந்து கொண்டே இருக்கும். வீடு, அதைவிட்டால் சேனைப்புலவு வயல், அதற்கப்பால் என் பேத்தி மாரோடு கோவில் பொங்கல்கள், பக்கத்து வீட்டு பாப்பாத்தி அக்காவோடு சனி, ஞாயிற்றுக்கிழமை களில் குளத்துக்கு குளிக்கப் போவது, இவற்றோடு அப்பப்ப பாடசாலைக்கும் போவேன். இதைவிட்டால் எனக்கு மட்டுமல்ல எங்களூரில் பெண் பிள்ளைகளுக்கு வேறிடம் இல்லை.

இவற்றுக்கு மாறாக எங்கள் வீட்டுக்கு மிக அண்மையில் ஒரு அரச உத்தியோகத்தர் குடி வந்தார். அவருக்கு ஒரேயொரு பெண்பிள்ளை. அவரும் அவருடைய மனைவியும் வீட்டில் ஆங்கிலத்தில்தான் உரையாடுவார்கள்.. அவர்களுடைய பெண் மிக அழகானவள் வயதுக்கு வந்த பின்பும் பாடசாலைக்குப் போனாள். அதுதான் எங்கள் மக்களுக்குப் பெரிய விடயமாக இருந்தது. எங்களூர்ப் பெண்கள் கூடிக்கதைக்கும் போது இதை பெரிதாக அலசினார்கள்.

“அந்த நாட்களில் என்ன செய்வாள்”

“ நாலுநாளைக்கு பள்ளிக்கூடம் விடமாட்டினம்”

“அது சரியப்பா வரேக்கை சொல்லிக் கொண்டே வரும். பள்ளிக்கூடத்தில வந்திட்டா....அதுகும் வெள்ளைச்சட்டை”

2

இதே பயத்தில் என் அக்காவை வயசுக்கு வந்தபின் பாடசாலைக்கு விட என் அம்மா மறுத்து விட்டாள். ஆனால் அந்த உத்தியோகத்தரின் மனைவி வீட்டுக்கே வந்து அக்காவை பாடசாலைக்கு அனுப்பச் சொல்லி வற்புறுத்தினாள்.

“ என்ர பிள்ளைக்கும் துணையா இருக்கும் விடுங்கோ” என்றதுடன் அந்த ரகசியத்தையும் கூறிய தால் அம்மா சம்மதித்து அக்காவின் படிப்பு காப்பாற்றப்பட்டது.

கடைத்தெருவுக்கு வயோதிபப் பெண்களே போவார்கள். கோவில் திருவிழாக்களில் வரும் கடைகளில்தான் ஏனைய பெண்கள் தமக்குத் தேவை யான பொருட்களை வாங்குவர். அதைவிட,

“சோப், சீப், கண்ணாடி, தட்டுமுட்டு சாமா......ன்” என்று பெரிய பெட்டிகளை தலையில் சுமந்துவரும் தெரு வியாபாரியை கூப்பிட்டு ஒரு வீட்டுத்திண்ணையில் இரண்டு மூன்று வீட்டுப்பெண்கள் பலபொருட்களை வாங்குவர். இதேபோல சீலைப் பொட்டணிகாறர், மிட்டாய்க்காரன், என எல்லாப் பொருட்களும் வீதியிலும் வரும்.

வாசலிலே நாங்கள் விளையாடிக் கொண்டிருப்போம். யாராவது புதியவர்கள் வந்தால் நாங்கள் உள்ளே ஓடிவிடுவோம்.

“அம்மா ஆரோ வருகினம்” என்போம். அம்மா அல்லது வீட்டில் உள்ள பெரியவர்கள் வந்து என்ன வென விசாரிப்பார்கள். நாங்கள் எட்டிப்பார்த்தாலும் திட்டு விழும்.

“இங்கயென்ன பூராயம் பாக்கிறியள். பெரியாக் கள் கதைக்கிறதை வாய்பாக்காதையுங்க ஓடுங்கடி” இப்ப மட்டும் என் அம்மா உயிரோடு இருந்திருந் தால் நான் மாறிய மாற்றத்துக்கு நஞ்சு குடித்தே செத்திருப்பாள்.

திருமணமான புதிதில் என்னை கடைத்தெரு வுக்குப்போய் தீபாவளிக்கான உடைகளை வாங்கிவரும்படி முதல் முதல் என் கணவர் அனுப்பினார். அக்காவும் கூடவந்தாள். கடைத்தெரு நெருங்க நெருங்க எங்களுக்கு கால்கள் நடுங்கி வேர்க்க ஆரம்பித்தது. கையில் நூறு ரூபாத்தாள் அதற்கொரு பர்ஸ் வாங்கக்கூட இல்லை. ஒருவழியாக கடைக்குள் அதுவும் என்கணவர் குறித்த நகரத்தின் பெரிய கடையுள் நுழைந்து எனது கைகால் உதறலை மறைத்து பத்து ரூபாவுக்கு ஒரு கீரியும் பாம்பும் வேட்டி, ஒரு ரூபியா வொயில்சாறி பதினெட்டு ரூபாவுக்கும் வாங்கிக் கொண்டு வெளியே வந்தபோது ஊரே எங்களைத்தான் வேடிக்கை பார்க்கிறதோ என்ற பயம் இருந்தது, வெட்கமும் கூட.



3

எம்மைப்போல பல பெண்கள் தெருவில் பொருட் களை வாங்கிக் கொண்டு திரிவதே எனக்கு வேடிக்கையாக இருந்தது.

‘பொறுங்கோ படலைக்கை ஆரோ பெடியள் வந்து நிக்கிறாங் கள். இவள் எங்க போட்டாள்.’ “ பிள்ளை பிள்ளை கேற்றுக்க ஆரோ பெடியள் வந்திருக்கினம் ஆரெண்டு பாரம்மா”

“நீங்க பாத்தா என்ன, நோட்ஸ் வாங்க வாறாங்க போல”

புறுபுறுத்துக்கொண்டே பிள்ளை போகிறாள். அவளுக்கும் படிப்பு ஏதோ ஏயெல் ரெஸ்ற் நெருங்குது அதுதான். நான் உள்ளுக்க

> “ கடைத்தெருவுக்கு வயோதிபப் பெண்களே போவார்கள் கோவில் திருவிழாக்களில் வரும் கடைகளில்தான் ஏனைய பெண்கள் தமக்குத் தேவையான பொருட்களை வாங்குவர் அதைவிட,
> “ சோப், சீப் கண்ணாடி தட்டுமுட்டு சாமா......ன்” என்று பெரிய பெட்டிகளை தலையில் சுமந்துவரும் தெரு வியாபாரியை கூப்பிட்டு ஒரு வீட்டுத்திண்ணையில் இரண்டு மூன்று வீட்டுப்பெண்கள் பல பொருட்களை வாங்குவர். இதே போல சீலைப் பொட்டணிகாறன, மிட்டாய்க்காரன்,என, எல்லாப் பொருட்களும் வீதியிலும் வரும். ”

போவம் அதுகள் பலதும் பத்தும் பேசும். காலம் எப்பிடி மாறிப்போச்சு.

நான் தேத்தண்ணி ஊத்த முன்னம் ஒரு கேள்வி கேக்கிறன்.

“ பிள்ளை தேத்தண்ணி போடவோ”(இப்பத்தைய பிள்ளையள் தேநீர் குடிக்கிறதில்ல)

“ அது அவளின்ர காதில விழுதே..ஏதோ கதைச்சு பெரிசா சிரிக்குதுகள். இன்றைக்கு மளிகைச்சாமான்கள் வாங்க வேண்டும் கையோடு பொங்கலுக்கான துணிமணியும் எடுக்க வேணும் பிள்ளைக்கு நேரமிருக்கோ தெரியாது. நான் எதையும் எடுக்கப்போக அதை அவள் பாத்திட்டு ‘அவுட்டொப் பாசன்’ என்பாள் .

அவளின்ர சிநேகிதப்பிள்ளை சுஜிபா வாறாள். ‘லெக்கிங்’ நல்ல நிறம். தேகத்தில் இருக்கிறது தெரியாமல் தோல் நிறத்திலேயே... மேலே ஒரு ரொப், என்ன அழகு. ஆசைக்குக் கூட அரைப்பாவாடை போட என் அம்மா என்னை அனுமதித்ததில்லை. “பொம்பிளைப்பிள் ளைக்கு கெண்டை தெரிஞ்சா அது தெரிஞ்சதுக்கு சமம்” என்பாள். வந்தவர்கள் போய்விட்டார்கள் சுஜிபாவும் மகளும் கடைக்கு புறப்படுகின்றனர். மகளும் சுஜிபா போட்டது போலவே ஒரு ஆடை அணிந்து தன் சிவப்பு ஸ்கூட்டியில் சுஜிபாவை பின்னிருத்தி கெல்மெட் போட்டு போவதைப் பார்க்க எனக்கு பெருமையை விட என் அம்மா மீது கோபமே வருகிறது. எப்ப டிப்பட்ட வாழ்க்கையை எமது பெண்களுக்கு மறுத்து வைத்திருந்தார்கள்.

ஒரு பெண்ணுக்கு ஊரே காவல் நின்றது அப்போது. தமது கிராமத்தைச் சேர்ந்த பெண்ணை வேறு கிராமத்தவர்கள் வேடிக்கையாகக்கூட கிண்டலடிக்க முடியாது. அந்தப் பெண்ணின் ஒழுக்கம் அந்தக் குடும்பத்துக்கு மட்டுமல்ல அந்த கிராமத்துக்கே உரித்தாயிருந்தது. காதலும் பெண் ணைக் கடத்தி திருமணம் செய்வதும் நடை முறையிலிருந்தன. ஆயினும் அதிலும் ஒரு ஒழுக்கம் பேணப்பட்டது. என் சிறிய தாயார் திருமண வயதை அடைந்தபோது அதே ஊரைச்சேர்ந்த ஒருவன் அவரைக் கல்யாணம் செய்ய விரும்பினான். சாதி வேறானதால் தன் நண்பர்களுடன் கூடி அவளைக் கடத்தி திருமணம் செய்ய முடிவு செய்து தன் நண்பனை அனுப்பி அப்பெண்ணை வேலிக்கரைக்கு அழைத்து வர அனுப்பினான்.

வந்தவன் பெண்ணிடம் விடயத்தை சொல்லி அவளை வேலிக்கரைக்கு அழைத்தான். வீட்டிலும் ஒரு கிழவியைத்தவிர வேறு யாரும் இல்லை. அந்தப் பெண் குறித்த நபரைத் திருமணம் செய்ய தனக்கு விருப்பமில்லை என்று கூறினாள். அவன் திரும்பிச் சென்று இதை வெளியே காத்திருந்தவர்களிடம் கூறியபோது கல்யாணம் செய்ய வந்தவன் திகைத்துப்போனான். மற்றவர்களோ வேண்டாம் மச்சான் விருப்பமில்லாத பொம்பிளையக் கடத்தக் கூடாது என்றனராம். என் சிறிய தாயார் இதை எனக்கு அடிக்கடி கூறுவார்.

“ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரி னும் ஓம்பப்படும்” காலம் அது. பெண்கள் எவ்வ ளவுதான் பெண்ணியம் பேசினாலும் அதற்கான சிந்தனையும் தெளிவும் வரவேண்டிய இடத் திலிருந்து வரவேண்டும்.

# திருவள்ளுவரும் அறிவியலும்

இ.சு. முரளிதரன்



அரத்திப்பழம், குமளிப்பழம், சீமையிலந்தைப்பழம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்ற Apple மருத்துவ குணங்கள் நிறைந்த பழமாகும். “An Apple a day keeps the doctor away” என்ற பிரபலமான ஆங்கிலப்பழமொழி அப்பிள் உண்பதன் தேறிய பெறுமாத்தைத் தெளிவுபடுத்துகின்றது. ஆதாம் ஏவாளோடு, நியூட்டனோடு மட்டுமன்றி கிரேக்க கலாச்சாரத்தில் புணர்ச்சியின் குறியீடாக, அமெரிக்கா மற்றும் சுவீஸ்டன் நாடுகளில் ஆசிரியர்களுக்கான மதிப்புறு பரிசுப் பொருளாகப் பன்முகப் பரிமாணங்களில் அமைகின்றது. இத்தனை சிறப்புக்குரிய அப்பிளின் விதை நச்சுத் தன்மை கொண்டதென்றால் நம்பமுடிகிறதா?

அப்பிள் விதையில் Amygdalin என்னும் இரசாயனப் பொருள் காணபப்டுகின்றது. விதையின் மேற்பரப்பு முழுமையான பாதுகாப்பதோடு அமைவதால் சாதாரணமாகச் சாப்பிடும் தருணத்திலே பாதிப்பு நிகழ்வதில்லை. எனினும் விதையினை மென்ற உண்ணும் போது இரசாயனப் பொருள் செரிமான மண்டலத்தை அடைந்து சைனைட் (Cyanide) ஆக மாறுகின்றது. ஒரு அப்பிளில் சராசரியாக ஐந்து விதைகள் காணப்படும். ஒரு கிராம் விதையில் 0.25 மில்லிகிராம் நச்சு பொருள் உள்ளது. 70 கிலோகிராம் நிறையுள்ள ஒருவர் 140 விதைகளை உண்ணும் போது தான் பாதிப்பினை எதிர்கொள்கிறார். எனவே அச்சமின்றி அப்பிளைச் சாப்பிடலாம். 4 கிலோகிராம் நிறையுள்ள குழந்தை ஒன்றுக்கு நான்கு அப்பிளில் உள்ள விதைகளே (20 விதைகள்) பாதிப்பினை ஏற்படுத்திவிடும். வயிற்றுவலி, வாந்தி போன்றவற்றின் நீட்சியில் பெரும் பாதிப்பும் நிகழலாம். ஆப்பிளை உண்டு விட்டு விதைகளைக் குழந்தைகளுக்கு அருகே போடும் போது அவதானமாக இருக்க வேண்டும். சிறிய விதைகள் தானே என்ற அலட்சியம் காட்டக் கூடாது. எளிய பொருளும் அளவு அதிகமனால் ஆபத்தினையே தோற்றுவித்து விடும். மயிலிறகுகள் கூட மென்மையானவை தான், அளவுகடந்து அவற்றை வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சே முறிந்து போகலாமென 475 ஆவது குறட்பாவிலே திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். ஆப்பிள் விதையோடும் அற்புதமாக பொருந்திப் போகும் வகையிலே அக் குறட்பா அமைகின்றது.

‘பீலி பெய் சாகாரும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்’

அகிலத்தின் பொது மொழிகளுள் ஒன்றாகச் சிரிப்பும் அமைந்துள்ளது. இந்தியாவின் மும்பை நகரைச் சேர்ந்த மருத்துவரான மதன் கட்டாரியா, 1995 இல் சிரிப்புக் முழுமம் ஒன்றினை உருவாக்கினார். மும்பைப் பூங்காவில் சிரிப்புப் பயிற்சியை மேற் கொண்ட இக்குழு, Laughter therapy என்ற மருத்துவ சிகிச்சையை பல்வேறு நகரங்களுக்கும் பரவலாக்கம் செய்துள்ளது. பச்சிளம் குழந்தையாக இருந்த தருணத்தில் சராசரியாக முந்நூறு தடவை சிரித்த நாம், தற்போது முப்பது தடவையாகக் குறுக்கிக் கொண்டுள்ளோம். சிலர் மிக மிக அரிதாகவே சிரிக்கின்றனர். சிரிக்கும் போது ஆழமாக மூச்சினை இழுப்பதால் அதிகளவான ஒட்சிசனை உள்ளெடுக்கின்றோம். Epinephrine, Norepinephrine, Cortisol என்பன மன அழுத்தத்தினை உண்டாக்கும் ஓமோன்கள் ஆகும். சிரிக்கும் போது இந்த ஓமோன்களின் சுரப்பு குறைவதால் மன அழுத்தத்திலிருந்து விடுபடுகின்றோம்.

துன்பம் வரும் போது சிரிக்க வேண்டும் .

அதுவே துன்பத்தினை நெருங்கி எதிர்த்து நின்று வெல்லும் வல்லமை மிக்கதெனத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

“இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்”

என்ற 620 ஆவது குறட்பாவானது துன்பத்திலிருந்து கடந்தேகச் சிரிப்பே மருந்தென வலியுறுத்துகிறது. வேலைத் தளங்கள், மருத்துவமனைகள் உட்பட பல்வேறு இடங்களில் மன சோர்வுக்கு உள்ளாகின்றோம். அத்தகைய தருணங்களில் உள நெருக்கடிகளுக்கு ஆறுதல் தந்து விடுதலையளிப்பதாகச் சிரிப்பு அமைகின்றது. பதற்றமான சூழலையும் அவலத்தினையும் புன்னகையால் எதிர்கொள்ளும் உளவியலை எவ்வளவு சிறப்பாகத் திருவள்ளுவர் பதிவுசெய்துள்ளார்.

இங்கிலாந்தின் கோதுமை வயலின் மேலாகச் சிறிய ரக விமானமொன்று மாலைநேரம் பறந்து சென்றது. மறுநாட் காலையில் அவ் விமானம் திரும்பி வந்து கொண்டிருந்த தருணத்திலே விமானி மிகப் பெரிய ஆச்சரியத்துக்குள்ளானார். கோதுமைப் பயிர்களில் அதிமிரட்டலான பிரமாண்ட சித்திரமொன்று வரையப்பட்டு இருந்தது. வானத்திலிருந்து பார்த்த போது மிக நேர்த்தியான உருவமாக தெரிந்தது. ஒரே இரவில் அத்தகைய வசீகரமான பேருருவமொன்றினைப் பயிர்களில் உருவாக்கிவிடுதல் சாத்தியமில்லை என்பதை விமானி உணர்ந்தார். அவர் தெரிவித்த தகவலைத் தொடந்து அப் பயிர் வட்டத்தினை (Cropcircle)ஆய்வுக் குட்படுத்தினர். இங்கிலாந்திலே அதே போன்ற பயிர் வட்டங்கள் பின்னாளிலே பல்லாயிரக் கணக்கிலே தோன்றின.

பெரும்பாலான பயிர்வட்டங்களை மனிதர்களே உருவாக்கியிருக்கலாம். எனினும் சில பயிர்வட்டங்கள் கணித வடிவங்களாலான சிக்கலான வரைபுகளாக அமைந்திருந்தன. அவற்றை ஆய்வு செய்ததில் அதிர்ச்சியான தகவல்களே கிடைத்தன. அவை உருவாக்கப்பட்டிருந்த வயல் நிலங்களில் வாகன நிறுத்த அடையாளங்களோ, மனித காலடிகளோ காணப்படவில்லை. நவீன தொழில்நுட்பத்தோடு மனிதர் அமைப்பதாக இருந்தாலும், ஒரே இரவிலே சாத்தியமில்லாதிருந்தது. மனிதர்கள் உருவாக்கிய பயிர்கள் நேர்த்தியற்றுச் சேதமடைந்தே காணப்பட்டன. எனவே வேற்றுக்கிரகவாசிகளால் தான் இவை உருவாக்கப்படுவதாக நம்பி, இவற்றைப் பார்க்க இன்று வரை மக்கள் படையெடுக்கின்றனர். ஒவ்வொரு பயிர்வட்டமும் வேற்றுக்கிரகவாசிகளால் நுண்ணிய குறியீட்டுச் செய்தியினைக் கூறுவதற்காக உருவாக்கப்படுவதாக ஆய்வாளர்கள் நம்புகின்றனர். மர்ம முடிச்சுக்கள் இன்று வரை அவிழ்க்கப்படவில்லை. பயிர்வட்ட மர்மங்கள் குறித்து கேள்விப்படும் போதெல்லாம் திருவள்ளுவரின் 423 ஆவது குறட்பாவே எண்ணத்தில் மின்னுகின்றது.

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

■

# அண்டங்களின் பேரழிவு

சபா.விஜயகுமார்


இன்றிலிருந்து 100 வருடங்களின் பின்னர் தொழிநுட்ப வளர்ச்சியால் இப் பூமி அப்படியே உருமாறி விடும். சனத்தொகை ஆயிரம் கோடியையும் தாண்டிவிடும். பூமியின் நிலப்பரப்பும் இப்போது இருப்பது போல இருக்காது. காலம் போகப் போக மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும். ஆனாலும் இம் மாற்றங்கள் மெது மெதுவாகவே நடந்து வரும். அதனால்த் தான் அம்மாற்றத்தை நம்மால் நேரடியாக உணரமுடியாது. வாருங்கள் இப்போது வருங்காலப் பயணத்துக்குள் செல்வோம்.

இன்றிலிருந்து 350 வருடங்களின் பின் நமது பூமியின் காந்த மண்டலம் இப்போது இருப்பதற்கு நேர்மாறாகத் திரும்பிவிடும். அதன் பின் 4385 ஆம் ஆண்டைக் கடக்கும் போது நாம் 1996 ஏப்ரல் மாதத்தில் பூமிக்கு அருகில் வந்த ஹேலியின் வால் வெள்ளியை வானத்தில் மீண்டும் பார்க்கலாம். தொடர்ந்து 5700 ஆண்டு முதல் மிக கடுமையாக கடல் நீர் மட்டம் உயர்ந்திருப்பதைக் காணலாம். பூமியின் வெப்பநிலை அதிகரிப்பதும், பனிப்பாறைகள் முற்று முழுதாக உருகியமையுமே அதற்குக் காரணமாகும். தொடர்ந்து 7600 ஆம் ஆண்டைக் கடக்கும் போது குறைந்தது 2021 இல் இருந்து 30 விண்கற்கள் நமது பூமியை மோதியிருக்கும். பாரிய விண்கல் வீழ்ந்து டைனோசர்கள் அழிந்தது போல பல உயிரினங்கள் பூமியில் அழிய வாய்ப்புண்டு. இதற்குப் பின் 10000 ஆண்டைக் கடக்கும் போது நமது இரவு வானில் மிகப் பிரமாண்டமான நட்சத்திர வெடிப்பொன்றை வெறுங்கண்ணால்க் காணலாம். விருச்சிக விண்மீன் கூட்டத்திலுள்ள அன்ராறஸ் சூப்பர் நோவாவாக மாறி வெடித்து சிதறியிருக்கும். ஆனால் பூமியில் உள்ளவர்களுக்கு அவ்வொளி தெரிய வர 550 ஒளி வருடங்கள் எடுக்கும். ஒரு செக்கனில் ஒளி செல்வது 3 லட்சம் கிலோமீற்றர் எனின் 550 வருடங்கள் ஒளி பயணிப்பது எவ்வளவு கிலோமீற்றர் என்பதை அறிய முனைந்தால் நீங்கள் ஆச்சரியத்தின் உச்சிக்கே சென்று விடுவீர்கள்.

சரி சூப்பர் நோவா என்றால் என்ன என்பதை போகிற போக்கில் சொல்லி விடுகிறேன். அளவில் பெரிய விண்மீன்கள் தம் எரிபொருட்கள் (ஐதரசன், ஹீலியம்) தீர்ந்த பின் மாபெரும் அளவில் ஒளியற்றவை வீசி பேரொளியுடன் வெடிப்பதையே சூப்பர் நோவா என்பர். அதாவது ஒரு விண்மீனின் இறப்பே இந் நிகழ்வாகும். பயப்படாதீர்கள் எமது சூரியனைப் போல் 8 மடங்கு அளவில் பெரிய விண்மீன்களே சூப்பர் நோவாவாக மாறி வெடிக்கும். எமது சூரியனுக்கு அந்த நிலை ஏற்படாது. இறுதியாக பூமியில் கெப்லரினால் 1604 ஆம் ஆண்டு SN 1604 எனும் விண்மீனில் சூப்பர் நோவா வெடிப்பு அவதானிக் கப்பட்டது.

பிரபஞ்ச வெளியே நூற்றுக் கணக்கான சூப்பர் நோவாக்கள் வெடித்தாலும் அவையின் ஒளி பூமியை வந்தடைய கோடிக்கணக்கான வருடங்கள் எடுப்பதால் அந் நிகழ்வை நாம் அடிக்கடி கண்டு கொள்ள முடியாது. தொடர்ந்து 15240 ஆம் ஆண்டை அடையும் போது சஹாரா பாலைவனம் மிக மோசமான வெப்ப மண்டலமாக மாறியிருக்கும். 58000 ஆம் ஆண்டை அடையும் போது 1977 ஆம் ஆண்டு விண்ணுக்கு அனுப்பப்பட்ட வொஜேயர் விண்கலம் சூரியனுக்கு அடுத்து நமது பால் வீதியிலுள்ள வேறு ஒரு உடுவை நெருங்கி இருக்கும். ஆனால் அது எவ்வித தொடர்புகளையோ, சமிஞ்ஞைகளையோ பூமிக்கு அனுப்ப முடியாத கட்டத்தில் அது சென்று கொண்டிருக்கும். தொடர்ந்து 69000 ஆம் ஆண்டு பூமியின் வெப்பநிலை பல மடங்கு உயர்ந்து பனிப்பாறைகள் ஒன்றுமே மிச்சம் இல்லாமல் உருகிவிடும். தொடர்ந்து 96900 ஆம் ஆண்டளவில் எரிமலைகள் வெப்பம் அதிகரித்து பயங்கரமாக வெடித்துச் சிதறும்.

3 இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரம் வருடத்தை கடக்கும் போது கவாயில் புதிய தீவு ஒன்று கடலில் மிதக்கத் தொடங்குவதைக் காணலாம். அதனைத் தொடர்ந்து சங்கிலித் தொடர் போன்று பல தீவுகள் கடலில் தோன்றி ஆச்சரியத்தை ஏற்படுத்தும். அதன் பின்பு 18 இலட்சம் வருடத்தை தொடும் போது மீண்டும் ஒரு சூப்பர் நோவா வெடிப்பொன்று வானில் தோன்றும். பீற்றல்யூஸ் எனப்படும் திருவாதிரை நட்சத்திரமே அவ்வாறு வெடித்து தனது ஆயுளை முடித்துக் கொண்ட உடுவாகும். அதன் பின்பு ஒரு கோடியே 2 இலட்சத்தி இருபத்தையாயிரமாவது ஆண்டை அடையும் போது உயர் சக்தி வாய்ந்த காமா எதிர் வெடிப்பு ஒன்று விண்வெளியில் உருவாகி கணப் பொழுதில் எல்லாவற்றையும் எரித்து சாம்பலாக்கிவிடும்.



இக்காலப்பகுதியிலே செவ்வாய்க் கிரகத்தின் இரண்டு நிலவுகளும் உடைந்து சுக்கு நூறாகி அக்கிர கத்தை சூழ ஒரு வளையமாக மாறியிருக்கும். ஏறத்தாழ 2 கோடியே 69 லட்சமாவது ஆண்டு அடையும் போது சனிக் கோளின் வளையம் இல்லாமற் போயிருக்கும். 5 கோடி ஆண்டுகளுக்கு பின் துருவப்பகுதிகளிலுள்ள எல்லாப் பனியும் உருகி கடல் மட்டம் பல மடங்கு உயர்ந்து விட்டிருக்கும். கிட்டத்தட்ட 7 கோடி வரு டத்தை அடையும் போது மிகப் பெரிய விண்கல் ஒன்று பூமியில் வீழ்ந்து பயங்கரமான விளைவுகளை உண்டாக்கும். 15 கோடி வருடத்தில் எமது பூமியின் கண்டங்கள் ஒன்றை விட்டு ஒன்றை பிரித்தும், சேர்த்தும் புதிய பல கண்டங்கள் உருவாகியிருக்கும். உதாரணமாக எமது இலங்கை நாடு அவுஸ்திரேலியாவின் ஒரு பகுதியுடன் இணைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. 50 கோடி ஆண்டளவில் சூரியனின் வெளிச்சம் முன்பை விட பல மடங்கு உயர்ந்து கொண்டே இருக்கும். அதாவது சூரியனின் எரிபொருள் பலமடங்கு எரிந்து சக்தியை அதிகளவில் வெளியேற்றுவதே அதிக ஒளிக்கு காரணமாகும். 150 கோடி ஆண்டைத் தொடுகையில் பூமியில் உள்ள நீர் அனைத்தும் சூரியனின் வெப்பத்தால் ஆவியாகிவிடும். இந் நிலையில் எமது பூமியில் ஒரு உயிரினமும் தப்ப முடியாது. அனைத்தும் எரிந்து பஸ்பமாகிவிடும். 370 கோடி ஆண்டைத் தாண்டும் போது சூரியனின் அளவு பல மடங்கு பெரிதாகி வீங்கத் தொடங்கும். 590 கோடி வருடத்தில் சூரியன் செவ்வசுரனாக (Red Giant Star) ஆக மாறத் தொடங்கும். நமது சூரியன் இந்நிலையில் மரணத்தை சுவைக்க தொடங்கும். இவ்வாறு சூரியன் சிவப்பு குள்ளனாகி விரிவடையும் முதலில் புதனையும், பின்னர் சுக்கிரனையும் இறுதியாக பூமியையும் விழுங்கி விடும். எல்லாக் கோள்களும் சுக்குநூறாகி வெடித்து சிவப்புக் குள்ளனுக்குள் ஐக்கியமாகிவிடும். பின்னர் சூரியன் வெண்ணிற குள்ளனாகி (White Dwraf) இறந்த நட்சத்திரமாகி இருக்கும். 1000 கோடி வருடத்தின் பின் இவ் வெண்ணிறக் குள்ளன் வெப்பநிலையைக் வேகமாகக் குறைத்து குளிர் நட்சத்திரமாக (Cool Star) ஆக மாறிவிடும்.

■

நா.தம்பித்துரை

# போதைவஸ்து மாபியாக்களை கட்டுப்படுத்த வல்லமையுள்ளவர்கள் யார்?



இலங்கை மிகப் பெரிய சவாலை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது. ஒருபக்கம் கொரோனா பெருந்தொற்று. இன்னொரு பக்கம் கடல் வழியாக வந்திறங்கும் போதைப்பொருட்கள். கொரோனா தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டு கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் தொற்றும் மரணமும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. சுயமான கட்டுப்பாட்டுக்குள் வருகிறார்கள் இல்லை. அரசாங்கம் ஏதாவது செய்யும் என்ற குருட்டு நம்பிக்கையில் இவர்கள் இருப்பதாகவே தெரிகிறது. இப்படியான ஒரு நிலைப்பாடுதான் போதைப் பொருள் தொடர்பான விடயங்களிலும் இருப்பதாகத் தெரிகிறது.

போதைப்பொருள், விற்பனையிலும் சரி பாவனையிலும் சரி அதி உச்சநிலையில் இலங்கை இருப்பதனை அண்மைக்கால போக்குகள் எடுத்துக் காட்டுகின்றன. கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகள் தொடர்பான செய்திகள் பத்திரிகைகளில் வருகின்றன. ஆனால் கைப்பற்றப்படாது சமூகத்துக்குள் சென்று சேரும் பொதிகள் தொடர்பான தகவல்கள் தெரிவதில்லை. சமூகத்தில் புழக்கத்தில் உள்ள போதைப் பொருட்கள் தொடர்பில் அறிகின்றபோது கஞ்சா வெறும் சாதாரண விடயமாகவும் தோன்றுகிறது. அதனை விடவும் கெரோயின், ஐஸ், குடு, போதை மாத்திரைகள் போன்று இன்னும் பல புழக்கத்தில் உள்ளன. இவை அனைத்தும் கிராமங்களின் மூலை முடுக்கெங்கும் கிடைக்கக் கூடிய வகையில் விற்பனை முகவர்கள் பரவியுள்ளார்கள். அவர்களை அக்கிராமத்தில் உள்ளவர்களுக்குத் தெரியும். ஆனால் காட்டிக் கொடுக்க முடிவதில்லை. செய்தி வழங்கிய அடுத்த நிமிடமே யார் தகவல் வழங்கினார்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்து விடுகிறது என்றும், அதனால் தமது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டுவிடும் அச்சம் உண்டு என்றும் சமூகத்தில் உள்ளவர்கள் சொல்கிறார்கள். சில சம்பவங்கள் அதனை உறுதிப் படுத்தியும் உள்ளன. எப்படித் தகவல் போகின்றன எனத் தமக்குத் தெரியும் என்றே மக்கள் சொல்கிறார்கள். அவர்களின் கருத்துப்படி வேலியே பயிரை மேய்வதாகத் தெரிகிறது. இன்னொரு வகையில் சொல்வதானால் வியாபாரக் கும்பல் வெளிப்படையாகவே தமது வியாபாரத்தினைச் செய்வது போலவும் தோன்றுகிறது.

போதைவஸ்து பொருள் பரவல் தொடர்பில் வடக்கில் உள்ள மக்கள் ‘அரசாங்கம் திட்டமிட்டே வடக்கில் இக்கொடிய நஞ்சைப் பரப்புகின்றது’ எனக் குறிப்பிடுகின்றனர். ஆனால் வடக்கில் மட்டும்தான் போதைப் பொருள் நடமாட்டம் இருக்கிறது என்றில்லை. இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் இதன் செல்வாக்கு இருப்பது வெளிப்படை. இருந்தாலும் ஒப்பீட்டு நிலையில் வடக்கில் இதன் செல்வாக்கு அதிகம்.மக்களின் கருத்து உண்மையோ? பொய்யோ? வடக்கில் எடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கை போதுமானதாக இல்லை என்பது மட்டும் உண்மை.

இலங்கைக்கு எவ்வகையான கடத்தல் பொருள் வருவதென்றாலும் அது கடல் வழியாகத்தான் வர வேண்டும். இலங்கைக் கடற்படையின் தீவீரமான கண்காணிப்புக்கு மத்தியிலும் இத்தகைய பொருட்கள் கரைக்கு வருகின்றன. கொண்டு வருபவர்கள் நிச்சயமாக கடல் தொழிலோடு சம்பந்தப்பட்டவர்களாகத்தான் இருக்கமுடியும் என்ற சந்தேகம் தோன்றுகின்றது. அவர்களைவிட கடல்வழியாகக் கொண்டுவருவதற்கு பொருத்தமுடையவர்கள் யாரும் இல்லை என்பதும் வெளிப்படை. இதில் இந்திய மற்றும் இலங்கை கடல் தொழிலாளிகளுக்கு தொடர்பு உண்டு. சில கடற்றொழில் செய்பவர்களுடன் இது தொடர்பில் உரையாடியபோது, ‘தங்களில் சிலர் பணத்துக்கு ஆசைப் பட்டு இத்தகைய கேவலமான தொழிலைச் செய்வதாக வருத்தமாகவும் கோபமாகவும் தெரிவித்திருந்தனர்.



இவ்வாறான சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தமது நிகழ்கால ஆசையையும் ஆடம்பரமான வாழ்க்கையினையும் மட்டுமே கவனத்தில் கொள்கின்றனர். ஆனால் எதிர் காலத்தில் இத்தகைய பொறிக்குள் தமது பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள், அகப்பட்டு சின்னா பின்னமாகிப்போகும் நிலை ஒன்று உண்டு என்பதனை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை.

இவ்வாறு வந்திறங்கும் போதைப் பொருட்கள் மிக நுட்பமாக அங்கிருந்து நகர்த்தப்பட்டு விற்பனை முகவர் கைகளுக்கு பிரித்து அனுப்பப்படும். அப்பொருட்களை இன்னும் மிக நுட்பமாக நுகர்வோருக்கு கொண்டு சேர்க்கப்படும். இங்கு நுகர்வோர் என்பது பெரும்பாலும் 21வயதுக்குட்பட்டவர்களாகவே இருக்கின்றனர். இன்னும் சொல்லப்போனால் விற்பனை முகவர்களின் இலக்கு பாடசாலை மாணவர்களே. அவர்களைத் தான் இலகுவாக இப் பொறிக்குள் சிக்க வைக்க முடியும் என்பதனை அவர்கள் நன்கு உணர்ந்து வைத்திருக்கிறார்கள். இது ஒரு குளோபல் நெற்வேக் சிஸ்ரம் போலவே இயங்குகின்றது. அதாவது முதலில் பழக்கத்துக்கு உள்ளானவருக்கு சில காலத்துக்கு பாவனைக்கு கொடுப்பார்கள். அவர் அதற்குள் பூரணமாக அடிமைப்பட்டதும் இன்னும் இரண்டு பேருக்குப் பழக்கினால்தான் பொருள் தரப்படும் என்ற நிபந்தனைப் படுத்தலோடு அடுத்தகட்ட நகர்வு ஆரம்பிக்கும். இதன் பின்னணியில் உள்ளவர்கள் பணச் செல்வாக்கு மிக்கவர்களாகவும் பணத்தினால் எதனையும் செய்யக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். அப்பணம் நினைத்ததைச் செய்யக் கூடியதாக இருப்பதுதான் இங்கு மிகவும் கவனிக்கவேண்டிய விடயமாகும். இது எல்லாவற்றினையும் விட பெண்கள் தொடர்புபட்டிருப்பது அவர்களது விற்பனையை இன்னும் இலகுபடுத்துவதாக அமைகிறது. இப் பெண்கள் எத்தகைய சமூகத்துக்குள் தாங்களும் ஒரு அங்கமாக வாழ ஆசைப்படுகின்றார்கள்? என்பதுதான் மிக முக்கிமான கேள்வி.

போதைப்பாவனை என்பது தனியே இளைஞர்கள் அதற்குள் அடிமையாகிப்போய் விடுவது என்பதோடு முடிந்து போய்விடுவதில்லை. அது மிகப்பெரிய சமூக பொருளாதார சிதைவினையும் பண்பாடு கலாசாரச் சீரழிவினையும் விளைவிக்கிறது. இது ஒரு குடும்பத்தின் சிதைவோடு மட்டும் முடிந்து போவதில்லை. ஒரு சமூகத்தைச் சிதைத்து பின் முழுமொத்த நாட்டையே சிதைவுக்குள்ளாக்கும் ஆபத்து நிலைக்குட்பட்டது.

சமூகத்துக்குத் தீங்கான பொருட்களை எப்படி சமூகத்துக்குள் அனுமதிக்க முடியும். இதனை ஒவ்வொரு சமூக அங்கத்தவர்களும் புரிந்து கொள்ளவேண்டும். சமூகத்துக்குள் இத்தகைய கொடூரர்கள் இருப்பதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. இன்று இன்னொருவரின் பிள்ளை அடிமைப்பட்டுச் சின்னாபின்னமாகிப் போகும் என்றால் நாளை ஒவ்வொருவரது பிள்ளைகளுக்கும் இத்தகைய நிலை ஏற்பட வாய்ப்புண்டு. சமூகம் விழித்திருக்க வேண்டும்.

ஒரு நாட்டின் எதிர்காலச் சிற்பிகள் மிக மோசமாக போதைவஸ்துக்கு அடிமைப்பட்டு செயலற்ற நடைப் பிணங்களாக தெருவில் திரிகின்ற பரிதாப நிலையினைக் கண்கூடாகக் காணக்கிடைக்கின்ற போதும் மக்கள் போதைவஸ்து மாபியாக்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு முடியாதவர்களாகவே இருக்கின்றனர். காரணம் இத்தகைய விற்பனையாளர்கள் தமது தொழிலுக்கு ஆபத்து வரும் போது மற்றவர்களைக் கொலை செய்யவும் பின்னிற்பதில்ல. இவர்கள் மீதான நடவடிக்கையை எடுக்க கூடிய வல்லமை அரசிடமே உண்டு. அதனிடம் தான் அதற்குரிய அதிகாரமும் ஆளணியும் உண்டு. அரசு இரண்டு விடயத்தினைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஒன்று இத்தகைய கும்பலைப் பிடித்து கடுமையான தண்டணை வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் மீட்சி கொள்ளாமல் செய்வது. மற்றையது தீவிரமான பாவனைக்குள் அடிமையாகிப்போன பிள்ளைகளை இனம் கண்டு அவர்களை அப்பழக்கத்திலிருந்து மீட்டெடுப்பது.

அரசு போதைப் பொருள் விற்பனைக்கு எதிராகக் கொண்டுள்ள நிலைப்பாடு என்ன? என யோசிக்கும் போது. சட்டம் மிக இறுக்கமாகவே உள்ளது. ஆதாரபூர்வமாக நிரூபிக்கும்போது தண்டனையும் கடுமையானதாகவே இருக்கும் என்பதும் தெளிவு. ஆனால் இவர்களைக் கைது செய்து சரியான ஆதாரங்களை நிரூபிப்பதில்தான் சிக்கல் இருக்கிறது. போதைவஸ்து மாபியாக்களைக் கட்டுப்படுத்துவது என்றால் முதலில் நாட்டில் இலஞ்சம் வாங்குவது முற்றாக இல்லாமல் செய்வதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்பதும் மக்களின் கருத்தாக இருக்கிறது. இலஞ்சம் இருக்கும் வரையில் இவ்வாறான சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியாது என்பது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அவர்கள் சொல்வதனை நோக்கின் இங்கு பணம் பெருமளவில் கைமாறிக்கொண்டு இருப்பதாகத் தோன்றுகிறது. நாட்டின், எமது சமுதாயத்தின் ஆரோக்கியமான எதிர்கால வாழ்வினைக் கருத்தில் கொண்டு அதிகாரமுள்ளவர்கள் செயற்படும் போதுதான் இத்தகைய கொடிய நச்சாளர்களின் பிடியிலிருந்து இளம் சமுதாயத்தையும் நாட்டையும் காப்பாற்ற முடியும்.

அதிகாரம் உள்ளவர்கள் சரியாகத் திட்டமிட்டு செயற்பட்டால் இத்தகைய சமூகவிரோதச் செயற்பாடுகளை முற்றாக ஒழித்துவிட முடியும். மிகச் சாதாரண விடயங்களுக்கு அரச புலனாய்வினர் தீவிரமாகச் செயற்படும் போது இத்தகைய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏன் அவர்கள் தீவிரம் காட்டவில்லை? என்பது மக்களின் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாகவே அமைகிறது. மக்கள் கொண்டுள்ள சந்தேகத்தினை உண்மை இல்லை என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு உண்டு. எந்த சமூகவிரோதச் செயலுக்கும் கடுமையான தண்டனை வழங்குவதன் மூலமே முற்றாகச் செயலிழக்கச் செய்யமுடியும். இன்றைக்கு கைது செய்து நாளைக்கு வெளியில் உலாவ விடுவதற்குரிய ஏற்பாடுகள் இருக்கும் வரை இவற்றினை இல்லாமல் செய்வது முடியாத காரியம். மக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ‘இருப்பவர்கள் இருந்தால் இதெல்லாம் நடந்திருக்காது’. என்று. ■

> **“விற்பனை முகவர்களின் இலக்கு பாடசாலை மாணவர்களே. அவர்களைத் தான் இலகுவாக இப் பொறிக்குள் சிக்க வைக்க முடியும் என்பதனை அவர்கள் நன்கு உணர்ந்து வைத்திருக்கிறார்கள். இது ஒரு குளோபல் நெற்வேக் சிஸ்ரம் போலவே இயங்குகின்றது. அதாவது முதலில் பழக்கத்துக்கு உள்ளானவருக்கு சில காலத்துக்கு பாவனைக்கு கொடுப்பார்கள். அவர் அதற்குள் பூரணமாக அடிமைப்பட்டதும் இன்னும் இரண்டு பேருக்குப் பழக்கினால்தான் பொருள் தரப்படும் என்ற நிபந்தனைப்படுத்தலோடு அடுத்தகட்ட நகர்வு ஆரம்பிக்கும்.”**



# உரமில்லா வாழ்க்கையும் உரமான ஆயுளும்

◒ வேதநாயகம் தபேந்திரன்

“பயிர்களுக்கு உரம் போடுவது பிளேன் ரீ குடிப்பது போன்றது. இலைகுழை தாழ்ப்பது, எருப்போடுவது பால் குடிப்பதைப் போன்றது”

மூத்தோர் ஒருவரின் வாக்கு இது.

அசேதனப் பசளையாகிய உரம் போடும் போது பயிர் ஒரு தடவை சிலிர்ப்பி எழுந்த பின்னர் ஓய்ந்து கொள்ளும். இது பிளேன் ரீ குடிப்பது போன்றது.

ஆனால் சேதனப் பசளையாகிய இலை குழை சருகு, எருப் போடும் போது பயிர் உறுதியாக நின்று நிலைத்து வளரும் பயன் தரும். இது பால் குடிப்பது போன்றது.

இதனால் தான் மூத்தோர்கள் இந்த அனுபவமொழியைச் சொன்னார்கள்.

தற்போதைய அரசாங்கம் மஞ்சள், உழுந்து இறக்குமதியை முற்றாக நிறுத்தி விட்டு உள்ளூர் உற்பத்தியை நோக்கி விவசாயிகளை வழிநடத்தி வருகின்றது. அது போல இரசாயன உரங்களது இறக்குமதியை முற்றாகத் தடை செய்வதற்குரிய முன்னெடுப்புகளை அரசாங்கம் மேற்கொள்கின்றது.

போத்தல்த் தண்ணீர் என அழைக்கப்படும் மினரல் வோட்டர் யுகத்தில் நாட்டை வைத்திருக்க முடியாது. நன்னீர் நிலைகளைப் பாதுகாக்கவே இந்த நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளது. நிலத்தடி நீர், நீர் நிலைகளது நீர் ஆகியவை அளவுக்கு மீறிய இரசாயனப் பாவனைகளால் பாதிக்கப்படுகிறது. அவற்றைக் குடிநீராகப் பாவிப்போர் பலவித நோய்களுக்கு உட்படுகின்றனர். சிறுநீரகப் பாதிப்பு மற்றும் புற்றுநோய் உட்படப் பலவித நோய்களால் இறப்போர் தொகை அதிகரித்துச் செல்கின்றது.

பொலநறுவையில் சிறுநீரக நோய்ச் சிகிச்சைக்கான தேசிய வைத்தியசாலை இரு வருடங்களுக்கு முன்பாகத் திறந்து வைக்கப்பட்டது. எமது நாட்டில் சிறுநீரக நோய்ப் பாதிப்பிற்கு உட்பட்டோர் எண்ணிக்கை பல்லாயிரக்கணக்கில் பெருகியுள்ளது. இத்தகைய பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளோருக்கு அரசாங்கம் சமூக நலன்புரிக் கொடுப்பனவாக மாதாந்தம் 5000 ரூபாவை வழங்கி வருகின்றது.

மினரல் தண்ணீரில் முழுமக்களும் தங்கியிருக்க வேண்டிய பாதுகாப்பற்ற நிலையொன்றை நோக்கி நாடு நகருகின்றது.இது ஒரு வகையில் பல்தேசியக் கம்பனிகளது பிடிக்குள் நாட்டைக் கொண்டு போய் விடும். அரசியல்,பொருளாதார இறைமை பாதிக்கப்பட்ட ஒரு நாடாக எமது நாட்டைக் கொண்டு வந்து விடும். அதனைத் தடுப்பதற்கு இரசாயன உரங்கள் பாவனையற்ற நாட்டை உருவாக்குவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது.

திடீரென இயற்கைப் பசளைப் பாவனையை 100 வீதம் உருவாக்க முடியாது. ஆனாலும் சாத்தியமான வழிமுறைகள் உண்டு. எமது யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை பனை வளத்தை நாம் சிறப்பான முறையில் பாவிப்பதன் மூலமாக இயற்கைப் பசளைத் தேவையைக் கணிசமான அளவுக்கு நிறைவு செய்யலாம். பனையோலைகளால் வீடு வேய்தல் பரவலாக இருந்த காலத்தில் பழைமையடைந்த கூரைகளைத் தோட்டங்கள், வயல்களுக்கு இட்டு உழுவார்கள்.

பயிர்கள் நின்று நிலைத்துச் சிறந்த அறுவடையைத் தரும். பனை வடலிகள் பல இடங்களில் கவனிப்பாரின்றி உள்ளது. “பிள்ளையைக் கட்டி வளர், வடலியை வெட்டி வளர்” என்பது ஒரு அனுபவ மொழி.

தென்னம்பிள்ளை வளரும் போது ஓலைகளை வெட்டி வளர்க்கக் கூடாது. ஓலைகளை வெட்டினால் மரத்தின் மூச்சுக் குறைந்து விடும். அதாவது வளர்ச்சி குறைந்து விடும்.தேங்காய்களின் உற்பத்தி குறைந்து விடும். அது போல பனைவடலியை வெட்டி வளர்க்க வேண்டும். வடலி ஓலைகளை வெட்டி வளர்க்காமல் விட்டால் பனைமரம் பறட்டை பற்றி வளர்ச்சி குறைந்து விடும். வடலி ஓலைகளை வெட்டி வளர்த்தால் பனை நேராக உறுதியாக வளரும்.





யாழ் குடாநாட்டில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் பல இடங்களில் பனை வடலிகள், பனங்கூடல்கள் உள்ளன. இவற்றை உரிய காலப் பகுதியில் வெட்டி வளர்ப்பதன் மூலமாக வரும் பனை ஓலைகளை விவசாயத்தில் நிலத்தைப் பண்படுத்தும் போது பசளையாக இடுவதன் மூலமாக பயிர்களின் விளைச்சலைக் கூட்டலாம்.

> “தென்னம்பிள்ளை வளரும் போது ஓலைகளை வெட்டி வளர்க்கக் கூடாது. ஓலைகளை வெட்டினால் மரத்தின் மூச்சுக் குறைந்து விடும். அதாவது வளர்ச்சி குறைந்து விடும். தேங்காய்களின் உற்பத்தி குறைந்து விடும். அது போல பனைவடலியை வெட்டி வளர்க்க வேண்டும். வடலி ஓலைகளை வெட்டி வளர்க்காமல் விட்டால் பனைமரம் பறட்டை பற்றி வளர்ச்சி குறைந்து விடும். வடலி ஓலைகளை வெட்டி வளர்த்தால் பனை நேராக உறுதியாக வளரும்.”

பனை மரங்கள் செங்குத்தாக வேர்களைப் பரப்பி நிலத்தடி நீரை மேலே கொண்டு வரக் கூடிய வல்லமை வாய்ந்தவை.இதனால் நன்னீர் வளம் பெருகும். ஆறுகள், மலைகள், குளங்கள் எதுவுமேயில்லாத யாழ்ப்பாணத்தை நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கி நலமாக வாழ்வதற்கு எமது முன்னோர்கள் பனை வளத்தைப் பெருக்கினார்கள். பனை ஓலைகளை நிலத்தில் பரவி அவற்றை உழுது பயன்படுத்தும் போது பயிர்கள் வளரும் உறுதி கூடுதலாக இருக்கும்.

வேலிகளால் வீடு வளவுகள் சூழப்பட்டு இருந்த காலத்தில் இலைகுழை சருகுகள் தாராளமாகக் கிடைத்தது. வருமான மட்டம் குறைவாக இருந்த காலத்தில் இயற்கை தரும் எதனையும் பணமாக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினார்கள். வருமான மட்டம் கூடி வசதி வந்த காலத்தில் இலைகுழை சருகுகளை எரிக்கும் பழக்கம் வந்தது. பசளையாக பயன்படக் கூடியவற்றைக் கழிவாக அகற்றும் பழக்கம் தான் பரவலாக வந்து விட்டது. பணவசதி கூடிப் பல இடங்களில் இலைகுழை சருகுகளைத் தொல்லையான ஒன்றாகப் பார்த்து நிலத்தை மூடிக் கொங்கிறீற் இடுகின்றார்கள். அதனால் மழை நீர் நிலத்தில் நின்று ஊறி நிலத்தடி நீர் வளம் பேணப்படுவது தடுக்கப்படுகின்றது.

மரங்கள் அடர்ந்த சோலைகளாக உள்ள இடங்களில் சேரும் சருகுகளைக் கூடத் தொல்லையாக நினைத்து அவற்றை எரிக்கின்றார்கள். உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவகற்றிலின் போது உக்கக் கூடிய இலைகுழைகளைத் தனியாகத் தரம் பிரித்துத் தருமாறு பொதுமக்களுக்குக் கோரிக்கை விடுக்கின்றன. ஆனால் அதிகளவான பொதுமக்கள் இவற்றைச் சரிவரக் கடைப்பிடிப்பதில்லை.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் கழிவுப் பொருள்களைத் தரம் பிரித்துக் கொள்கலன்களில் இடுமாறு அறிவுறுத்துகின்றனர். ஆனால் பெரும்பாலான பொதுமக்கள் இதனைச் சரியாகக் கடைப்பிடிப்பதில்லை. இவற்றால் கழிவு முகாமைத்துவம் மட்டுமல்ல இயற்கைப் பசளையாகக் கிடைக்கக்கூடிய வளங்களும் பாதிக்கப்படுகின்றன.

உள்ளூராட்சி சபைகள் கழிவுகளை இயற்கைப் பசளையாக மாற்றிப் பாவிப்பதற்குரிய விழிப்புணர்வைச் சரியான முறையில் முன்னெடுக்க வேண்டும். பாடசாலை மாணவர் மட்டத்திலிருந்தே மாற்றத்திற்கான விதைகளை விதைக்க வேண்டும். பாடத் திட்டத்தில் கட்டாய பாடமாகத் தரம் 5 வரையும் வைத்தால் அதன் பயனை நாடு விரைவில் அனுபவிக்கும். வீடுகளில் சேரும் கழிவுகளைத் தரமாகத் தரம் பிரித்து வைத்தால் மாத முடிவில் ஒரு தொகைப் பணம் தருவோமெனத் தனியார் வியாபாரம் தொடங்குவதை ஊக்குவிக்கலாம். வருடம் முழுவதும் மழை பொழியும் வற்றாத வளம் மிக்க எமது நாட்டை இரசாயன உரங்களற்ற நாடாக மாற்றி ஆரோக்கிய சமூகத்தை உருவாக்குவது நடை முறைக்குச் சாத்தியமான ஒன்றேயாகும். ■

எஸ்.சத்தியதேவன்

# உண்மையில் நூலகம் அமைதியாய் இருப்பதில்லை

உலகெங்குமே நூலகங்கள் அதன் புறத்தோற்றத்தில் அமைதியாகவே இருந்து கொண்டிருக்கிறன. அவற்றின் நோக்கம் மற்றும் இயங்குதல் என்பதற்கு அவசியமானதாக ஏற்படுத்தப்பட்ட நியதியாகவே அவ்வமைதி இருக்கிறது. இலங்கையின் தமிழ் பகுதிகளிலும் அவ்வமைதி இன்னும் செறிவு மிக்கதாக அடர்ந்து காணப்படுகிறது. ஆனால் சிறிய வேறுபாடு உலகளாவிய ரீதியில் நிலவும் நியதிக்கு மாறாக எமது தமிழ்ப் பிரதேசங்களில் ஏறக்குறைய வெறுமையாய் நூலகங்கள் அமைதியாக இருக்கின்றன.

வரலாற்றில் மிகவும் அறியப்பட்டதும் எழுதப்பட்டதுமான நூலகங்கள், மனிதகுலம் வெட்கும்படி அழிக்கப்பட்டு அதனின்று அவை மீளவும் உயிர்பெற்றதனால் நீடித்த பிரபல்யத்தை பெற்றுக்கொண்டவை என்பது வேதனையான விடயம். நூலகங்கள் அமைதியாக இருந்திருக்குமானால் ஏன் அவை வரலாறு நெடுகிலும் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக வல்லாதிக்க சக்திகளின் இலக்காகி அலெக்ஸ்ஸாண்டிரியா முதல் பாக்தாத், லெபனான், சிரியா வரை அழிக்கப்பட்டன.

உண்மையில் நூலகம் என்பதே ஒரு இயக்கம் தான். ஒரு சமூகத்தின் அறிவை, பண்பாட்டை, வரலாற்றுணர்வை உருவாக்கிப் பரவலடையச் செய்வதே இதன் இயங்குதலாக உள்ளது. மனித நாகரிகத்தின் செழுமைக்கும் வளர்ச்சிக்கும் நூலகத்தின் பங்கு அடிப்படையானதாக இருந்திருக்கிறது என்பது மிகையான கூற்றாக இருக்க முடியாது. அதனால்த்தான் வல்லாதிக்க சக்திகள், அதிகாரத்திற்குட்படுத்தும் ஆக்கிரமிக்கப்பட்ட சமூகத்தின் பண்பாட்டையும் அதன் உந்து சக்தியாக இருக்கும் வரலாற்றுணர்வையும் தக்க வைக்கும் இடமாகிய நூலகங்களை அழிப்பதையே நோக்கமாகக் கொள்கிறது. மறுதலையாக அதிகாரத்திற்கு பணிய மறுக்கும் சமூகம் தன் அறிவு மற்றும் பண்பாட்டின் பெருமை, அதன் தொடர்ச்சியான வளர்ச்சி ஆகியவற்றில் முக்கிய பங்களிக்கின்றதும் பெருமிதத்தின் அடையாளமாகவும் விளங்குகின்ற நூலகத்தை பேணுதலை செய்யவிழையும்.



இந்த நியதியிலிருந்து யாழ்ப்பாணப் பொது நூலகமும் விதிவிலக்குப் பெறவில்லை. ஒரு வித்தியாசம் ஏனைய இடங்களில் நூலகம் அதன்மீது படையெடுத்து வந்த ஆக்கிரமிப்பாளர்களால் அல்லது வல்லாதிக்க சக்திகளால் அழிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பொதுநூலகம் அதன் சொந்த நாட்டு அரசாங்க ஆதரவாளர்களால் 'கலாசாரப் படுகொலை'யாக அழிக்கப்பட்டது. பெருமிதம், பெருமை என்பதுடன் ஒரு சமூகத்தின் பண்பாடு மற்றும் செயற்பாட்டு அறிவுருவாக்கத்திலும் சமூக அசைவியக்கத்தின் உந்து சக்தியாக செயற்படும் அதன் தன்மையை அழிப்பதே அக்கொடுஞ் செயலின் நோக்கங்களாக இருந்திருக்க வேண்டும்.

நூலகம் என்றவுடன் எமக்கு உடனே ஞாபகம் வருவது விசாலமான கட்டிடமும் சேர்க்கையில் உள்ள பல்லாயிரம் புத்தகங்களின் தொகையும் தளபாடங்களும்தான். அவ்வாறு மட்டும் இருந்தால் அது நூல்களின் காட்சிகூடம். ஒரு நூற்காட்சிக்கூடத்தை நூலகமாக மாற்றுபவை எவை? அதைச் சுற்றியுள்ள சமூகமும் எல்லாவற்றையும் விட முக்கியமாக அந்நூலகத்தின் நூலகர்களும் தான் நூற்காட்சிகூடமா? நூலகமா? என்பதை தீர்மானிக்கிறார்கள். நாம் நூலகத்திற்கு செல்லும் போது மிகவும் அமைதியாக மேற்பார்வை செய்து கொண்டு இருப்பது அல்லது இரவல் வழங்கும் பகுதியில் நாம் இரவல் வாங்கும் புத்தகங்களை பதிவு செய்து கொடுப்பது மட்டுமே நூலகர் என்பது எமக்குள்ள புரிதல்.



அவ்வாறாயின் நூலகத்தை சுத்தம் செய்வது, நாம் கலைத்துவிட்டுப் போகும் புத்தகங்களை ஒழுங்குபடுத்தலை மேற்கொள்வது, நூல்களை நாம் கண்டு கொள்வதற்கு வசதியாக நூற்பகுப்பாக்கம் செய்வது, நூல்களின் பழுதுகளை திருத்தியமைத்து சீர்செய்வது, பாவனைக்குத் தகுதியற்றதாக மாறும் நூல்களை அகற்றி அவற்றின் புதிய பிரதிகளையும், புதிதாக வெளிவரும் நூல்களையும் கொள்வனவு செய்து, நூலகத்தின் உள்ளடக்கத்தை விரிவும் ஆழமும் செய்வது போன்ற பல்வேறு பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் செய்தபடி, நூலகம் அமைதியாக இருக்கும் போதும் நூலகப் பயனர்களினதும் ஏனையவர்களினதும் பொதுப்பார்வையில் புலப்படாதபடி நூலகர்களும் உதவியாளர்களும் பணியாளர்களும் நூலகத்தின் செயற்பாடுகளை தடையற்று நடாத்துவதற்காகத் தொடர்ச்சியாக செயலாற்றிக்கொண்டிருக்கின்றனர் என்பதை நாம் மறக்கக்கூடாது.

சொல்லப்போனால் ஒரு நூலகத்தின் சிறப்பான உருவாக்கம் செயற்பாடுகளும் அந் நூலகத்தின் நூலகர்களிலேயே தங்கி இருக்கிறது. யாழ்ப்பாண பொது நூலகமும் அதிலிருந்து விலக்களிக்கப்பட்டதல்ல. யாழ். பொதுநூலகம் எரிக்கப்பட்டு ஜூன் 01ஆம் திகதியன்று 40வது ஆண்டு நிறவைடைகிறது. யாழ்நூலகத்தின் சிறப்பு, பெருமை இந்த 40 ஆண்டுகளில் அதை அழித்தவர்களின் கயமை எண்ணம் மற்றும் பாதகச் செயல், அரச உடந்தை என பல்வேறு விடயங்களை நினைவுறுத்தி பல கட்டுரைகள் நினைவுப் பதிவுகள் எழுதப்பட்டுள்ளன, எழுதப்படப்போகின்றன. ஆயினும் நூலகம் சிறப்பாக செயற்படுவதற்காக பணியாற்றிய யாழ்ப்பாணப் பொது நூலக நூலகர்களை இப்பதிவுகளில் கவனத்திலெடுப்பதில்லை.

யாழ்ப்பாண பொது நூலகம் ஆரம்பிக்கப்பட்ட 1934 ஆம் ஆண்டிலிருந்து 1947 வரை நூலகராகப் பணியாற்றிய திரு.சி.எஸ்.இராசரத்தினம் அவர்களும் 1947 தொடக்கம் 1964 வரை நூலகராகவும் 1964 இலிருந்து 1970 வரை நூலக உதவியாளராகவும் பணியாற்றிய திரு.கந்தையா நாகரத்தினம் அவர்களின் சேவையும் குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதிகளில் ஒன்று அல்லது இரண்டு என்ற மிகக்குறைந்த உதவியாளர்களுடனும் மூதறிஞர் க.சி. குலரத்தினம் போன்ற சில தொண்டர்களின் உதவியோடும் திறம்படச் செயற்பட்டமை பிற்காலத்தில் யாழ்ப்பாண நூலகம் பெரும் புகழ் பெறுவதற்கு நல்ல தொடக்கநிலை அடிப்படைகளை அமைத்துக் கொடுத்தது.

1964 இல் இருந்து 1968 வரை முதலாவது தொழில் வாண்மை நூலகராக நியமனம் பெற்ற நூலகர் இ.வே.பாக்கியநாதன் அவர்களின் அர்ப்பணிப்பும் தொழில் வாண்மைதிறனும் மிக்க சேவையால் யாழ் பொதுநூலகம் தென்னாசியாவில் புகழ்பெற்ற நூலகங்களில் ஒன்றாக மாறியது. அனுபவம் மிக்க நூலக உதவியாளர்களான க.நாகரத்தினம் அவர்களும் ஆர்.சுப்ரமணியம் அவர்களும் நூலகருக்கு துணைநின்றார்கள். அவர் காலத்திலேயே சிறுவர் நூலகப்பிரிவு உட்பட நூலகத்தின் பல்வேறு சேவைகள் விரிவுபெற்று நவீன நூலகவியல் சிந்தனைகளைக் கொண்டமைந்த நூலகத்தை நோக்கிப் பயணித்தன.

திரு.இ.வே.பாக்கியநாதன் நூலகர் பணியிலிருந்து விலகிச்சென்றதும் திருமதி ரூபவதி நடராஜா அவர்கள் யாழ் பொது நூலகத்தின் நூலகராக நியமனம் பெற்றார். சர்வதேச தரம் வாய்ந்த நூலகநெறிமுறைகளோடு இயங்கும் நூலகத்தின் பயணத்தை தடையின்றிச் செல்ல திருமதி ரூபவதி நடராஜா அவர்கள் செயலாற்றினார்கள். இவர் நூலகராக இருந்த காலத்திலேயே 1981 ஜூன் 01 ஆம் திகதி வரலாற்றின் மிகவும் கீழ்தரமான செயல்களில் ஒன்றாகிய யாழ் நூலக எரிப்பை காடையர்கள் மேற்கொண்டார்கள். ஏறக்குறைய முற்றாக எரிந்த நூலகத்தை மீள் புனரமைக்கும் வேலையில் துரிதமாகவும் ஓர்மமாகவும் பணியாற்றியமை திருமதி ரூபவதி நடராஜா அவர்களின் பணிகளில் முக்கியமானது. எரிப்பு நடைபெற்ற சில தினங்களுக்குள்ளேயே வாசிகசாலைப் பகுதியை இயங்கச் செய்ததுடன் எரிந்த கட்டிடத்தினுள் சாம்பல் எச்சங்களுடன் மீளவும் நூலகப் பணியை தொடங்கினார்கள் என்பது குறிப்பிட வேண்டியது ஆகும்.

தொடர்ந்த யுத்த நெருக்கடியிலும் பொது நூலகத்திற்கு செல்வது ஆபத்தானதாக மாறிய பொழுதில் நூலக சேவைகள் தடைபெறக்கூடாது என்பதற்காக யாழ்நகரின் பல்வேறு இடங்களில் கிளை நூலகங்களை அமைத்து 'போர்க்கால நூலக சேவைகள்' என்ற புதிய இயங்குதலை சாத்தியப் படுத்தியமை அக்காலத்தை யாழ் பொது நூலக நூலகர்கள் மற்றும் பணியாளர்களின் சாதனைகளில் ஒன்று. 1989 இல் திருமதி ரூபவதி நடராஜா இளைப்பாறிச் சென்றார். 1989-1990 வரையான மிகவும் நெருக்கடியான காலத்திலும் நூலகத்தை ஒழுங்கமைக்க யாழ் மாநகர சபையின் வேண்டுகோளை ஏற்று ஒப்பந்த அடிப்படையில் நூலகர் இ.வே. பாக்கியநாதன் அவர்கள் கடமையாற்றினார் என்பதும் இங்கே அவசியம் குறிப்பிட வேண்டியது. அதன் பின் திருமதி மங்கையர்க் கரசி நித்தியரட்ணமும் தொடர்ந்து செல்வி சுலோசனா ரகுநாதன் அவர்களும் நூலகர்களாகப் பொறுப்பேற்று கடமையாற்றினார்கள். தொடர்ந்த யுத்த நெருக்கடிகள் பலரை யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற்றியது. அதில் நூலகர்களும் தவிர்க்க படவில்லை.

"உண்மையில் நூலகம் என்பதே ஒரு இயக்கம்தான். ஒரு சமூகத்தின் அறிவை, பண்பாட்டை, வரலாற்றுணர்வை உருவாக்கிப் பரவலடையச் செய்வதே இதன் இயங்குதலாக உள்ளது. மனித நாகரிகத்தின் செழுமைக்கும் வளர்ச்சிக்கும் நூலகத்தின் பங்கு அடிப்படையானதாக இருந்திருக்கிறது என்பது மிகையான கூற்றாக இருக்க முடியாது."

1990 இல் யாழ்ப்பாண பொது நூலக நூலகராக திரு.ச.தனபாலசிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அன்றிலிருந்து கொடியதும் மிகத் தீவிரங்கொண்டதுமான யுத்த காலம் முழுவதும் நூலகராக அவரது சேவை மிகுந்த நன்றிக்குரியது. பாரிய இடப்பெயர்வு உட்பட்ட மிகப்பெரிய அவலங்களிலிருந்து மீண்டு நூலகத்தை மீளவும் நிலைப்படுத்தி அதன் இயங்குதலை சீரமைத்ததில் அவருக்கும் அவரது பணிக்குழாமிற்கும் பெரும் பங்குண்டு. போர்க்கால நூலக இயங்குதல் என்ற விடயத்தை அவர்கள் முன்மாதிரிகளின்றி பல்வேறு அரசியல் யுத்த நெருக்கடிகளுக்குள் செயற்படுத்தினார்கள் என்பது மிகவும் விதந்து குறிப்பிடவேண்டியது.

எம் சமூகத்தின் அறிவு, பண்பாடு, வரலாற்றுணர்வு ஆகியவற்றின் செயற்பாட்டு அறிவுருவாக்கத்திலும் அதனிடையான சமூக அசைவியக்கத்திலும் நூலகத்தின் பங்கு பெரும் முக்கியத்துவமுடையது. நூலகத்தின் இயங்குதல் மற்றும் சேவைகளில் நூலகரின் பங்கு மிக முக்கியமானது என்பதை உணர்ந்து செயற்படுவோம். ■

# இலாபக் கணக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதனையே வெளிப்படையாகப் பறைசாற்றுகின்றது. ஒரு நாட்டின் ஆளும் அரசின், அதிகார எல்லைக்குள் அந்நாட்டின் நகரமொன்று இல்லாதிருக்கின்ற விசித்தரம் நிறைந்த ஆட்சி இலங்கையில் நடைபெறுவதனையே வெளிப்படுத்துகிறது. அவ்வாறு அதிகாரத்துக்குட்படுத்த முடியாத நகரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் என்ன? வெறுமனே பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் நடவடிக்கை என்று ஒற்றைப்படையாக சொல்லி அரசு தப்பித்துச் செல்ல முடியாது. அதன் சாதக பாதகங்களைச் சரியான வகையில் கணக்கிடுதல் வேண்டும். கடந்த நூற்றாண்டுகளில் வியாபாரம் செய்ய வந்தவர்களால் இலங்கை எவ்வாறு ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது என்பதன் வரலாற்று அனுபவத்தை கவனத்தில் எடுக்கவேண்டும். பொருட்களை களஞ்சியப் படுத்தவென கடற்கரையோரத்தில் சிறு இடம் கேட்டவர்கள் நாட்டின் முழுப் பகுதியையும் எவ்வாறு தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார்கள் என்பதனை மீள ஒரு தடைவை நினைவில் கொண்டு வருதல் வேண்டும். வியாபாரிகள் எப்போதும் தமது நலன் சார்ந்தே சிந்திப்பார்கள். நுகர்வோரின், தம்மைச் சுற்றியுள்ளோரின் நலன் தொடர்பில் சிந்திப்பவர்கள் போலவே தங்களை வெளிப்படுத்திக் கொள்வார்கள் ஆனால் அதில் சிறுதுளி உண்மையும் இருக்காது என்பது கடந்தநூற்றாண்டுகளின் வழிபெற்ற அனுபவமாகும்.

சீனா மிகப்பெரிய இலாபக் கணக்கினை முன்வைத்தே தனது அண்மைக்கால நடவடிக்கைகளை இலங்கையில் தந்திரமாக மேற்கொண்டு வருகிறது. இலங்கையில் இருக்கக் கூடிய ஏனைய இனங்களைப் பின்னுக்குத் தள்ளி பெரும்பான்பை இனத்தோடு தன்னை இணைத்துக் கொள்ளும் மறைமுகமான செயற்பாடுகளில் ஒன்றே சீன எழுத்துக்கள் பொறித்த பெயர் பலகைகளின் பிரவேசம்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷே தரப்பு சீனாவினூடாக இலங்கைப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முனைவதாகவும் அதன் இலாபகரமான செயற்பாடே சீனாவுடனான தாம் மேற் கொள்ளும் நல்லிணக்க உறவும் என்ற தோரணையை உருவாக்க முனைகின்றனர். ஆனால் கடந்த ஆட்சிக்காலத்தின் போதும் தற்போதைய ஆட்சிக்கால்தின் போதும் சீனாவிடம் தாம் பெற்ற கடனை திருப்பிக்கொடுக்க முடியாமல் இப்படி நாட்டை தாரைவார்தது்க் கொடுக்கின்றனர் என்ற பேச்சும் மக்கள் மத்தியில் இருக்கின்றது.

சீனா இலங்கையின் பொருளாதார நிலமையை சரியாகப் பயன்படுத்தி தனது ஆதிக்கத்தை நிலைகொள்ள வைப்பதில் தீவிரம் காட்டி வருகிறது. இதில் இலங்கையில் இருக்கக் கூடிய ஏனைய இனங்களைப் பின்தள்ளி பெரும்பான்மை இனத்துடன் தன்னை இணைத்துக்கொள்வதிலும் தீவிரம் காட்டுகின்றது என்பதும் வெளிப்படையானது. இதனையே தமிழ் எழுத்துக்களைப் புறக்கணித்து சீன எழுத்துக்கள் பொறித் பெயர் பலகைகளின் பிரவேசம் வெளிப்படுத்துகிறது.

இது சீனாவின் முன்னோட்டமாகும். இந்த முன்னோட்டம் என்ன விளைவைத் தரப்போகிறது என்பதனை வைத்து சீனா தனது அடுத்த கட்ட நகர்வை முன்வைக்கும். ஒவ்வொரு விளைவுகளும் சீனாவை ஒவ்வொரு விதமாகச் சிந்திக்க வைக்கும். எப்படியும் இலங்கையில் நிலைகொள்வது என்பது சீனாவின் திடமான முடிவு. அதற்கு தகுந்தாற்போல் தனது நகர்வுகளை மெது மெதுவாக முன்வைக்கும்.

இப்போது நாங்கள் சமூக வலைத்தளங்களில் மிகச் சாதாரணமாக சீனர்கள் சிங்களமொழி மற்றும் தமிழ் மொழிகளில் கதைப்பதனையும் பாடுவதனையும் அவதானிக்க முடிகிறது. ஒரு மொழியினை இன்னொருவர் கற்கவோ, பேசவோ முடியாது என்பது இங்கு கட்டுரையாளர் சொல்ல வரும் கருத்தல்ல. இத்தகைய செயற்பாடுகளில் ஏதேனும் நீண்டகால நோக்கு இருக்கின்றதா? என்பதுதான் இங்கு முன்வைக்கப்படும் கேள்வி. தமிழ் மொழியைப் புறக்கணித்து சீன மொழியைப் பெயர்ப் பலகையில் பதித்தமை தவறுதலாக நிகழ்ந்த ஒன்றாக இருக்க முடியாது. ஒரு நாட்டின் அரச மொழிகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பதற்கு நியாயம் சொல்லிவிடவும் முடியாது. ஏதோ ஒரு வகையில் யாரோ ஒரு சூத்திரதாரி யின் பங்கு இதில் உண்டு.

அரசு எப்போதும் தமிழர்களின் நலனிலும் அவர்களின் உரிமையிலும் ஏன் மொழியிலும் கூட அக்கறை கொண்டு செயற்பட்டது கிடையாது. அவர்கள் தமிழர்களை இரண்டாம் நிலை மக்களாகக் கூடக் கருதியது கிடையாது. இது சீனர்களுக்கு பெரும் வாய்பானது. காலப்போக்கில் சீனர்கள் இலங்கையில் நிலைகொண்டு இரண்டாம் நிலை தரப்பினர்களாக உருவெடுத்து பின் முதலாம் நிலைத்தரப்பாக மாற்றம் கொண்டாலும் ஆச்சிரியப் படுவதற்கு இல்லை. இன்றைய உலகப்போக்கில் உலக வல்லாதிக்க அரசுகள் மிக சூசகமாக ஏனைய நாடுகள் மீது நிலைப் படுத்தும் அதிகாரம் இத்தகைய தன்மை வாய்ந்ததே. அதேபோல் நீண்டகால நோக்குக்குமுடையதே. இவ்வாறே சீனாவும் இலங்கையைக் கையாளத் தொடங்கியிருக்கிறதோ? என்ற சந்தேகமே இலங்கை மக்கள் ஒவ்வொருவரிடமும் விரவிக் காணப்படுகிறது. ஆனால் அரசு மக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்த்து தனது செயற்பாட்டினைச் செய்கின்றதா? என்றால் அதுவும் இல்லை, இதில் சிங்களத் தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டிய விடம் ஒன்று உண்டு. இன்று தமிழ் இனம் தனது உரிமைக்காக போராடவேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகியிருப்பது போன்று எதிர்காலத்தில் சிங்களத் தரப்பு தமது உரிமையினை வேண்டி சீன அரசுடன் போராட வேண்டிய சூழலுக்கு உள்ளாகலாம் என்பதே அது. அப்போது தமிழர்களின் உதவி சிங்களத் தரப்புக்குத் தேவைப் படலாம்.

“பஞ்சத்துக்கு அடகுவைக் கப்பபோய் மீட்கமுடியாமல் அறுதியாகிப்போய் விட்டதே” என்று ஏழையொருவர் புலம்புவது காதில் கேட்கிறது.

■

# கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புள்ளிவிபரப்படி தொற்றாளர்கள் 2 கோடியே 75 இலட்சமும் சாவுகள் 3 லட்சத்து 16 ஆயிரம் என்றும் தெரிகிறது. ஆயினும் இந்த எண்ணிக்கை உத்தியோகபூர்வ எண்ணிக்கையிலும் மூன்று மடங்காக இருக்கும் என்றே உலக சுகாதார ஸ்தாபன நிபுணர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்தியாவில் கொவிட் -19 தொற்றாளர்கள் பராமரிப்பு, தடுப்பூசி வழங்கல் ஆகிய இரண்டும் கேள்விக்குள்ளாக்கியுள்ளன. இந்தியா ஆட்சி பீடத்தினதும் இந்திய மக்களின் பிற்போக்குத்தனமான விஞ்ஞானபூர்வமற்ற ஆட்சியும் வாழ்க்கை முறையும் இந்தியாவை அதல பாதாளத்திற்குள் தள்ளிவிட்டுள்ளது.

ஆசியாக்கண்டத்தில் தென்னாசியாவிலுள்ள ஏனைய முக்கிய நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை முதலிய நாடுகளின் நிலைமையும் மோசமடைந்தே வருகின்றன. இந் நாடுகளில் கொரோனாத் தொற்றாளர்களை இனங்காணுதல், பாராமரிப்பு, சிகிச்சை முதலியவையும் தடுப்பூசி முகாமைத்துவமும் எதிர் பார்த்த திசையில் செல்லவில்லை.

ஆசியாவில் கிழக்காசிய நாடுகளான ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும் நிலைமை மோசமடைகிறது.

வட அமெரிக்காவில் ஐக்கிய அமெரிக்க நாடு (USA), கனடா ஆகியவற்றில் வாழும் 38 கோடி மக்களில் 50% ஆனவர்கள் தடுப்பூசி பெறும் நிலை வந்துள்ளது. ஆயினும் தொற்றுக்களும் சாவுகளும் தொடர்கிறது.

மேற்கு ஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா ஆகியன உள்ளடங்கும் 75 கோடி மக்களில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கொரோனா பெருந்தொற்று தொடர்பான அணுகு முறைகளில் பல நாடுகளில் மோசமான நிலைமைகளும் சில நாடுகளில் முன்னேற்றகரமான நிலைகளும் உள்ளன. ரஷ்யாவின் நிலைமை மருத்துவத்திலும் தடுப்பூசி வழங்குவதிலும் தமது சுய உற்பத்திகளைப் பயன்படுத்துகின்றனர். எனினும் தொற்று அங்கு கட்டுப்பாட்டில் இல்லை. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டன் தனது சொந்தத் தயாரிப்பான அஸ்ராசெனக்கா தடுப்பூசியை பிரிட்டிஸ் மக்களுக்கு வெற்றிகரமாக வழங்கி வருகிறது. அதனால் தொற்றுக்களையும் சாவுகளையும் வெற்றிகரமாகத் தடுக்கத் தொடங்கியுள்ளதாக அந் நாட்டின் சுகாதாரத்துறை கூறுகிறது.

இத்தகைய உலகப் பெருந்தொற்றுப் பின்புலத்தில் இலங்கையின் நிலைமையும் மகிழ்ச்சி தரத்தக்கதாக இல்லை. 27.05.2021 (வியாழன்) உத்தியோகபூர்வ தகவல்களின் படி தொற்றாளர் எண்ணிக்கை 172,277 என்றும் சாவுகள் 1298 க்கு அதிகமெனவும் கூறப்படுகிறது. ஆனால் உலக சுகாதார அமைப்பின் கருத்துப்படியும் இலங்கையின் உள்ளூர் மருத்துவ அமைப்புக்கள், நிபுணர்கள் மற்றும் அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே ஆகியோரின் கருத்துக்களின் படியும் உத்தியோகபூர்வமான புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையிலும் மூன்று மடங்கான தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கலாம்.

இலங்கையின் 2020 ஒக்ரோபர் மாதத்திலிருந்து இன்று வரை தொற்றுகளும், சாவுகளும் வேகமாக அதிகரிக்கத் தொடங்கின. தினசரி சராசரியாக 3000 தொற்றாளர்களும் 30 சாவுகளும் பதிவாகும் நிலை கடந்த இரு வாரங்களாகத் தோன்றியுள்ளது.

இந் நிலையிலே 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இலங்கையின் சனத்தொகையான 2 கோடியே 10 லட்சம் மக்களில் 60% தொடக்கம் 70% ஆன மக்களுக்கு தடுப்பூசிகளைச் செலுத்தி மக்களுக்கு நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கலாம் எனும் திட்டம் இலங்கை அரசாங்கத்திடம் உள்ளது. இதற்காக சினோபாம் தடுப்பூசிகள் 140 இலட்சத்தை ஒன்று 15 டொலர் விலையில் 210 மில்லியன் டொலர் செலுத்தியும் ஸ்புட்னிக்லி தடுப்பூசிகள் 130 இலட்சத்தை ஒன்று கிட்டத்தட்ட 10 டொலர் விலையில் 129.5 மில்லியன் டொலரைச் செலுத்தியும் பைசர் தடுப்பூசிகள் 50 இலட்சத்தை ஒன்று கிட்டத்தட்ட 7 டொலர் விலையில் 33.75 மில்லியன் டொலர்கள் செலுத்தியும் உலகச் சந்தையில் இலங்கை கொள்வனவு செய்கிறது. அதாவது 320 இலட்சம் தடுப்பூசிகள் 373.1 மில்லியன் டொலர் செலவில் இலங்கை சுகாதார அமைச்சால் கொள்வனவு செய்யப்படுகின்றன. இச் செலவில் 80 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டும் உலக வங்கியால் உதவியாக வழங்கப்படுகிறது. மிகுதி 293 மில்லியன் டொலர்கள் இலங்கையால் சுமக்கப்படும் நிலையே உள்ளது. இதுவரையில் ஏற்கனவே கிடைக்கப் பெற்ற அஸ்ராசெனக்கா உட்பட சினோபாம் தடுப்பூசிகள் 14இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு மே 24ம் திகதி வரை இலங்கையில் வழங்கப்பட்டது. அதில் 333000 பேர் இரண்டாவது “டோஸ்” பெற்றுள்ளார்கள். ஏனையவர்களுக்கு இன்னும் இரண்டாவது “டோஸ்” வழங்கப்படவில்லை.

உலகப் பொருளாதாரம் ஈடாடிப்போயுள்ளது. உலக நாடுகள் மேலும் மேலும் பெருந்தொற்றினால் வர்த்தக ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கத் தரப்பு எதிர்பார்க்கும் அட்டவணையின் படி தடுப்பூசிகள் வந்து சேர்வதில் உலகில் தடுப்பூசிகளுக்கு நிலவும் அதிகரித்த பிரமாண்டமான கேள்வி தடையாக உள்ளது.

ஏற்கனவே இந்தியாவிடமிருந்து பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த அஸ்ரா செனக்கா தடுப்பூசி, இந்தியாவின் தேவையின் நிமித்தமாக இந்திய அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டதால் இலங்கையின் முதலாவது டோஸ் அஸ்ரா செனக்கா பெற்றவர்களில் பெருமளவானோர் இன்னமும் அதன் இரண்டாவது டோஸ் பெறமுடியாத நிலை உள்ளனர்.

இவ்வாறான உலக உள்ளூர்க் கள நிலவரங்களில் இலங்கையின் அரசியல்- சமூக- பொருளாதாரச் சூழல் பின்வரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது.

I. தொற்று வேகமாகப் பரவி வருவது இடைவிட்டு இடைவிட்டு அமுலாக்கப்படும் ‘லொக்டவுன்’ முறைமை விஞ்ஞான பூர்வமற்றது எனவும் அது தொற்றுப் பரவலை அதிகரிக்கவே வழி செய்யும் எனவும் மருத்துவ நிபுணர்களின் தொழில்வாண்மையாளர் சங்கங்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை பெருமளவான சனத்தொகைக்கு தொற்று ஏற்பட்டால், தொற்றுக்குள்ளானவர்களை PCR பரிசோதனைகள் மூலம் அடையாளங்கண்டு, அவர்களைச் சிகிச்சைக்கு அனுப்பிய பின்னர், தொற்று இல்லாதவர்களுக்கே தடுப்பூசி வழங்கமுடியும். தொற்று உள்ளவர்களுக்கு, தொற்று குணமாகி குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குப் பின்னரே தடுப்பூசிகளை வழங்கமுடியும் என மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

II.விஞ்ஞான பூர்வமான ‘லொக்டவுன்’ அமுலாகாத அதே நேரத்தில் தடுப்பூசிகளின் இறக்குமதிகளும் தாமதமானால் தொற்று நிலையிலுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் தடுப்பூசி முகாமைத்துவம் ஒரு நெருக்கடியைச் சந்திக்கும்.

III.ஒரு இறுக்கமான, விஞ்ஞான பூர்வமான ‘லொக்டவுன்’ என்பது இன்னும் இன்னும் தாமதிக்கும் பட்சத்தில் குடும்பம் குடும்பமாக இலட்சக் கணக்கில் தொற்றாளர்கள் அதிகரிக்க வழிகோலும். இது நாட்டின் உற்பத்தி, சேவைத்துறைகளையும், விநியோக, வர்த்தகச் சங்கிலிகளையும் முடக்கும்.

IV.இந்த முடக்கம் விவசாயம், மீன்பிடி, சுத்திகரிப்பு முதலியவற்றுடன் தொடர்பான தொழிலாளர்களையும் மருத்துவ- சுகாதாரத்துறை ஆளணிகளையும் முடக்கும் போது நிலைமை மேலும் சிக்கலடையும்.

V.நாட்டினுடைய பொருளாதாரம் தங்கியிருந்த மூன்று பிரதான துறைகளான தைக்கப்பட்ட ஆடைகளை உற்பத்தி செய்யும் ஆடைத்தொழிற்சாலைகள், உல்லாசப் பிரயாணத்துறை, மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்பு ஆகியன ஏற்கனவே பெருந்தொற்று நிலவரங்களால் பகுதியளவிலும் முழுமையாகவும் பாதிக்கப்பட்டுள்ளன. நாட்டிற்கு அந்நியச் செலாவணிப்பற்றாக் குறை பெரிய அளவில் ஏற்பட்டுள்ளது.

VI.தொழில்வாண்மையாளர் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் முதலியன தம்மையும் தமது குடும்பங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக தமக்குத் தடுப்பூசிகளை விரைவில் வழங்க வேண்டும் எனும் கோரிக்கையை காரசாரமாக முன்வைத்துள்ளன. இவ்வமைப்புக்களும் தொழிற்சங்கங்களும் தமக்கிடையே குற்றச்சாட்டுகளை அடுக்கியுள்ளன.

VII.விஞ்ஞான பூர்வமான லொக்டவுன், சுகாதார வழி முறைகளை மக்கள் இறுக்கமாகக் கடைபிடித்தல் முதலியன தடுப்பூசி முகாமைத்துவம் வெற்றியளிக்க மிகவும் அவசியமானவை. தடுப்பூசிகளை மக்கள் பெறும் போதும் பெற்றுக் கொண்ட பின்னரும் சில ஆண்டுகளுக்கு கட்டுப்பாடுகளும், இறுக்கங்களும், சுகாதார வழி முறைகளும் அவசியமானவை. உலகம் பெருந்தொற்றிலிருந்து மீளும் வரை இலங்கைக்கும் இவை அவசியமானவை.

மேலே கூறப்பட்ட ஏழு விடயங்களிலும் இலங்கை அரசாங்கம் தனது கவனக் குவிப்பை உடனடியாகச் செய்ய வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. அவற்றில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வதில்தான் இலங்கையின் அரசியல் - பொருளாதார ஸ்திரப்பாடு, அமைதி, இலங்கை மக்களின் நல்வாழ்வு ஆகியன முற்றிலும் தங்கியுள்ளன.

■

சி.விமலன்

# வரமா? சாபமா?



**1930** ஆம் ஆண்டில் இருந்து ஆண்களுக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளும் 1991 ஆம் ஆண்டில் இருந்து பெண்க ளுக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளும் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற பிபாவின் (FIFA) வருடாந்த மாநாட்டில் உலகக் கிண்ணப் போட்டிகளை இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடத்துவது தொடர்பான முன்மொழிவை சவுதி அரேபியா செய்திருந்தது. 209 உறுப்பு நாடுகளைக் கொண்ட பிபாவில் 166 நாடுகள் ஆதரவாகவும் 22 நாடுகள் எதிராகவும் வாக்களித்திருந்தன. உலகளாவிய உதைபந்தாட்டக்கட்டமைப்பில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் இந்த முடிவு பல் வேறு வாதப்பிரதிவாதங்களைத் தற்போது தோற்றுவித்துள்ளது.

இதற்கு முன்னதாக 1999 ஆம் ஆண்டு அன்றைய பிபாவின் தலைவராக விளங்கிய செப் பிளேட்டரும் இது குறித்து தேசிய அணிகளின் உதைபந்தாட்டத் தரத்தை மேம்படுத்துவதற்கு இது அவசியம். ஓர் உலகக் கிண்ணத்தை நடத்திய பின்னர் அந்தக் கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் மீண்டும் போட்டிகளை நடத்துவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டி இருக்கின்றது என்று குறிப்பிட்டிருந்தார். உதைபந்தாட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஐரோப்பிய நாடுகளுக்கு அப்பால் உதைபந்தாட்டப் போட்டிகளை பரவல் அடையச் செய்வது அவசியமானதே. உதாரணமாக பிபாவில் 54 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஆபிரிக்க கண்டத்தில் 5 நாடுகள் மாத்திரம் தகுதி பெறுவது ஆரோக்கியமான ஒன்றல்ல. அந்தவகையில் இந்த முடிவு வர வேற்பிற்குரியதே.



உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான இடைவெளி நான்கு ஆண்டுகளாக இருப்பதும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகக் கிண்ணத்தை நடத்தக் காரணம் எனலாம். ஆனாலும்



அவ்வாறு நடைபெற்றால் அதன் மீதான எதிர்பார்ப்பு குறைந்து விடும் என்ற கவலையும் உள்ளது. சரியோ, பிழையோ நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பதனால் தான் அதன் மதிப்பு இன்றுவரை குறையவில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை.

அதேவேளை ஐரோப்பிய கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டிகள் வருடந்தோறும் நடைபெற்றாலும் அதன் மதிப்பு மற்றும் முக்கியத்துவம் காரணமாக ரசிகர்கள் அதற்குச் சிறந்த வரவேற்பை அளித்து வருகின்றார்கள். எனவே அது போல இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை உலகக் கிண்ணத்தை நடத்தினாலும் அதற்குரிய வரவேற்பு இருக்கும் என்று கருதப்படுகிறது. அதே சமயம் எதிர் காலத்தில் உலகக் கிண்ணப் போட்டிகளில் தற்போது பங்குபற்றி வரும் 32 நாடுகளுக்குப் பதிலாக 48 நாடுகளைப் பங்குபெற வைக்கும் திட்டத்தையும் பிபா நடைமுறைப்படுத்த உள்ளதால் இது அவசியம் தானா என்ற கேள்வியும் எழுகின்றது.

யூரோ கிண்ணப் போட்டிகள், நேஷன்ஸ் லீக் போட்டிகள், கோபா அமெரிக்க கிண்ணப் போட்டிகள், ஆபிரிக்கக் கிண்ணப் போட்டிகள், ஆசியக் கிண்ணப் போட்டிகள் என்று கண்டங்கள் தோறும் நடத்தப்படும் உதைபந்தாட்டத் தொடர்கள், உலகக் கிண்ணப் போட்டிகளைப் பாதிக்காத வண்ணமே தமது போட்டி அட்டவணைகளைத் தயாரித்து வருகின்றன.

எனவே இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை உலகக் கிண்ணத்தை நடத்தும் போது ஒட்டுமொத்த உதைபந்தாட்டத் தொடர்களும் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புண்டு.

அது மட்டுமல்லாமல் கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் போட்டிகளிலும் இது தாக்கத்தைச் செலுத்தும். ஏனென்றால் சம்பந்தப்பட்ட கழகங்கள் வீரர்களை விடுவிப்பதில் சிக்கல்களை ஏற்படுத்துவதோடு வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் அத்தொடர்களில் காலதாமதத்தை ஏற்படுத்தவும் செய்யும். அப்படி உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்றால் அதிகளவிலான தகுதி-காண் போட்டிகளில் ஒவ்வொரு அணியும் பங்குபற்ற வேண்டிய நிலை ஏற்படும். இது வீரர்களின் காயங்களின் அபாயத்தை அதிகரிக்கலாம். பிபா தனது வணிக ரீதியான நலன்களுக்காக வீரர்களைப் பலிக்கடா ஆக்குகின்றதா என்ற சந்தேகத்தையும் இது ஏற்படுத்து கின்றது. எனவே இது குறித்த தனது முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய கடப்பாடு பிபா விற்கு உண்டு. ■

# முடிவுக்கு வருகிறதா?

**ஆ**டவர் ஒற்றையர் பிரிவு ரென்னிஸ் உலகில் தற்போது BIG THREE வீரர்களாக விளங்குபவர்கள் றோஜர் பெடரர், ரபெல் நடால், நோவாக் ஜோகோவிச். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளைப் பொறுத்த வரை கடந்த ஒரு தசாப்த காலமாக இம்மூவருமே ஆடவர் ஒற்றையர் பிரிவு ரென்னிஸ் போட்டிகளில் மாறி மாறி கிண்ணங்களைக் கைப்பற்றி வந்துள்ளார்கள். இவர்களில் றோஜர் பெடரர் இறுதியாக 2018 அவுஸ்ரேலியன் ஓப்பன் தொடரில் சம்பியன் பட்டம் வென்றிருந்தார். தொடர் காயங்களால் அவதிப்பட்டு வரும் அவர் இந்த மாதமே தனது மீள்வருகையை நிகழ்த்தி இருந்தார். 39 வயதுடைய றோஜர் பெடரரும் 34 வயதுடைய ரபெல் நடாலும் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் 33 வயதுடைய நோவாக் ஜோகோவிச் 18 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் கைப்பற்றி உள்ளதன் மூலம் இதனைப் புரிந்து கொள்ளலாம்.







இந்த நிலையில் கடந்த வருடம் நடைபெற்ற ஏ.ரி.பி பைனல் மற்றும் பாரிஸ் மாஸ்ரர்ஸ் தொடர்களில் ரஷ்யாவின் 25 வயது டனில் மெட்வெதேவ் கிண்ணம் வென்றதோடு தரவரிசையில் இரண்டாமிடத்திற்கு முன்னேறி நடாலை மூன்றாமிடத்திற்கு பின்தள்ளி இருந்தார். இந்தாண்டு நடைபெற்ற மூன்று மாஸ்ரர்ஸ் தொடர்களிலும் 24 வயதுடைய போலந்தின் ஹூபேர்ட் ஹூர்கஸ், 22 வயதான கிரேக்கத்தின் ஸ்ரெபனோஸ் சிற்சிபாஸ், 24 வயதுடைய ஜேர் மனியின் அலெக்சாண்டர் சுவரொவ் ஆகி-யோரே கிண்ணம் வென்றிருந்தார்கள்.





அந்தவகையில் நடைபெற்று முடிந்த 4 ஏ.ரி.பி மாஸ்ரர்ஸ் தொடர்களிலும் BIG THREE வீரர்களில் ஒருவரால் கூட கிண்ணத்தைக் கைப்பற்ற முடியவில்லை. இதனால் மூவரது ஆதிக்கமும் முடிவுக்கு வந்துவிட்டதா என்ற ஊடகம் ஒன்றின் கேள்விக்கு ஜோகோவிச் கடந்தவாரம் பதில் அளித்துள்ளார்.

சமீபத்தில் ஜோஜர் பெடரர்கூட அவருக்கும் எனக்கும் வயதாகி விட்டது என்ற சாரப்பட கருத்தொன்றைத் தெரிவித்திருந்தார். ஆனால் எனக்கு அதில் உடன்பாடு இல்லை. நாங்கள் வேறுபட்ட புதிய ஆற்றலை வெளிக்காட்டுகிறோம் என நினைக்கிறேன். நடைபெற்று முடிந்த றோம் மாஸ்ரர்ஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய நானும் நடாலும் இது குறித்து நமக்குள் சிரித்துக் கொண்டோம். இளையவர்களுடனான போட்டியில் நான் பின்வாங்கவில்லை என்பதைக் காண்பிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் என ஜோகோவிச் தெரிவித்துள்ளார். ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள நீடா குழுமத்தினரால் 29.05.2021 அன்று வெளியிடப்பட்டது,